உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

முருகேசர்முதுநெறிவெண்பா.

திருக்கைலாசபரம்பரைப்

பொம்மபுரம்

ஸ்ரீ-சிவஞானபாலையதேசிகராதீனத்துச்

சிதம்பரம்-ஈசானியமடம்

இராமலிங்கசுவாமிகள்

அருளிச்செய்தது.

இஃது,

ஷை சுவாமிகள் மாணாக்கர்களில் ஒருவரும்

சிதம்பரம்சைவப்பிரகாசவித்தியாசாலை

உபாத்தியாயருமாகிய

சோ-குமாரவீரையர்

இயற்றியவுரையோடு,

பாளையம்

சோமசுந்தரசெட்டியாரால்,

சென்னை:

மிமோரியல்அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

நந்தன௵ வைகாசிமீ.

சிவமயம்.

காயாறு

ஞானசுந்தரஐயரவர்கள்

இயற்றிய

சிறப்புப்பாயிரம்.

திருக்கயி லாய பரம்பரைப் பொம்ம புரச்சிவ ஞானதே சிகன்றன், மருக்கமழ் கமல மலர்ப்பதம் பரவி வண்கலை யுணர்வின்முக் குறும்பை, முருக்கிய விராம விங்கநன் முனிவன் முதுநெறி தொகுத்துணர்ந் தெவ்ரு, மொருக்கிய முருகே சன்முது நெறிவெண் பாவென வுரைத்தன னுவந்தே.

ஒருக்கிய-வினையெச்சம்; ஒருக்குதல்-ஒருமைப்படல்.

சிவசண்முகன்றுணை.

இந்நூலுள்அமைக்கப்படும்

சரித்திரபுராணங்கள்.

கந்தபுராணம்.
பெரியபுராணம்.
உபதேசகாண்டம்.
மச்சபுராணம்.
காஞ்சிப்புராணம்.
திருக்கழுக்குன்றப்புராணம்.
திருவிளையாடற்புராணம்.
திருவள்ளுவநாயனர்சரித்திரம்.
இலிங்கபுராணம்.
பாரதம்.
சூதசங்கிதை.
விருத்தாசலபுராணம்.
பசவபுராணம்.
சேதுபுராணம்.
கூர்மபுராணம்.
காசிகாண்டம்.
திருவாதவூரர்புராணம்.
பாகவதம்.
செவ்வந்திப்புராணம்.
திருக்கூவப்புராணம்.
ஆனந்தகணேசபுராணம்.
கோயிற்புராணம்.
இராமாயணம்.
பிரபுலிங்கலீலை.
விஷ்ணுபுராணம்.
வாயுசங்கிதை.
திருத்தணிகைப்புராணம்.
சீர்காழிப்புராணம்.
சீகாளத்திப்புராணம்.
பிரமோத்தரகாண்டம்.
சீவகசிந்தாமணி.
திருவாவடுதுறைப்புராணம்.
விநாயகபுராணம்.
இரகுவம்சம்.
திருநெல்வேலிப்புராணம்.
திருவெண்காட்டுப்புராணம்.
சேக்கிழார்நாயனர்புராணம்.
திருவதிகைப்புராணம்.
திருவானைக்காப்புராணம்.
பூவாளூர்ப்புராணம்.
திருவாப்பனூர்ப்புராணம்.
மார்க்கண்டேயபுராணம்.
அரிச்சந்திரபுராணம்.
சிவரகசியம்.
நைடதம்.
மாயூரப்புராணம்.

ஆகபுராணம்-சுசு.

இவற்றுள், எடுத்துக்கொண்டசரித்திரம் விளங்கத்தக்கபெய ரோடுகூடிய பாடலமுதலியவற்றைக்குறியாமலும், நல்லாப்பிள்ளை பாடலோடுகூடியபாரதம் விரிவாகஇருத்தலால், அதன்படி குறிக் வேண்டியசருக்கங்களைக் குறித்தும் அச்சிடப்பட்டிருக்கின்றன.

பரிசோதனபத்திரம்.

—:O:—

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
கூ	ரு	யாயத்து ...	யாயத்தும்
கஎ	உஎ	தமையனையையும் ...	தமயனையும்
உங	ங	தாட்டி ...	தாட்டியும்
உஎ	கக	உள ...	ஊள
ஙO	சு	தொன்றி ...	தோன்றி
ருச	கரு	செவ்வமும் ...	செல்வமும்
சுஉ	ங	தீலிபமன்னவன் ...	திலீபமன்னவன்
சுச	கூ	O ...	(இ-ள்.)
சுஎ	எ	உளட்டி ...	ஊட்டி
,,	உரு	கிரந்தமொன்றியற்றி ...	கிரந்தமியற்றி
கூக	ச	சீதையுமிழந்து ...	சீதையையுமிழந்து
,,	கO	படும். ...	படும்
,,	கங	உயர்சிறப்பு ...	உயர்வுசிறப்பு
கOரு	கச	உறத்தி ...	உறுதி
கOசு	உ	இதுபற் ...	இதுபற்றி
கக அ	ரு	யவனல்லை ...	யவனல்லன்.
,,	கக	நனவி ...	நன

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

முருகேசர்முதுநெறிவெண்பா.

மூலமும் உரையும்.

காப்பு.

—:o:—

திநெறியர் நெஞ்சிற் கதிர்க்குமுரு கேசர்
முதுநெறிவெண் பாவை மொழியப்—பதிநடம்வேட்
டற்பகத்தர் மல்குதில்லை யம்பலமேல் பாற்சிகரிக்
கற்பகத்தின் பொற்பதமே காப்பு.

(இதன்பொருள்.) முத்திநெறியைவிரும்பிய மூதுணர்வுடை யாருள்ளத்திலே (தயிரில்நெய்போல வெளிப்பட்டு) விளங்கும் முருகக்கடவுளை முன்னிலையாக்கியுரைக்கும் முதுநெறிவெண்பா வென்னும் இந்நூலைப்பாடுதற்கு, சிவபெருமானது ஆனந்ததாண் டவ தரிசனத்தைவிரும்பி அன்பை அகத்தே அமையப்பெற்ற அடி யவர்கள்நெருங்கிய தில்லைச்சிற்றம்பலத்தினது மேலைக் கோபுர வாயிலில் வீற்றிருக்கும் கற்பகவிநாயகக்கடவுளுடைய பொன் போலுந்திருவடிகளே (இடையூறுவாராமற் பாதுகாக்கும்) காவ லாகும். என்றவாறு.

முதுநெறிவெண்பாவை மொழியப் பொற்பதமே காப்பு என கூட்டுக. கதிநெறி - கதித்தநெறியெனினும் அமையும். கதித் தல் - சிறத்தல். முன்னோர் மேற்கொண்ட முதுநெறிகளைத் தொ

குத்து வெண்பாவாற்கூறுதலின் இது முதுநெறிவெண்பாவெனப் பட்டது. அற்பு வலித்தல்விகாரம். ஏகாரம் பிரிநிலை.

அவையடக்கம்.

தேசுமலி தெய்வத் திருக்குறள்க ளோடுமுரு
கேசனெனு நாமங் கெழுமுதலி—னாசகன்றோர்
குற்றமது நோக்காரென் கொள்கையினா னீதிசில
சொற்றனனோர் நூலாத் தொகுத்து.

(இ - ள்.) (திருவள்ளுவநாயனாரென்னும் பரமாசாரியர் அருளிய) சீர்த்தி நிறைந்த தெய்வத்தன்மைபொருந்திய திருக்குறளோடு, முருகேசனென்னும் அரிய திருநாமமும் (ஒவ்வொருசெய்யுளினும் மங்கலமாகக்) கலந்திருத்தலின், (அச்சிறப்புநோக்கிக்) குற்றமற்றபெரியோர் (இந்நூலினிடத்தே) குற்றம்பாராட்டாரென்கின்ற கோட்பாட்டினாலே (தெரிந்தமட்டும்)சிலநீதிகளை ஒருநூலாகத்தொகுத்துச் சொல்லினேன். எ - று.

தேசு - எச்சமயத்தாராலும் பொதுமறையெனப் பாராட்டப்படும் பெருங்கீர்த்தி. தெய்வத்தன்மையாவது, கடைச்சங்கத்து இறையனார்முதலியோரும் பிறரும் இவ்வுத்தரவேதத்திற்கு இணையில்லையெனச் சிறப்புப்பாயிரம் அளிக்கப்பெற்றமையேயன்றி, சேரமான்பெருமாணாயனார்முதலிய பெரியோரும் தத்தம் பிரபந்தங்கள்மேம்பட ஆசிரியவசனமாக எடுத்தாளும் பெருஞ்சிறப்புடைமைமுதலியவை. ஆசு - பொறாமைமுதலிய தீக்குணங்கள். ஆசகன்றோர் குற்றம்நோக்காரெனவே, ஆசுடையோர்க்குக் குற்றம் நோக்கிக்கூறுதலே இயல்பென்பதும், அவர் அவ்வாறுகூறுதலால் அது குற்றமாகாதென்பதும் பெறப்பட்டன. என் வினைத்தொகை.

அறத்துப்பால்.

——:o:——

கடவுள்வாழ்த்து.

அஃதாவது, கவி தான்வழிபடுகடவுளையாவது எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடைக்கடவுளையாவது வாழ்த்துதல்.

தேவரையுஞ் சூரனையுந் தேற்றுருவாற் றேர்ந்தனநீ
மூவரிறை யென்ன முருகேசா—வோவில்
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

(இ-ள்.) முருகேசா! தேவரீர் சூரபத்மன்முதலிய அசுரரை அழிக்கத் திருவவதாரஞ்செய்தகாலத்தில், தினமும் யாண்டுமியற்றிய அற்புதத்திருவிளையாடல்களை நோக்கி இவ்வாறு இயற்றுவோன் யாவனோவென ஐயுற்றிருந்த இந்திரன்முதலியதேவர்கள் ஒருநாள் மேருமலையில் தேவரீர் ஒருகுழந்தைவடிவாகநின்று இயற்றும் அற்புதங்களைக்கண்டு, எதிர்த்து மூர்ச்சித்தவழி, வியாழபகவான் அடைந்து பிரார்த்தித்தவரே எழுப்பி, அவர்களுடைய ஐயமொழித்தற்பொருட்டுக் காட்டியருளிய திருவுருவத்தாலும், யுத்தத்தில் சூரபத்மனைத் தெளிவித்தற்பொருட்டுக் காட்டியருளிய திருவுருவத்தாலும் தேவரீரே திரிமூர்த்திபரனெனத் தெளிந்தனம். இதுபற்றியன்றே திருவள்ளுவநாயனாரும், எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடையன; அதுபோல, உலகம் ஆதிபகவனாகிய முதலையுடைத்து. என்றருளிச்செய்தனர். எ-று.

இவ்வுருவம் பாரமேசுரரூபமெனவும், விசுவரூபமெனவும் பெயர்பெறும். திரிமூர்த்திபரனென்பது. "மூவர்கண்முதல்வன்" எனவும், "மாலும் - செம்பதுமத்தினோனும் சிவனொடும் செறிதல்கண்

டோம்" எனவும், "யார்க்கும் மூலகாரணமாய்நின்ற மூர்த்தியிம் மூர்த்தி" எனவும், "பலர்புகழ்மூவருந்தலைவராக வேமுறநாலந் தன்னிற்றோன்றி" எனவும் யாண்டும் வருவனவற்றானுணர்க.

இச்சரித்திரவிரிவைக் கந்தபுராணம் திருவிளையாட்டுப்படலத்தில் "மண்ணளவுபாதலமெலாஞ்சரணம்" என்னும் செய்யுண் முதலியவற்றானும், சூரபத்மன்வதைப்படலத்தில் "உள்ளடிவரைகள்யாவும்" என்னும் செய்யுண்முதலியவற்றானும் உணர்க. ஒழிவின்மை - நீங்குதலின்மை. ஓ - முதனிலைத்தொழிற்பெயர். (க)

வான்சிறப்பு.

அஃதாவது, கடவுளது ஆணையால் உலகமும் அதற்குறுதியாகிய அறம்பொருளின்பங்களும் நடத்தற்கு ஏதுவாகிய மழையினது சிறப்புக்கூறுதல்.

அன்பரிடர் கண்டரன்பா லப்பருஞ்சம் பந்தரொடு
முன்பொருகா சேற்றார் முருகேசா—வின்புதருந்
தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

(இ-ள்.) முருகேசா! திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் திருநாவுக்கரசு நாயனாரும் திருவீழிமிழலையின்கண்ணே, தரிசனஞ்செய்து வசிக்குநாளில், மழையின்மையால் உணவுகிடையாமற் பசிப்பிணிவருத்த; திருத்தொண்டர்கள் படும்பாட்டைநோக்கி, சிவனடியார்கட்கும் கவலைவரலாமோவெனக் கலங்கி, அப்பிணியகற்றச் சிவபெருமான்பால் தனித்தனி நாடோறும் ஒவ்வொரு பொற்காசையேற்று, அவற்றால் அத்தொண்டரைப் பேணினர். இதுபற்றியன்றே நாயனாரும், மழைபெய்யாதாயின், விரிந்தவுலகத்திலே, தானமும் தவமுமாகிய இரண்டறங்களும் உண்டாகமாட்டா. என்றருளிச் செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைப் பெரியபுராணம் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்புராணத்துட் காண்க. (௨)

நீத்தார்பெருமை.

அஃதாவது, முற்றத்துறந்த முனிவரது பெருமைகூறுதல்.

ஈண்டுதச தோற்றமா லெய்ந்தான் பிருகுரையான்
மூண்டரற்பூசித்தும் முருகேசா—பூண்ட
நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

(இ-ள்.) முருகேசா! தேவர்களும் அசுரர்களுமூண்ட போர்முனையில், தேவர்தோற்றோடித் திருமாலிடம் முறையிடலால், அவர் அசுரர்களைத்துரத்தலும், அவ்வசுரர் தங்கள் குலகுருவான சுக்கிராசாரியரின் பிதாவாகிய பிருகுமுனிவரது ஆச்சிரமத்தில் அடைக்கலம்புகுத; அம்முனிவர்பத்தினியாகிய கியாதியென்பவள் இடந்தந்துகாத்தனள். அதுநோக்கிய திருமால், அக்கியாதியென்பவள் தமக்கு மாமியும் முனிபத்தினியுமாக இருந்தும் அதைநோக்காது, அவளைக்கொன்று அசுரரையுமழித்தலால், அம்முனிவர் சினந்து சபிக்க; அதைநீக்குதற்பொருட்டு, அத்திருமால் பரமசிவனைப் பூசித்தும், அகற்றமுடியாமையால் அக்கடவுளருளியவாறே இவ்வுலகத்திலே தசாவதாரமெடுத்தனர். இதுபற்றியன்றே நாயனாரும், பயனிறைந்தசொற்களையுடைய முனிவரது மகிமையை உலகத்தின்கண்ணே அவராணையாகச்சொல்லிய மந்திரங்களே பிரத்தியக்ஷமாகக் காட்டிவிடும். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவை உபதேசகாண்டம் சிவபூசைமான்மியச் சருக்கத்திலும், மச்சபுராணம் காஞ்சிப்புராணம் திருக்கழுக்குன்றப்புராண முதலியவற்றினும்காண்க. (௩)

அறன்வலியுறுத்தல்.

அஃதாவது, ஏனைப் பொருளுமின்பமும் போலாது அறன் இம்மை மறுமை வீடென்னும் மூன்றனையும் அளித்தலால் இது அவ்விரண்டினும் வலியுடைத்தென்பது கூறுதல்.

அற்றமின்றிச் சாமந்தன் கோனிதியா லண்ணல்பணி
முற்றுவித்தின் புற்றான் முருகேசா—மற்றதனால்
ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

(இ - ள்.) முருகேசா! குலபூடணபாண்டியனோடு சேதிராய னென்னும் வேடராசன் எதிர்க்க யத்தனித்தவழி, இதையறிந்த பாண்டியன் சாமந்தரென்னும் சேனாதிபதியை நோக்கி, பொருள் செலவழித்தேனும் இன்னுஞ் சிலசேனை திரட்டுக என்று ஆஞ்ஞாபிக்க; அவர் அவ்வாறுசெய்யாது, வேண்டியதிரவியங்களைச் சோமசுந்தரக்கடவுளுக்கும் அடியவர்களுக்கும் உரிய தொண்டுகளில் செலவிட்டு, அவ்வாபத்தை நீக்கியருளும்படிப் பிரார்த்தித்தனர். இங்ஙனஞ் செலவிடுவதைப் பிறராலறிந்த அரசன் ஐயுற்று, நாளையுதயத்திற்குமுன் சேனைகளை அழைக்கவெனவற்புறுத்தலும், சிவபெருமான் சாமந்தருடைய வேண்டுகோளின்படிக் கணங்களுடன் குதிரைச்சேவகரா யெழுந்தருளி, அவ்வமையத்தில் அவ்வேடன் புலிவாய்ப்பட்டுமடிந்தமையால், தாமும் மறைந்தருள; சாமந்தர் விம்மிதமுடையவராய் அரசனாலுபசரிக்கப்பட்டு, பேரின்பமடைந்தனர். இதுபற்றியன்றே நாயனாரும், தத்தமக்குக் கூடும் வகையால் தருமமாகிய நல்வினையை மனம் வாக்குக் காயம் என்பனவற்றாலெல்லாம் இடைவிடாமல் செய்யக்கடவர். என்றருளிச் செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைத் திருவிளையாடற்புராணம் மெய்க்காட்டிட்டபடலத்துட் காண்க. (௪)

இல்வாழ்க்கை.

அஃதாவது; இல்லாளோடுகூடி வாழ்தலினது சிறப்பு.

மெய்த்தமிழ்வே தத்துலகுய் வித்துயர்ந்தார் வள்ளுவ
முழுத்தவில்வாழ் வுற்று முருகேசா—வுத்தமமாம் [னார்
ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து.

(இ-ள்.) முருகேசா! பகவனென்னும் அந்தணரது அருந்தவத்தால் ஆதியென்பவளிடத்திலவதரித்த திருவள்ளுவநாயனார் வாசுகியென்னும் கற்பிற்சிறந்த மங்கையைமணந்து, யாவரும் விரும்பும் இல்லறமுடையராய் வாழ்ந்துகொண்டு, அறம் பொருள் இன்பம் வீடென்னும் உண்மைப்பொருளை விளக்கும் தமிழ்வேதமாகிய திருக்குறளை உலகத்தாருய்யும்பொருட்டு அருளிச்செய்து, அந்நெறியில் எவர்களையும் ஒழுகுவித்து, தாமும் எண்ணிறந்த தெய்வீகமுடையவராய் எவருந்துதிக்கமேம்பட்டனர். இதுபற்றியன்றே இந்நாயனார், தவஞ்செய்வோரையும் தத்தம்நெறியில் ஒழுகுவித்துத் தானும் தன்னறத்திலே தவறாத ஒருவனது இல்வாழ்க்கையானது, அத்தவஞ்செய்வாரது நிலையினும் பொறுமையையுடையதாம். என்றருளிச்செய்தனர். எ-று. முத்தம் - விருப்பு.

தெய்வீகமாவன, திருவாலங்காட்டிலே சிவபிரானருளிய ஊர்த்துவதாண்டவ நிலைமையைத் தேவர்கட்குத் தெளிவித்து, அவர்களுடைய ஐயமொழித்தமையும், ஏலேலசிங்கனை அடிமைகொண்டு, அவர்பால் புத்திரப்பேறு முதலிய பல அற்புதங்காட்டினமையும், மதுரையிலே உருத்திரசன்மரோடு சங்கப்பலகையில்

ஒருங்கிருந்து திருக்குறளை அரங்கேற்றிச் சங்கத்தாரைவென்று அவராற்புகழப்பெற்றமையும் முதலியனவாம்.

இதன்விரிவைத் திருவள்ளுவநாயனார்சரித்திரத்துட் காண்க.

வாழ்க்கைத்துணைநலம்.

அஃதாவது, இல்வாழ்க்கைக்குத் துணையாகிய மனையாளது நன்மை.

கோதில் சுதரிசனன் சொற்றிறம்பாக் கோதையொடு
மூதனூர்தீர்ந் துய்ந்தான் முருகேசா—பேதமிலாப்
பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

(இ-ள்.) முருகேசா ! குற்றமற்ற ஒழுக்கமுடைய சுதரிசனனென்னும் அந்தணன் தனது சொற்றவறாத மனைவியாகிய யோகவதியை நோக்கி, பெண்ணே! நீ சிவவேடமுடையார்க்கு வேண்டுவனபுரிந்து அவர்நின்பாற் கலக்கவிரும்பினும் உடன்படுவாயாக என்று நியமிக்க; அவள் ஒருநாள், சிவவேடம்பூண்டுவந்த இயமனுக்கு வேண்டும் பணிகளைஇயற்றி, அவன் தன்பாடல் காதல்பூண்டிருத்தலைக் குறிப்பாலுணர்ந்து இசைந்தனள். உடனே அவ்வியமன் தனதுருவோடு வெளிப்பட்டுநின்று, அவளைநோக்கி, யாம் வந்தது நினதுகற்பைப் பரிசோதித்தற்கன்றிக் கலத்தற்குஅன்று; நீ கணவன்வார்த்தைக்கு மாறுபடாதமை கண்டு மகிழ்ந்தனம்: ஆதலின், எத்தன்மையருக்கும் கடத்தற்கரிய இயமவாதனையை உங்கட்கு நீக்கியருளினோமென்று கட்டளையிட்டு மறைந்தருள; சுதரிசனன் இயமவாதனையினீங்கி, மனைவியோடு உய்ந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், ஒருவனெய்தும் பொருள்களுள்ளே இல்லாளின்மேம்பட்டபொருள்கள் யாவையுள்ளன; அவளிடத்தில்

கணவனது சொற்றவருத கற்பென்னும் கலங்காநிலைமை உண்டாகப்பெறின். என்றருளிச்செய்தனர். எ - று. இயமவாதனையினு மிக்க பெருந்துயரின்மையால் அது மூதனுரெனப்பட்டது.

இச்சரித்திரவிரிவை இலிங்கபுராணம் சிவன் பலியேற்றவத்தியாயத்து, பாரதம் கிராதபுயங்கசம்வாதச்சருக்கத்தும்காண்க.(௬)

புதல்வரைப்பேறுதல்.

அஃதாவது, தென்புலத்தார்கடன் செலுத்தற்குரிய நன்மக்களைப் பெறுதல்.

துற்றுநா குற்றோர் சசிவன்னன் சூழ்நெறியான்
முற்றினர்சொர்க் காதி முருகேசா—வுற்றுப்
பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

(இ-ள்.) முருகேசா ! பாகவெக்கியனென்னும் அந்தணன் புத்திரனாகிய சசிவன்னனென்பவன் அரும்பெரும்பாதகங்களையே செய்துவந்தமையால்,அவன் பிதிர்க்கள் சுவர்க்காதிபதங்களையிழந்து, நரகிற்செறிந்து துன்புற்றுக்கிடந்து, பின்பு அச்சசிவன்னன் தேவபத்தன்கற்பித்தவாறே மகானந்தபராயண முனிவரையடைந்து, அவருபதேசித்த செந்நெறிக்கணொழுகித் தன்பிதாவோடு முத்தியிற்சேர்ந்தவுடன், அப்பிதிர்க்களும் முன்னினுமேம்பட்ட சுவர்க்காதிபதம்பெற்றனர். இதுபற்றியன்றே நாயனாரும், ஒருவன் பெறும் பேறுகளுள்ளே அறியவேண்டுவன அறிதற்கு உரிய மக்களைப் பெறுதலல்லது பிறபேறுகளை யாம் மதிப்பதில்லை. என்றருளிச்செய்தனர். எ-று. சூழ்நெறி-தாப்பிசைப்பொருள்கோள்.

இச்சரித்திரவிரிவைச் சூதசங்கிதை ஞானிபணிவிடைப்பேறுரைத்த அத்தியாயத்தும், விருத்தாசல புராணத்தும் காண்க. (எ)

அன்புடைமை.

அஃதாவது, சம்பந்தமுடையவரிடத்தே காதலையுடையவனாதல்.

கின்னரரோ டேமேதா கேதரைமீட் டார்வசவர்
முன்னரன்பாற் சென்று முருகேசா—மின்னுலகில்
அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

(இ-ள்) முருகேசா! முற்காலத்திலே, வசவதேவர் சிவனடியார்களிடத்து பெரிதும் அன்புடையராயிருத்தலை உலகத்தார்க்குப் புலப்படுத்தும்பொருட்டுச் சிவபிரான் கின்னரையர் மேதாகேதைய ரென்னும் சிவசரணர்களிருவரையும் தமது பதவியாகிய கைலையிற் சேர்த்தருள; வசவதேவர் அன்பின்பிரிவாற்றாமையால் அப்பதவியிற் றாமுஞ்சென்று, மடிவாலமாச்சையர் வேண்டுகோளின்படி அவ்விருவரையு மீட்டுக்கொண்டு, கல்யாணபுரியையடைந்து, முன் போலவாழ்ந்திருந்தனர். இதுபற்றியன்றே நாயனாரும், பெறுதற்கரிய மக்களுயிர்க்கு உடம்போடுண்டாகிய தொடர்ச்சியினை அன்போடு பொருந்துதற்குவந்த நெறியின்பயனென்று சொல்லுவர் அறிந்தோர். என்றருளிச்செய்தனர். எ-று. முன் அரன்பாற்சென்று எனப் பொருள்கொள்ளினும் அமையும். என்பு உடம்பையுணர்த்தலின் ஆகுபெயர்.

இச்சரித்திரவிரிவை வசவபுராணம் கின்னரையர் மேதாகேதையர் புராணங்களுட் காண்க (அ)

விருந்தோம்பல்.

அஃதாவது, பழக்கமுடையராயும் அஃதிலராயும் வரும் விருந்தினரை உபசரித்தல்.

துன்னுவனத் துந்தருமன் சூழ்முனிவர்ப் பேணுதலான்
முன்னுவளம் பெற்றான் முருகேசா—வுன்னின்

வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று.

(இ-ள்.) முருகேசா! இருவகை விருந்தினரையும் பேணிவந்த தருமர் தமது நாடுமுதலியவற்றை இழந்து, நெருங்கிய வனத்தை யடைந்தும், தம்மை அகலாதணுகிய ஒழுக்கமுடைய பன்னீராயிரம் அந்தணரையும், துரியோதனனால் விடுக்கப்பட்டு அகாலத்திலேவந்த துருவாசமுனிவரையும் உபசரித்து, அப்புண்ணியமுதிர்ச்சியால், பகைவரைக் களைந்து, முன்னையினும் செல்வமுதலிய ஓங்கப்பெற்று வாழ்ந்தனர். இதுபற்றியன்றே நாயனாரும், தன்னை நோக்கிவந்த விருந்தை நாடோறும் உபசரிப்பவனுடைய இல்வாழ்க்கையானது வறுமையால்வருந்திக் கெடுதலில்லை. என்றருளிச்செய்தனர். எ-று. முன்னுதல் - சிந்தித்தல்.

இச்சரித்திரவிரிவைப் பாரதம் ஆரணியபருவத்துட் காண்க. (க)

இனியவைகூறல்.

அஃதாவது, மனத்தின்கணுள்ள மகிழ்ச்சியைவெளிப்படுத்தும்
இனியசொற்களைச் சொல்லுதல்

அண்டமுதல் வற்பழித்தே யைந்தலையு ளொன்றிழந்தா
முண்டகன்செம் மாந்து முருகேசா—மண்டிப் [ன்
பணிவுடைய னின்சொல னாதலொருவற்
கணியல்ல மற்றுப் பிற.

(இ-ள்.) முருகேசா! சனகர்முதலிய முனிவர்கள் தமது ஐயமொழித்தற்பொருட்டுப் பிரமதேவரையடைந்து, முத்தொழிலியற்றும் மூவருள் முதற்பொருளாவார் யாவர்? என வினவுங்கால், அப்பிரமதேவர் இறுமாந்து யானேயெனக்கூறுதலை விஷ்ணுமூர்த்

தியறிந்து, அவனையெதிர்த்து யானே முதற்பொருளெனக்கூற; இருவருக்கும் பெருங்கலகம் விளைந்தது. அத்தருணத்தில் நான்கு வேதங்களும் பிரணவமும் தனித்தனி உருக்கொண்டு வந்து, பல்லாயிரகோடியண்டங்கட்கும் முதற்பொருளாவார் சிவபெருமானேயெனப் பல ஏதுக்களால் நாட்டவும், தெளியாராய் மாறுபட்டிருத்தலைச் சிவபெருமானறிந்து பிரசன்னராக; அப்பிரமதேவர் அப்பெருமானை வணங்காது செருக்காலிகழ்ந்து, வைரவக்கடவுளால் தமக்குரிய ஐந்தலைகளுள் ஒருதலையையிழந்தனர். இதுபற்றியன்றோ நாயனாரும், ஒருவனுக்கு ஆபரணமாவது பெரியோரிடத்தே வணக்கமுடையனாய் எல்லாரிடத்தும் இனியசொல்லையும் உடையவனாதல்; இவையிரண்டுமன்றி உடம்பிலணியும் மற்றையாபரணங்கள் ஆபரணமாகா. என்றருளிச்செய்தனர். எ-று. செம்மாத்தல் - இறுமாத்தல். மண்டுதல்-விரைதல்.

இச்சரித்திரவிரிவைக் கந்தபுராணம் ததீசியுத்தரப்படலத்தும் சேதுபுராணம், சிவதீர்த்தச்சருக்கத்தும் கூர்மபுராணமு் காஞ்சிப்புராணமு், காசிகாண்டமுதலியவற்றும் காண்க. (கo)

செய்ந்நன்றியறிதல்.

அஃதாவது, தனக்குப் பிறர்செய்த நன்மையை மறவாமை.

மெய்த்தரும தெய்வநன்றி வீட்டிமதி மம்மருற்றான்
முத்தவற்ச நாபன் முருகேசா—வித்தரையில்
எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

(இ-ள்.) முருகேசா! முற்றத்துறந்த வற்சநாபரென்னும் முனிவர் தமதுசரீரம் புற்றினான்மூடும்படி எண்ணிறந்தகாலம் நிஷ்டையிலிருக்கையில், இவரைப் பரிசோதித்தற்கு இந்திரனுலேவப்

பட்ட மேகங்கள் அப்புற்று உடையும்படி இடியைச்சொரிந்து, மழைபொழிய; அக்காலத்தில் தருமதேவதை கடாவுருக்கொண்டு அவருக்கு ஆபத்துவாராமல் முதுகினால் மழையைத்தாங்கிக் காத்தது. பின்பு, தெய்வகதியால், நிஷ்டையினின்று நீங்கிய முனிவர், அக்கடாவைத் தருமதேவதையென்றுணராது, இக்கடாவிற்கு இவ்வுணர்ச்சியுதித்தமை வியப்பேயெனப்புகழ்ந்து, ஆசீர்வதித்து, முன்போலச்சமாதிகூடியும், மனம் ஒருமியாது சஞ்சலப்படுவதைநோக்கி, இது இதைவழிபடாது செய்ந்நன்றிமறந்தமையாலுண்டாகிய தீங்காதலின், இதற்கு உயிர்விடுதலேபரிகாரமெனத் துணிந்து, மலையினுச்சியிலேறி விழத்தொடங்கினர். உடனே தருமதேவதை வெளிப்பட்டு, வீணே உயிர்விடேல்: சேதுவிலே சங்கதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்யின் இப்பாவம் நீங்குமெனக்கூற; அவ்வாறே மூழ்கிச் சுத்தராயினர். இதுபற்றியன்றே நாயனாரும், எவ்வகைப்பட்ட பெரிய அறங்களை அழித்தவர்க்கும் பாவத்தினீங்கும் வழி உண்டாகும்; ஒருவன் செய்த உபகாரத்தையழித்தவனுக்கு அப்பாவத்தினீங்கும் வழியில்லை. என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைச் சேதுபுராணத்துட் காண்க. (கக)

நடுவுநிலைமை.

அஃதாவது, பகைவர் அயலோர் நட்பினரென்னும் மூவகையோரிடத்தும் அறத்தின்வழுவாது ஒப்பநிற்கும் நிலைமை.

நீதியிற்பாஞ் சாலிகடா விற்குவிடை நேர்விகன்னன்
மூதவையிற் சொற்றான் முருகேசா—காதலினால்
சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின்.

(இ-ள்.) முருகேசா! துரியோதனன் பாண்டவர்களை வஞ்சகச்சூழ்ச்சியால் அழைத்துச் சூதாடுவித்து, அவரது நாடுமுதலியவற்றைக் கவர்ந்துகொண்டு, அவரை அடிமையாக்கியதுமன்றி, அவர்மனைவியாகிய திரௌபதையையும் துரோணர்முதலிய பெரியோர்நெருங்கிய பெரியசபையிலழைத்து, துகிலுரியும்படி துச்சாதனனுக்குப்பணிக்கும்போது, அவள் புலம்பிக்கேட்ட வினாக்களுக்கு அப்பெரியோரும் தக்கவிடைகளைத் துரியோதனனுக்கஞ்சிச் சொல்லாதிருக்க ; அவனது தம்பியாகிய விகன்னன் நடுவுநிலைமையாக நின்று தக்கவிடைகளை நீதியோடுரைத்து யாவராலும் புகழப்பட்டனன். இதுபற்றியன்றே நாயனாரும், மனத்தினிடத்தே கோணுதலில்லாமையை உறுதியாகப்பெற்றால், சொல்லினிடத்தே கோணுதலில்லாமையானது நடுவுநிலைமையாகும். என்றருளிச்செய்தனர். எ-று. செப்பம் - நடுவுநிலைமை.

இச்சரித்திரவிரிவைப் பாரதத்துட் காண்க. (கஉ)

அடக்கமுடைமை.

அஃதாவது, மனமொழிமெய்கள் தீயவழியிலே செல்லாது அடங்குதலுடையனாதல்.

ஓங்குதருக் கம்வாத வூரருரைச் செய்தபுத்தர்
மூங்கையராய்ச் சோர்ந்தார் முருகேசா—வாங்கதனால்
யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

(இ-ள்) முருகேசா! ஈழநாட்டுப் புத்தகுருமார்கள் ஒரு சிவயோகியினால் சிதம்பரமகிமையையுணர்ந்து, பொறாமைகொண்டு, அச்சிதம்பரத்தில் தமதுமதத்தை நாட்டவிரும்பி, தமதுநாட்டரசனோடு மாணாக்கருஞ்சூழச்சென்று, தில்லைவாழந்தணர்களும், சோ

ழராசாவும் பிறரும்நெருங்கிய பெரியசபையிலே மாணிக்கவாசக சுவாமிகளிடத்து, வீணே பலவாறு தருக்கம்புரிந்து, அவரது தெய்வபலத்தால் தம்மாணுக்கரோடு தாமும் ஊமையராகிச் சோர்வடைந்தனர். இதுபற்றியன்றே நாயனாரும், தம்மாற்காக்கவேண்டுவனயாவையுங் காக்கமாட்டாராயினும் நாவொன்றனையும் காக்கக்கடவர்; அதனைக் காவாராயின், சொற்குற்றத்திலே அகப்பட்டுத் தாமே துன்பப்படுவர். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைத் திருவாதவூரர்புராணம் புத்தரைவாதில்வென்றசருக்கத்துட் காண்க. (கரு)

ஒழுக்கமுடைமை.

அஃதாவது, தத்தம் வருணத்திற்கும் ஆச்சிரமத்திற்கும் உரிய ஒழுக்கத்தினை உடையராதல்.

வேதநெறி பேணுத் துராசாரன் மிக்கயர்ந்தான்
மோதலகை பற்ற முருகேசா—தீதில்
ஒழுக்கத்தி னெல்கா ரூரவோ ரிழுக்கத்தி
னேதம் படுபாக் கறிந்து.

(இ-ள்.) முருகேசா! கௌதமியென்னும் நதிதீரத்திலுள்ள துராசாரனென்னும் ஓரந்தணன் தனக்குரிய கன்மங்களைச் செய்யாது விடுத்து, அத்தீவினையால் இழிகுலமுடையவனாகி, அப்பிறப்பிற்றானே, தன்போலவே ஒருவன் ஒழுக்கத்திற் றவறுதலாற்பெற்ற பேயுருவத்தால் பீடிக்கப்பட்டு, உணவின்றி எங்குமுழன்று துன்புற்றனன். இதுபற்றியன்றே நாயனாரும், ஒழுக்கத்தினின்றும் தவறுதலால் தமக்கு இழிகுலமாதலாகிய குற்றமுண்டாதலைத் தெரிந்து, மனவலிமையுடையோர் செய்தற்கருமைநோக்கி ஆசாரத்திற் சுருங்கார். என்றருளிச்செய்தனர். எ-று. மோதுதல் - யாவரையும் வருத்துதல்.

இச்சரித்திரவிரிவைச் சேதுபுராணத்துட் காண்க. (கச)

பிறனில்விழையாமை.

அஃதாவது, காமமயக்கத்தாற் பிறனுடைய மனையாளை விரும்பாமை.

பார்க்கவனார் பன்னியத்தம் பற்றியலி யாயினன்முன்
மூர்க்கனுந் தண்டன் முருகேசா—வேர்க்கும்
பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்.

(இ-ள்.) முருகேசா! முற்காலத்திலே தொண்டைமண்டலத்தையாண்ட தண்டனென்னுமரசன் வேட்டையாடுதற்கு வனஞ்சென்று, தாகத்தால் மெலிந்து, பார்க்கவமுனிவருடைய ஆச்சிரமத்தையடைய; அதுகண்ட முனிவரதுமனைவி மனமிரங்கி, நீரையுதவிப் பிழைப்பித்தனள். அவன் மூர்ச்சைதெளிந்தெழுந்து, அவளழகைப்பருகிக் காதல்முதிர்ந்து, வலிந்து கரத்தைப்பற்றியிழுத்து, அம்முனிவர்சாபத்தால் அலியாகித் துயருழந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், பிறனதுமனைவியினிடத்தே நெறிகடந்து செல்லுவோனிடத்தே, பகையும் பாவமும் அச்சமும் குடிப்பழியுமென்னும் இந்நான்கு குற்றங்களும் ஒருபோதும் நீங்காவாம். என்றருளிச்செய்தனர். எ-று. வேர்த்தல் - சினத்தல்.

இச்சரித்திரவிரிவைக் காஞ்சிப்புராணம் நகரேற்றுப்படலத்துட் காண்க. (கரு)

பொறையுடைமை.

அஃதாவது, காரணம்பற்றியாவது அறியாமையாலாவது ஒருவன் தமக்குத் தீங்குசெய்தவழித் தாமும் அதனை அவனிடத்துச் செய்யாது பொறுத்தலை யுடையராதல்.

மன்னவனாற் றன்னையொறுப் பித்துமரு ளாவசுதன்
முன்னவனைக் காத்தான் முருகேசா—வுன்னும்

நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடை
போற்றி யொழுகப் படும். [மை

(இ-ள்.) முருகேசா! பிருகத்துய்மனென்னும் அரசன் ரயிப்பி
யமுனிவருடைய புத்திரராகிய பராவசு அருவாவசு என்னுமிருவரு
ம் வேதவேதாங்கமுதலியவற்றில் வல்லுநராயிருந்தமையால், அவ
ரைக்கொண்டு பன்னிருவருடமியற்றி முடிக்கப்படுவதாகிய சத்திர
யாகமொன்றை நடாத்தினன். அவ்விருவரும் தமக்கிணையில்லை
யென முனிவர்பலரும் வியக்குமாறு அதனை இயற்றுநாளில், மூன்
றுநாள் மாலையில் கிருககிருத்தியத்தை விரும்பி மூத்தவனாகிய பரா
வசுவென்பவன் செல்லும்போது, பிதாவாகிய ரயிப்பியமுனிவர்
மான்றோல்போர்த்து ஒருபுறமிருக்கக்கண்டு, மானெனக்கருதி,
இது கொல்லுமேயென்னும் அச்சத்தால் கொன்றபின், தந்தையெ
னத்தெளிந்து, கவலையுற்று, இறுதிக்கடன்முடித்து, அருவாவசு
வையணுகி, இதனையறிவித்துத்தேற்றி, தம்பீ! பிதாவைக்கொன்ற
தற்குப் பரிகாரமும் செய்தல்வேண்டும்; அரசனிடம் ஒப்புக்கொ
ண்டமையால் யாகமும் முடித்தல்வேண்டும்; ஆகையால், நீ பரிகா
ரம்செய்யின் யான் யாகத்தைத் தனித்து முடிக்கவல்லேன்; நீ வல்
லையாயின் உரைக்க என்றனன். அதற்கு அருவாவசு நீரேயாகமுடி
க்க; உமக்காக யான் பரிகாரம்செய்வேன்; எனச்சென்று, பிரமக்
கொலைநீங்குமாறு பன்னிருவருடம் விரதமநுட்டித்து, யாகசாலை
யையடைய; அவனைவஞ்சிக்கத்துணிந்த பராவசு அரசனைநோக்கி,
பிதாவைக்கொன்ற இவன் இங்குஅடைந்தால் யாகம்பலித்திடா
து என்னலும், அரசன் கொன்றவன் இவனெனத்தெளியாது,
அவனைநீக்கினன். அரசனீக்கலால் ஏனை அந்தணரும்நீக்க, அருவா
வசு அயர்ந்து வேறுவனம்புகுந்து, சூரியனையுபாசித்து, அக்கடவு
ளாலும் உடன்வந்ததேவராலும் பெற்றவரத்தின்படியே தந்தை
யுயிர்பெற்றெழத் தமையனையையும் சேதுவில் தனுக்கோடிஸ்நா

ணம்செய்வித்துச் சுத்தனாக்கி உடன்வாழ்ந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், ஒருவன் பலகுணங்களினது நிறைவையுடையவனா யிருப்பது தன்னைவிட்டுநீங்காமையை வேண்டுவனாயின், அவனாற் பொறுமையுடையவனாயிருப்பது அழியாமற்காத்து நடக்கப்படும். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைச் சேதுபுராணத்தும், பாரதம் ஆரணிய பருவம் தருமர்தீர்த்தயாத்திரைச்சருக்கத்தும் காண்க. (கசு)

அழுக்காறமை.

அஃதாவது, பிறரது செல்வமுதலியவற்றைக்கண்டு சகியாமை.

ஆர்த்தபொறு மைச்சிசுபா லன்கண்ண னாழியினான்
மூர்த்தமறுப் புண்டான் முருகேசா—கூர்த்த
அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து.

(இ-ள்.) முருகேசா! இராசசூயயாகத்தில் வியாசமுனிவரது கட்டளைப்படியே தருமர் கிருஷ்ணமூர்த்திக்கு அக்கிரபூசைசெய் யத்தொடங்குகையில், இவனோ அக்கிரபூசைக்குரியனெனப் பொறாமையால் இகழ்ந்தெதிர்த்தசிசுபாலன் அவருடையசக்கரப்படையாற் சிரமறுப்புண்டு மடிந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், பொறாமையாகிய தீயவழியால் தமக்கு இருமையினும் துன்பம்வருதலையறிந்து அப்பொறாமையால் அறமல்லாதவைகளைச் செய்யார் அறிவுடையோர். என்றருளிச்செய்தனர். எ-று. மூர்த்தம் - சிரம்.

இச்சரித்திரவிரிவைப் பாரதம்பாகவதங்களிற் காண்க. (கஎ)

வெஃகாமை.

அஃதாவது, பிறர்க்குரியபொருளை அபகரித்தற்கு நினையாமை.

மாண்டுநக ரோடுளறு வாய்ந்தான் பராந்தகக்கோன்
மூண்டான்பூ வெஃகி முருகேசா—வேண்டும்

நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்.

(இ-ள்.) முருகேசா! சாரமாமுனிவர் சிவபெருமானருளியவாறே திரிசிராமலையையடைந்து, சிவபூசையைமேற்கொண்டு ஒழுகுநாள், அத்தலத்தில் நாககன்னிகைகள் கொண்டுவந்துபூசித்த நறுமணமுள்ள செவ்வந்திமலர்களைக்கண்டு, தாமும்அவற்றாற் பூசிக்கவிரும்பி, அக்கன்னிகைகளோடு பாதலத்தையடைந்து, அப்பூச்செடிகளைக் கொணர்ந்து விருத்திசெய்து, அம்மலர்களாற்பூசித்துவந்தனர். அக்காலத்திலே அடுத்த உறையூரைஆண்டிருந்த பராந்தகனென்னும்சோழன் சிவாபராதமென நோக்காது அம்மலர்களைப் பறிப்பித்து உபயோகப்படுத்திவருதலை அம்முனிவரறிந்து, சிவபெருமான்சந்நிதியையடைந்து முறையிட்டு, மண்மாரிபெய்யும்படிச்செய்ய; அங்ஙனமேபெய்து தன்னகரழிதலை அவ்வரசன்கண்டுபயந்து, தன்மனைவியோடு நகரத்தையகன்று ஓடினான். ஓடியும், அம்மலர்கள் சிவபெருமானுக்குரியனவென்று நாடோறும் சூடாது விடுத்த அவன்மனைவிமாத்திரம் பிழைக்க, அரசன் நகரோடழிந்து நரகத்தையடைந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், பிறர்க்குரிய பொருளைக்கொள்ளுதல் நமக்கு அறமல்லவென்னும் நடுவுநிலைமையில்லாமல், ஒருவரது நல்லபொருளை அபகரித்தற்குவிரும்பினால், அவ்விருப்பு அவன்குடியைக்கெடுத்துப் பலகுற்றங்களையும் அப்போதே அவனுக்குக்கொடுக்கும். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைச் செவ்வந்திப்புராணம் சூரவாதித்தசருக்கத்தும் உறையூரழித்தசருக்கத்தும் காண்க. (கஅ)

புறங்கூறாமை.

அஃதாவது, காணாதவிடத்துப் பிறரை இகழ்ந்துரையாமை.

துஞ்சுமனத் தோடுவணஞ் சூரன்முத லோர்த்தூற்றி
முஞ்சலுற்ற தந்தோ முருகேசா—விஞ்சவுறக்

கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

(இ-ள்.) முருகேசா! சாகரத்தீவரசனாகிய பிரபாகரனுடைய புத்திரர்நால்வருள்ளே சூரன் புதமனென்னுமிருவரும், அகத்திய முனிவரால் முருகக்கடவுளினது வாகனமும் துவசமுமாகிய மயில் சேவல்களின் பெருமைகளையும், சிங்கன் தாரகனென்னுமிருவரும் திரணவிந்துமுனிவரால் வீரமாகாளி, ஐயனார் இவர்கள் வாகனங்களாகிய சிங்கம் வெள்ளையானையென்பவைகளின் பெருமைகளையும் உணர்ந்து, அப்பதவிகளை அடையவேண்டி, ஸ்ரீசைலத்தில் அருந்தவஞ்செய்திருந்தனர். அதையுணர்ந்த கருடனும், அன்னமும் திருக்கைலையிலே மயிலும் சேவலும் சிங்கமும் வெள்ளையானையுமாகிய நான்கும் நிற்குமிடத்தையடைந்து, அவற்றை நோக்கி, உங்கள்பதவியை அடையவிரும்பி நால்வர் பருப்பதத்தில் தவஞ்செய்கின்றனரெனத் தூண்டிவிட; அவைகள் கோபித்துச் சென்று, அந்நால்வரையும் பூதகணங்களாகும்படிச் சபித்தன. அந்நால்வரும் அவ்வாறே நெடுநாளிருந்து சமையம்வாய்த்த ஒருநாள் மயிலும் சேவலும் நிற்கும் திருக்கைலைச் சாரலையடைந்து, அவற்றை நோக்கி, உங்களைவணங்காது இக்கருடனும் அன்னமும் இறுமாந்து நிற்றலைக் கண்டீரோவென்று தூண்டிவிட; அவ்விரண்டும் முனிந்தெழுந்து தாக்கலால், அக்கருடனும் அன்னமும் அடிபட்டு மடிந்தன. இதுபற்றியன்றே நாயனாரும், எதிரேநின்று ஒருவனைத் தாக்ஷிணியமில்லாமற் சொல்லினும், அவன் எதிரேயில்லாதிருக்குங்கால், பின்வருங் குற்றத்தை நோக்காத சொல்லைச் சொல்லாதிருக்க. என்றருளிச்செய்தனர். எ-று. அந்தோ என்பது இரக்கக்குறிப்பு. விஞ்சல்-மிகுதல்.

இச்சரித்திரவிரிவை உபதேசகாண்டம் சூரிதிகளொடுக்கச் சருக்கத்துட் காண்க. (கக)

பயனிலசொல்லாமை.

அஃதாவது, தமக்கும் பிறர்க்கும் அறம் பொருள் இன்பங்களுள் ஒன்றையும் தராதசொற்களைச் சொல்லாமை.

கற்றும் பயனில்சொல் கன்னனுரைத் தென்றான்று
முற்றுபழி பூண்டான் முருகேசா—வற்றுணரிற்
பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மெள்ளப் படும்.

(இ ள்.) முருகேசா ! கன்னன் பலநூல்களையும் ஆராய்ந்திருந்தும் பாண்டவர்க்கு இடுக்கண்களை விளைத்தற்பொருட்டுப் பயனிலவாகிய சொற்களையே துரியோதனனுக்குக் கூறினமையால் எக்காலத்தும் நீங்காத பெரும்பழிபூண்டனன். இதுபற்றியன்றே நாயனாரும், அறிவுடையோர்பலரும் கேட்டு வெறுக்கும்படி பயனில்லாத சொற்களைச் சொல்பவன் எல்லாராலும் இகழப்படுவான். என்றருளிச்செய்தனர். எ று. முற்றுதல்-சூழ்தல்.

இச்சரித்திரவிரிவைப் பாரதத்துட் காண்க. (உ0)

தீவினையச்சம்.

அஃதாவது, பாவங்களாயுள்ளவற்றைச் செய்தற்கு அஞ்சுதல்.

பாவமெனுதான்செய் பற்றலின்வேந் தோடயர்ந்தார்
மூவர் மறையோர் முருகேசா—மேவ
எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.

(இ-ள்.) முருகேசா! சிங்கல தேயத்திலே பூச்சக்கரநகரத்திலேயுள்ள துன்மியனென்னும் ஓரந்தணன் தனது பாகநிலத்தையும் பொருளையும் அரீச்சுரமென்னும் ஆலயத்திற்குத் தத்தஞ்செய்து

விட்டுத் தவஞ்செய்யச் சென்றனன். பின்பு அவன்பிதாவாகிய சவிதாவென்பவன் அந்நிலம் தனக்குரியதென வழக்கிட்டவழி, அரசனால் தன்பக்ஷம் தீர்ப்புப்பெறுமையால் சிலநாட்கழிந்தபின் வேற்றரசனிடத்தும் அந்நிலத்தைப்பற்றி வழக்கிட்டு, இவ்வரசனாலும் தீர்ப்புப்பெறுமையேயன்றிச் சிவத்துரோகனெனப் புதல்வரிருவரோடும் துரத்தப்பட்டு, மகதநாட்டரசனால் உபசரிக்கப்பட்டிருந்தனன். இவ்வரசனது புரோகிதனாகிய விசாந்தகனென்பவன் அவன்வரவையுணர்ந்து அரசனைநோக்கி, இவன் சிவத்துரோகியாதலால் இவனைக்காப்பாற்றின் நின்னையும் சிவத்துரோகமணுகும்; ஆதலின் இவனைநீக்கிவிடுக: எனக்கூறவும், அரசன்உடன்படாமையைக்கண்டு, இவ்வரசனும் அதிசிவத்துரோகி யாய்விட்டமையால்; இவனிருப்பின் உலகத்திற்குக் கேடுவிளையுமெனத்துணிந்து, சவிதாவோடு அரசனையுங் கொல்ல; அரசனும், சவிதாவும், அவன்புதல்வரிருவரும் ஆகிய நால்வரும் நரகத்தையடைந்து வருந்தினர். இதுபற்றியன்றே நாயனாரும், எவ்வளவு பெரிய பகையையுடையவரும் அதனை ஒருவழியினாலே தப்புவர்; அவ்வாறன்றித் தீவினையாகிய பகையானது, நீங்காமற் செல்லுமிடத்திலும் சென்று கொல்லும். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவை உபதேசகாண்டம் சிவத்துரோகிகளெய்தும் நரகவேதனைச்சருக்கத்துட் காண்க. (௨௧)

ஒப்புரவறிதல்.

அஃதாவது, உலகநடையை அறிந்துசெய்தல்.

தொண்டருக்கேற் றுந்தரும சீலரமு துத்தொகுத்தார்
முண்டகன்மால் போற்று முருகேசா - மிண்டும்
இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்.

(இ-ள்.) முருகேசா! திருக்கூவமென்னுந்தலத்தில் தருமசீலராகிய அந்தணர் அநுதினமும் திரிபுராந்தகரை வழிபடுவதன்றியும் வந்தஅடியவர்க்கெல்லாம் அமுதூட்டிவாழுநாளில், மழையின்றிப் பஞ்சகாலமாகலும், உள்ளசெல்வங்களைச் செலவிட்டும் தமதுகருத்திற்கிசைந்த மனைவியினது தாலிமுதலியவற்றைவிற்றும் நெற்பலியேற்றும் அடியவரைப் பெரிதும் உபசரித்துவந்தனர். அக்காலத்தில் எட்டுநாள் பலியேற்றும் இடுவாரின்றிவாடி, ஒன்பதாநாளும் நியதிமுடித்துத் தளர்ச்சியோடு மனையையடைந்திருக்கும்போது, அடியவரொருவர் மிகவும் பசித்தணுக; அவரைவணங்கி இருத்திவிட்டு, நகரமுழுமையும்பலியேற்று, கிடைத்த இருநாழி நெல்லைக்கொண்டு சமைத்து திருவமுதுசெய்வித்து, அவரையனுப்பிவிட்டு, எஞ்சியசேஷத்தை அருந்தப்போகுஞ்சமயத்தில் திரிபுராந்தகர் வயோதிக அடியவராயடைந்து, உணவுவேண்டினர். தருமசீலர், தமதுபசியைச் சிறிதும்நோக்காது, அவரையும்வணங்கி ஆதனத்திருத்தி, உள்ளஅன்னத்தை உவகையோடுபடைத்தமையால், அக்கடவுள் திருவுளமகிழ்ந்து, தினமும்ஒருகுடம் செந்நெலளிக்க; அதனால் எண்ணிறந்த அடியவர்க்குத் திருவமுதளித்து, சேஷத்தையுண்டுவாழ்ந்து, சிவபதமடைந்தனர். இதுபற்றியன்றே நாயனாரும், தாம் செய்யத்தகுவனவற்றையறிந்த இயற்கையறிவையுடையவர் செல்வம் சுருங்கியகாலத்தும் உபகாரம்செய்தற்குத் தளரார். என்றருளிச்செய்தனர். எ-று. மீண்டுதல் - நெருங்கல். இடன்-செல்வம்.

இச்சரித்திரவிரிவைத் திருக்கூவப்புராணத்துட் காண்க. (உஉ)

ஈகை.

அஃதாவது, வறியராய் ஏற்றோர்க்கு இல்லையெனாதுகொடுத்தல்.

பொன்னகர்க்கோ னேற்பத் ததீசி புறவெலும்பை
முன்னலின்றித் தந்தான் முருகேசா—மன்னி

இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.

(இ-ள்.) முருகேசா! விருத்திராசுரன்செய்யும் போர்க்கு ஆற்றாது முரிந்த இந்திரன் விஷ்ணுமூர்த்திகூறியவாறே ததீசிமுனிவரிடம்சென்று, அப்பகைவனைக்கொல்ல வச்சிராயுதம் ஆக்கிக்கொள்ளுதற்கு அவருடையமுதுகந்தண்டையாசிக்க; அம்முனிவர் தன்னுடற்குவரும் இறுதியையுநோக்காது, அதனைத்தந்து முத்தியின்பம்பெற்றனர். இதுபற்றியன்றே நாயனாரும், யான் வறியவனென்று இரப்பவன் சொல்லும் இழிவைப் பிறரிடத்தே தான்சொல்லி ஏற்காமையும், அதனைத் தன்னிடத்தேசொல்லி ஏற்றவர்க்கு இல்லையென்னமற் கொடுத்தலுமாகிய இவ்விரண்டும் நல்லகுடியிற்பிறந்தவனிடத்தே உண்டாயிருக்கும். என்றருளிச்செய்தனர். எ-று. முன்னல் - சிந்தித்தல்.

இச்சரித்திரவிரிவைத் திருவிளையாடற்புராணம் இந்திரன் பழிதீர்த்தபடலத்துட் காண்க. (உ௩)

புகழ்.

அஃதாவது, இல்லறத்தில் வழுவாதார்க்கு இம்மைப்பயனாகி இவ்வுலகத்தின்கணிகழ்ந்து இறவாதுநிற்கும் கீர்த்தி.

எத்தனையோ வாசவர்கள் இன்பமிந்த்ர த் துய்ம்மனுற்றே
மொய்த்தபுகழ் பூண்டான் முருகேசா— வுய்த்துணரின்
ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில்.

(இ-ள்.) முருகேசா! இந்திரத்துய்ம்மனென்னுமரசன் பல அறங்களையுமியற்றித் தேவவுலகத்தையடைந்து, எண்ணிறந்த இந்

திரர்காலம் போகமநுபவித்துவாழுநாளிலே, தேவர்கள் இவனது புகழை விளக்கவிரும்பி, அவனைநோக்கி, உன்பேர் பூமியிலே நிலைபெருமையால்அங்கே அடைவாயென்னலும்; அவன் மார்க்கண்டேயமுனிவரையணுகி, எனதுகாலமும் யானியற்றிய தருமமும் தோற்றுமையால் தேவர்கள் என்னைப் பூமியிற்செலுத்தினார்கள்; எனது நிலைமையைத் தேவரீர் அறிந்திருக்கலாமேஎன்றனன். அதற்கு அவர் நீ எனக்கு முந்தினவனாகையால் யானுணரேன்; எனக்குமூத்ததொரு கூகையுண்டு; அதைக்கேட்க என்றனர். அவரோடு அரசன் அதையடைந்துகேட்க; அதுவும் அவ்வாறேகூறி, எனக்கு மூத்ததொரு கொக்கு உண்டு. அதைக்கேட்கவேண்டும் என்னலும், அரசன் அதனையுங்கொண்டு கொக்கையடைந்து வினவ; அதுவும் என்னின்மூத்ததொரு ஆமையுண்டு; அதைக்கேட்கின் விளங்கும் என்றது. இதையுமழைத்துச்சென்று ஆமையை அடைந்து வினவ; அது அரசனியற்றிய அறமுதலியவற்றை யாவர்க்கும் புலப்படுத்தியது. உடனே, தேவர்கள் விமானத்துடன் வந்து, அரசனே நின்னைப் பூமியிற்செலுத்தியது நினதுகீர்த்தியை உலகத்தார்க்குத் தெரிவிக்கவேயன்றி வேறல்ல என்றுகூறி அழைத்தலும், அரசன் மார்க்கண்டேயமுனிவர் முதலியவர்களை அவரவர்களிடத்திற்கொண்டுபோய்விடுத்து, வணங்கிவிடைபெற்று, தேவலோகத்தையடைந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், தனக்கு இணையில்லையாக ஓங்கிய கீர்த்தியல்லாமல் உலகத்திலே அழியாமல் நிலைபெறுவது வேறொன்றும் இல்லை. என்றருளிச்செய்தனர். எ-று. உய்த்துணர்தல் - நுண்ணிதாகநோக்கல். கூகை, கொக்கு, ஆமை என்பன அவ்வுருவாயிருந்த முனிசிரேஷ்டர்கள். இங்ஙனமே காக்கை முதலியவுருவுங்களாய்ப் புஜண்டர்முதலிய அநேகமுனிவருண்டு.

இச்சரித்திரவிரிவைப் பாரதம் மார்க்கண்டர் கதையுரைத்த சருக்கத்தும் கூர்மபுராணத்தும் காண்க. (உச)

அருளுடைமை.

அஃதாவது, தொடர்புபற்றாது இயல்பாக எல்லாவுயிர்களிடத்தும் செல்வதாகிய கருணையை உடையராதல்.

வாழ்கணங்க ளாக்கினன்ச தானந்தன் வன்னரகின்
மூழ்குகொடி யோரை முருகேசா—தாழ்கிலா
நல்லாற்றா னாடி யருளாள்க பல்லாற்றாற்
றேரினு மஃதே துணை.

(இ-ள்.) முருகேசா! வதரிகாச்சிரமத்திலுள்ள பூரணவித்தென்னுமுனிவருக்கு பத்திரதத்தையென்னுமனைவிபால் அவதரித்த சதானந்தர், சிலமுனிவர்கள் ஒருங்குதிரண்டு சிவபுராணபடனம் செய்யும்போது, நரகத்திலேகிடக்கும் ஆன்மாக்கள்படுகின்ற கடுந்துன்பங்களை விரித்துரைக்கக் கேட்டு, அவ்வுயிர்களிடம் மிகவும் இரக்கம்பூண்டு, தாம் தவவலிமையாற்பெற்ற ஒருவிமானத்திலேறி இயமலோகம்புகுந்து, அங்கே இயமனாலுபசரிக்கப்பெற்று, நரகமனைத்தையுநோக்கிமனம்பதைத்து, உடனே சிவநாமத்தையுச்சரித்து ஆன்மாக்களையெல்லாம் விடுவித்து, திருக்கைலையில்வாழும் கணங்களாக்கி, தாமும் கணநாதராயினார். இதுபற்றியன்றே நாயனாரும், நல்லவழியிலேநின்று, காட்சிமுதலியபிரமாணங்களாலும் யுத்தியாலும் நமக்குத்துணையாகும் அறம்யாதென்று ஆராய்ந்து, அருளுடையராகக்கடவர்; ஒன்றுக்கொன்றுஒத்திராத பலசமயவழிகளால் ஆராய்ந்தாலும் துணையாவது அவ்வருளே வேறொன்றில்லை. என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவை உபதேசகாண்டம் சிவத்துரோகிகளெய்தும் நரகவேதனைச் சருக்கத்தும் சிவநாமமான்மியச்சருக்கத்தும், சானந்தகணேசபுராணத்தும் காண்க. (உ௫)

புலான்மறுத்தல்.

அஃதாவது, ஊனுண்டலை ஒழித்தல்.

காழுறுமூன் றுய்த்தலின்மா யீகனுமார்க் கண்டனுன்
மொழுனுருப் பெற்றான் முருகேசா—வீழும்
படைகொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா தொன்ற
னுடல்சுவை யுண்டார் மனம்.

(இ-ள்.) முருகேசா! மாயீகனென்னும் அரக்கன் ஒவ்வொரு மிருகமுதலியவற்றையும் அவ்வவ்வடிவமெடுத்து நெருங்கிக் கொன்று தின்று, உழலும்நாளிலே ஒருநாள், தெய்வீகம்பெற்ற வேதகிரிச்சாரலில் அருளுருவாய்விளங்கும் மார்க்கண்டேயமுனிவரது ஆச்சிரமத்திலுள்ள ஒரு பெரிய பன்றியைக்கண்டு, முன்னர் ஊனையருந்திவந்தபயிற்சியால் சிறிதும் அருளின்றி, அப்பன்றியையும் கொன்றுண்ணக்கருதி, அவ்வுருக்கொண்டு அதனருகேசெல்லுதலை அம்முனிவரறிந்து மனம்பதைத்து, அவ்வடிவாகவே உழலும்படிச் சபிக்க; அரக்கனும் அவ்வுருவாயலைந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், பிறிதோருயிரினது உடலைச் சுவைபடவுண்டவரது மனமானது, கொலைக்கருவியைத் தம்முடைய கையிலே கொண்டவருடைய மனம்போலக் கொலைநோக்குவதல்லது அருளைநோக்காது. என்றருளிச்செய்தனர். எ-று. வீழ்தல்- விரும்பல். உண்ணுஞ்சாதியனாகிய அரக்கனும் ஊனருந்தும்பயிற்சியாற் பன்றியாயினன் என்னும் இழிவையுணர்த்தலின் உம்மை-இழிவுசிறப்பு.

இச்சரித்திரவிரிவைத் திருக்கழுக்குன்றபுராணத்துட் காண்க.

தவம்.

அஃதாவது, மனம் பொறிவழிபோகாது நிற்றற்பொருட்டு விரதங்களால் உண்டிசுருக்கல் முதலியன.

பற்றிலனந் தன்புற் பதத்தனொடா னந்தநட
முற்றவத்தாற் கண்டான் முருகேசா—வற்றமற

வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்.

(இ-ள்.) முருகேசா! வியாக்கிரபாத முனிவர் ஒருநாள் சிவபெருமான் தேவதாருவனத்தில் நாற்பத்தெண்ணாயிரமுனிவருக்கு ஆனந்தநிருத்தம் செய்தருளியதைச் சிவயோகத்தினுணர்ந்து, அந்நிருத்தம்காட்டியருளும்படித் தில்லையிலே சிவபெருமானை வழிபட்டிருக்க; அந்நிருத்தத்தை யோகநித்திரையாலேதரிசித்துப் பரவசப்பட்டெழுந்த விஷ்ணுமூர்த்தியால் ஆதிசேடரும் உணர்ந்து, அதைத்தானும்தரிசிக்கவிரும்பி, அவரிடம் விடைபெற்று, திருக்கைலைமலைச்சாரலில் கடுந்தவம்புரிந்தவழி, சிவபிரானருளியவாறே பதஞ்சலிமுனிவரென்னும் திருநாமத்தோடு தில்லையையடைந்து, சிவபெருமானை வழிபட்டிருந்து, தைப்பூசமும் குருவாரமுங்கூடிய சுபதினத்திலே முன்கட்டளையிட்டிருந்தபடி அப்பெருமான் திருநிருத்த தரிசனந்தந்தருளப்பெற்று, வியாக்கிரபாதமுனிவரோடு களித்தனர். இதுபற்றியன்றே நாயனாரும், முயன்றாற் பெறவேண்டிய பயன்களை வேண்டியபடியே தாம் பெறலாமாதலால், செய்யத்தகுவதாகிய தவமானது இம்மையிலே அறிவுடையாராலே முயலப்படும். என்றருளிச்செய்தனர். எ-று. புல் - புலி.

இச்சரித்திரவிரிவைக் கோயிற்புராணத்துட் காண்க. (உஎ)

கூடாவொழுக்கம்.

அஃதாவது, தவவேடமுடையராய்நின்று அத்தவத்தோடு பொருந்தாதாகிய தீயவொழுக்கத்தினை உடையராதல்.

சந்நியா சம்புனைந்தே சானகியைத் தான்கவர்ந்தான்
முன்னிலங்கை வேந்தன் முருகேசா — துன்னும்
தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

(இ-ள்.) முருகேசா! சூர்ப்பநகையால் சீதையினது பேரழகையறிந்து காதலதிகரித்த இராவணன் இராமரைவென்று அச்சீதையைக்கவரும் வலியின்மையால் மாரீசனென்பவனை மாயமானாக முன்னர்ச்செல்லும்படி நியமித்து, அம்மாயமானைப் பிடிக்க இராமமூர்த்தியும், அவரைத்தேடி இலக்குமணரும், சென்றசமயத்தில் தான் சந்நியாசியாய்ச்சென்று, பிச்சையையேற்பான்போலநடித்து, சீதையைக்கவர்ந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், வல்லமையில்லாதநிலைமையான் தவவேடத்திலே மறைந்திருந்து தவமல்லாதவைகளைச்செய்தல் வேடன் புதலிலே ஒளித்திருந்து பறவைகளைப் பிடித்ததுபோலும். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவை இராமாயணம் சடாயுவதைப்படலத்துட் காண்க. (உஅ)

கள்ளாமை.

அஃதாவது, பிறருடைமையாயிருக்கும் யாதொருபொருளையும் அவரைவஞ்சித்துக்கொள்ள நினையாமை.

நாகவசுக் கள்வசிட்ட னற்சுரபி யைப்பற்று
மோகமல்கிக் கெட்டார் முருகேசா—போகுங்
களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும்.

(இ-ள்.) முருகேசா! வசுக்களெண்மருள்ளே இளையவன் மனைவியாகிய மாலினியென்பவள் வசிட்டமுனிவர்பாலுள்ள காமதேனுவின்பாலை உண்ணவிரும்பிக் கணவனைவேண்ட; அவன் அதனைக்கவருதற்குப் பேராசைகொண்டணுகி, அதன்முலையைப்பற்றியிழுத்தனன். அக்காமதேனுமுனிந்து அவனைநோக்கி, நீயும் நின் செய்கைக்கு உடன்பட்டிருந்த தமையன்மார்களும் காசிச்சுடலை

யிலே பிணங்களைத்தின்று அலையக்கடவீர்கள் எனச்சபிக்க; அவ்வெண்மரும் அங்ஙனமே அருந்தியிருந்து, நூறுவருடஞ்சென்றபின், முன்னே காமதேனு அருளியவண்ணமே நாரதமுனிவரது கமண்டலநீராற் பழையவுருப்பெற்றனர். இதுபற்றியன்றே நாயனாரும், பிறர்பொருளை வஞ்சித்துக்கொள்ளுதலிலே மிகுந்த ஆசையானது அப்போது இனிதுபோலத்தொன்றித் தான் பயனைக்கொடுக்கும் போது தொலையாத துன்பத்தைக் கொடுக்கும். என்றருளிச்செய்தனர். எ-று. போர்தல்-தேர்தலென்னும்பொருட்டு. வசுக்களெண்மர் :—அனலன், அணிலன், ஆபச்சைவன், சோமன், தரன், துருவன் பிரத்தியூசன், பிரபாசன்.

இச்சரித்திரவிரிவைத் திருக்கழுக்குன்றப்புராணத்துட் காண்க. எண்மரும் சந்தனுராஜன் புதல்வராயினரென்பது பாரதம்.

வாய்மை.

அஃதாவது, மெய்யினது தன்மை.

மாழ்கித் தருமனொருபொய்யுரைத்தே வன்றுயருண்
மூழ்கிமிகச் சோர்ந்தான் முருகேசா—தாழ்கலின்றிப்
பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

(இ-ள்.) முருகேசா! எவ்வகையறத்தினுமிக்க தருமர் கிருஷ்ணமூர்த்தி வற்புறுத்திக்கூறிய மொழியைமறுக்க அஞ்சி மயங்கி, துரோணாசாரியர் இறக்கும்வகை ஒருபொய்யுரைத்து, போர்முடிந்தபின் அரசுரிமைபெறத் தொடங்குந் தருணத்தில், ஆசாரியிறக்கும்படிப் பொய்கூறிப்பெற்ற பெரும்பாவத்தை அகற்றாது அரசாளுதற்கு உரியவனாகாயென்ற அசரீரியைக் கேட்டு, இதனை நீக்கும்வகை யாதோவென்று கலங்கி, வியாசர்கற்பித்தவாறே சேது

யாத்திரைசெய்து, அப்பாவத்தை அகற்றினர். இதுபற்றியன்றே நாயனாரும், பிற அறங்களெல்லாவற்றின்பயனையும் தானே தரும் ஆற்றலையுடைய பொய்யாமையையே பொய்யாமையையே ஒருவன் செய்யவல்லவனாயின், அவன் பிறவறங்களைச் செய்யாமையே செய்யாமையே நல்லது. என்றருளிச்செய்தனர். எ-று. அடுக்கு, இரண்டனுள்ளே முந்தியது இடைவிடாமையையும், பிந்தியது துணிவையும் உணர்த்தின.

இச்சரித்திரவிரிவைச் சேதுபுராணம் இராமதீர்த்தச்சருக்கத்துட் காண்க. (௩௦)

வெகுளாமை.

அஃதாவது, கோபஞ்செய்தற்குக் காரணமாகிய குற்றம் ஒருவனிடத்தே உண்டாகியவிடத்தும் கோபஞ்செய்யாமை.

சித்தரா மன்வெகுளி மூண்டிழந்தான் றீக்கண்ணை
முத்தனல்ல மன்பான் முருகேசா—நித்த
மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனான் வரும்.

(இ-ள்.) முருகேசா! சொன்னலாபுரத்தில் குளம் வெட்டல் முதலிய பசுதருமங்களை மேற்கொண்டிருந்த சித்தராமதேவர் தம்மை அத்தொழில்களினீக்கி முத்திநிலைக்குரிமையாக்குதற்பொருட்டுச் சிவசொரூபமாய்விளங்கும் அல்லமதேவர் எழுந்தருளித் தமக்குணர்த்திய நல்லறிவுகளையெல்லாம் நிந்தையாகக்கருதிக் கோபமுதிர்ந்து, தமது நெற்றிக்கண்ணால், அவரைஎரிக்கத்தொடங்கி, அக்கண்ணையிழந்து, வலிகுன்றி, அடிமையாயினர். இதுபற்றியன்றே நாயனாரும், ஒருவருக்குத் தீமையுடையவையெல்லாம் உண்டாகுதல் கோபத்தால்வரும்; ஆதலால், யாவரிடத்திலும் எக்காலத்தும்கோபத்தை மறக்கக்கடவர். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைப் பெரியபுராணத்திலே சித்தராமேசுவரர்கதையிற் காண்க. (௩௧)

இன்னாசெய்யாமை.

அஃதாவது, தனக்கொருபயனைக்குறித்தாவது வைரம்பற்றியாவது சோர்வினாலாவது ஓருயிர்க்குத் துன்பந்தருமவைகளைச் செய்யாமை.

தன்னைவதை முத்திநா தன்றனையு மெய்ப்பொருளார்
முன்னைநனி காத்தார் முருகேசா—மன்னுலகில்
இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

(இ-ள்) முருகேசா! முன்னாளிலே முத்திநாதனென்னும் ஓரரசன் மெய்ப்பொருணாயனாரோடு பன்முறை எதிர்த்துத் தோற்றோடி, பின் அவரை வஞ்சகத்தால் வெல்லத்துணிந்து, சிவவேடம்பூண்டு வந்து அவரைத் தனியேயிருத்தி, சிவாகமநூற்றுணிபை யுணர்த்துவான்போலக் கவளிகையையவிழ்த்து, அதனுள்மறைத்துவைத்திருந்த உடைவாளை அவர்வணங்கும்போதெடுத்துக் குத்துதலும், நாயனார் அவன்வ்வாறுசெய்தும், அவனுக்கு ஒருதீதும் அணுகாமல் புறத்தில்விட்டுவரும்படி தத்தனென்பவனுக்கு நியமித்து, அவன் வந்து உரைக்குமளவும் உயிர்தாங்கியிருந்து, சிற்சபாநாயகருடைய திருவடிநிழலிற்கலந்தனர். இதுபற்றியன்றே நாயனாரும், தமக்குத் துன்பந்தருமவைகளைச் செய்தவரைத் தண்டித்தலாவது, அவர் தாமேநாணும்படி அவருக்கு இனிமையான மகிழ்ச்சிகளைச் செய்து, அவ்விரண்டையும் மறத்தலாம். என்றருளிச்செய்தனர். எ-று. புத்திநாதன் என்பதும் வழக்கம்.

இச்சரித்திரவிரிவைப் பெரியபுராணம் மெய்ப்பொருணாயனார் புராணத்துட் காண்க. (௩௨)

ந்து, அக்கடவுளருளால் உயிர்பெற்றெழும்போதும் ஆட்டுத்தலை யையடைந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், நிலையில்லாதவை களை நிலையுடையவையென்று நினைக்கின்ற அற்பபுத்தியை யுடையு ராயிருக்கை மேலோர்க்கு இழிவு. என்றருளிச்செய்தனர். எ-று. உகுதல்-சிந்துதல்.

இச்சரித்திரவிரிவைக் கந்தபுராணம் இலிங்கபுராணம் கூர்ம புராணம் வாயுசங்கிதை காசிகாண்ட முதலியவற்றுட் காண்க.

துறவு.

அஃதாவது, புறமாகியசெல்வத்திலும் அகமாகியஉடம்பிலும் உண் டாகியபற்றை அவைகளின் நிலையாமைநோக்கி விடுதல்.

மேக்குவணை யின்பும் வெறுத்துச் சிவிமகவான்
மோக்கநிலை சார்ந்தான் முருகேசா—வூக்கித்
தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

(இ-ள்.) முருகேசா ! சிவியென்னும் இந்திரன் எத்துணைப்பெ ருஞ்சிறப்புடையவர்களும் சதமகஞ்செய்தாலன்றி அடைதற்கரிய மேலாகியசுவர்க்கபோகங்களை அநுபவிக்குங்காலத்திலே, அவற் றையும் அநித்தியமெனத்துணிந்து முற்றுந்துறந்து, வியாழபகவா ன் கற்பித்தவாறே காஞ்சியிற் சிவபெருமானைவழிபட்டு, முத்தி நிலையைச் சார்ந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், முழுதுந் துறந்தவர் முத்தியை அடைந்தவராவர்; அப்படித்துறவாதவர் மயக்கமுற்றுப் பிறப்பாகிய வலையிலே அகப்பட்டவராவர். என்ற ருளிச்செய்தனர். எ-று. மேக்கு உவணை - மேலாகிய சுவர்க்கம். உம்மை உயர்வுசிறப்பு. ஊக்குதல்-முயலுதல்.

இச்சரித்திரவிரிவைக் காஞ்சிப்புராணம் திருநெறிக்காரைக் காட்டுப்படலத்துட் காண்க. (௩௫)

மெய்யுணர்தல்.

அஃதாவது, விபரீத சந்தேகங்களின்றி உண்மையையறிதல்.

செம்மைப் பொருளென்னத் தேர்ந்துநினைக்கும்பமுனி
மும்மலமற் றுய்ந்தான் முருகேசா—விம்மைதனிற்
கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

(இ-ள்.) முருகேசா! உண்மைஞானவுணர்ச்சியை விரும்பிய அகத்தியமுனிவர் தமிழாசிரியத்தன்மையும் ஞானோபதேசமும் பாலித்தற்குரிய செம்பொருளாவார் யாவரெனஐயுற்று, சிவபெருமானுல் தேவரீரேயெனத்தெளிந்து, திருத்தணிகையில்வழிபட்டு, அவ்விருவிசேடமும் அருளப்பெற்று, மும்மலங்களையுமகன்று முத்திநெறிக்குரியராயினர். இதுபற்றியன்றே நாயனாரும், இம்மைப்பிறப்பினிடத்து உபதேசத்தை ஞானசாரியரிடத்தே கேட்டு, அதனுல் உண்மைப்பொருளையுணர்ந்தவர் பின்னர் இப்பிறப்பினிடத்து வாராதவழியை அடைவார். என்றருளிச்செய்தனர். எ-று. செம்பொருள் - பிறப்பிறப்புமுதலிய விகாரமின்றி எக்காலத்தும் ஒருதன்மையாவது.

இச்சரித்திரவிரிவைத் திருத்தணிகைப்புராணம் அகத்தியனருள்பெறுபடலத்துட் காண்க. (௩௬)

அவாவறுத்தல்.

அஃதாவது, புலன்களின்மேற் பழைய பழக்கவசத்தாற்செல்லும் நினைவை இடைவிடாத மெய்ப்பொருளுணர்வால் அறுத்தல்.

பற்றறுத்து வாமதேவன்பிறவாப் பான்மைபெற்றான்
முற்றியரன் பூசை முருகேசா—கற்றுணர்ந்தோர்
வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

(இ-ள்.) முருகேசா ! வாமதேவமுனிவர் மாதாவின்கருப்பத்திலிருக்கும்போதே பிறவிக்குப்பயந்து, சிவபெருமானை அன்போடு மனத்தால்வழிபட்டு, அங்கே பெருமான் பிரசன்னராகி அநுக்கிரகித்தமுறையே பூமியிலுதித்து, சகலபற்றையுமொழித்து, காஞ்சியிற் சிவபூசைசெய்து பிறவாவரம்பெற்றனர். இதுபற்றியன்றோ நாயனாரும், பிறப்புத் துன்பமாதலை ஆராய்ந்தறிந்தவன் ஒன்றைவிரும்பினால் பிறவாமையை விரும்பும்; அப்பிறவாமையானது ஒருபொருளையும் விரும்பாமையை விரும்பினால், அவனுக்குத் தானேயுண்டாம். என்றருளிச்செய்தனர். எ-று. பற்று - அவா.

இச்சரித்திரவிரிவைக் காஞ்சிப்புராணம் பிறவாத்தானப் படலத்துட் காண்க. (௩௭)

ஊழ்.

அஃதாவது, இருவினைப்பயன்களும் செய்தவனையே சென்று அடைவதற்கேதுவாகிய நியதி.

விஞ்சுகங்கைத் தம்பநுனி மேவுபரிக் கித்தரவான்
முஞ்சினனுய்ந் தோர்முன் முருகேசா—வெஞ்சவிலா
ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

(இ-ள்.) முருகேசா ! பரிக்ஷித்தென்னுமரசன் வனம்புகுந்து வேட்டையாடுகையில் அம்புபட்டு மறைந்த ஒரு மானைத் தேடிச் சென்று, சிவயோகத்திருந்த சமீகமுனிவரைக்கண்டுவினவுங்கால், அவர் தியானத்திருந்தமையால், மறுமொழிகொடாதிருத்தலை அறியாது, அரசன் அவர் தன்னை அவமதித்ததாகஎண்ணி, ஆண்டிறந்துகிடந்த ஒருபாம்பை அவர்கழுத்திலிட்டுத் தன்னகரடைந்தனன். அப்பொழுது, அம்முனிவரதுகுமாரராகிய சிரிங்கிமுனிவர் அஃதுணர்ந்து கோபமுதிர்ந்து, இங்ஙனஞ்செய்தவன் ஒருவாரத்துள் தக்ஷக

னென்னும் அரவத்தால் இறக்கக்கடவன் எனச்சபித்தமையைச் சமீகமுனிவரால் அரசன் கேள்வியுற்று, அதனை நீக்கிக்கொள்ளுமாறு கங்கைமத்தியில் ஒருதம்பத்தை நாட்டி, அதனுச்சியில் ஒருமண்டபமமைத்து, பலமுனிவர்கள்சூழத்தங்கியிருந்தும், எட்டாநாளில் சிலபாம்புகள் தக்ஷகன் கற்பித்தபடி தவவேடம்புனைந்துகொண்டு சிலகனிகளைத் தாங்கிச்சென்று, அரசனைக்கண்டு கொடுக்க; அவன் அவற்றையெல்லாம் சூழ்ந்த முனிவர்களுக்குக் கொடுத்துவிட்டு, தக்ஷகன் கிருமியுருக்கொண்டு மறைந்திருக்கும் சிறந்த இலந்தைக்கனியைத் தான்கைக்கொண்டு நோக்கி, அதில் அக்கிருமியைக்கண்டு, இது நம்மைக்கடிக்குமோவென்னும் ஐயத்தால் அதனைத் தனதுகழுத்திலழுத்தி, அதனாற்கடிக்கப்பட்டு மடிந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், தன்னை விலக்குதற்பொருட்டுத் தனக்குப்பகையாகிய ஒரு உபாயத்தை ஆராய்ந்தாலும், தான் அவ்வுபாயத்தையாவது மற்றொன்றையாவது வழியாகக்கொண்டுவந்து, அவ்வாராய்ச்சிக்கு முற்பட்டு நிற்கும்; அதனால் ஊழ்போல மிகுந்த வலிமையுடையவை எவையிருக்கின்றன? என்றருளிச்செய்தனர். எ-று. தக்ஷகன் எனுமிச்சம்பழமாகியினனென்பதும் சரித்திரம்.

இச்சரித்திரவிரிவைச் சேதுபுராணம் காசிபச்சருக்கத்தும், பாகவதம் பாரதமுதலியவற்றும் காண்க. (௩௮)

அறத்துப்பால் முற்றிற்று.

பொருட்பால்.

இறைமாட்சி.

அஃதாவது, அரசனது நற்குண நற்செய்கைகள்.

உற்றபுற வம்புரப்பா னேங்குசிபி தன்னுடல
முற்றுமரிந் தீந்தான் முருகேசா — பற்றும்
முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

(இ-ள்.) முருகேசா! சிபிச்சக்கரவர்த்தியென்னுமரசன் சிவபத்தியிற்சிறந்து எவ்வுயிர்க்கும் இடையூறுவாராமல் உலகமுழுதுமாளுநாளில், சீர்காழியையடைந்து, சிவபெருமானைக் குறித்து ஒரு யாகமியற்ற; அப்போது சிவபிரான் இந்திரனையும் அக்கினியையுமழைத்துச் சிபியினது நீதியை உலகில் வெளிப்படுத்துவீராக எனக்கட்டளையிட்டனர். உடனே இந்திரன் கழுகுருக்கொண்டு துரத்தும்படி அக்கினிதேவன் புறாவுருக்கொண்டு அரசனையடைக்கலமாகச்சேருங்கால், அவன் அப்புறாவிற்குமிரங்கி அபயாஸ்தம் அளிக்குஞ்சமயத்தில், கழுகுசென்று எனக்கு உணவாகும்புறாவைப்பற்றுவது நீதியல்ல; விடுக என்ன; அவன் இதனைவிடேன் இதற்குப்பதிலாக ஒருயிரையுங்கொல்லாது என்னுடற்றசையையேதருவேன்: எவ்வாறு பெற்றுக்கொள்கின்றனை? என்று வினவி, அதுகேட்டவகையே அரசன் மூவுலகமும் வியக்க அந்த யாகசாலையிலே ஒரு துலையில் தனது உடற்றசையைக் கழுத்தளவும் அரிந்திட்டும் புறாவிற்கு ஒவ்வாமைகண்டு, தானும் அத்தட்டிலேறிச் சமமாக்கினன். அதுகண்ட இந்திரனுஞ்சித் தன்னுருவொடு தோன்றி, தாமிருவரும் சோதிக்கவந்தமையைத் தெரிவித்து நீங்க; அரசன் அறுபட்ட உடலம் வளரப்பெற்று யாகத்தைப் பூர்த்திசெய்து,

அப்போது சிவபிரான் எழுந்தருளி அநுக்கிரகித்தபடியே சிலநாள் பூமியையாண்டு சிவபதமடைந்தனன். இதுபற்றியன்றே ஈரய ஞரும், தான் நீதிசெலுத்திப் பிறர்வருந்தாமற் காத்தலுஞ்செய் யும் அரசனனவன் பிறப்பினலேமனிதனேயாயினும், செயலினலே மனிதர்களுக்குக் கடவுளென்று உயர்த்திவைக்கப்படுவான். என் றருளிச்செய்தனர். எ-று. உம்மை-இழிவுசிறப்பு. பற்றுதல்-மேற் கொள்ளுதல். இந்திரன் வேடனயினனென்பதும் சரித்திரம்.

இச்சரித்திரவிரிவைச் சீர்காழிப்புராணம் புறவவத்தியாயத்து ம், பாரதம் தருமர்தீர்த்தயாத்திரைச்சருக்கத்தும் காண்க. ()

கல்வி.

அஃதாவது, அறநூல்முதலியவற்றைக் கற்றலின் சிறப்பு.

மன்னியின்பந் துய்த்தசங்க வாணர்நக்கீ ரற்பிரிவை
முன்னிமுன்னிச் சோர்ந்தார் முருகேசா—நன்னர்
உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில்.

(இ-ள்.) முருகேசா! கபிலபரணர் முதலிய சங்கத்தார்கள் தம்புலமையையறிந்து முழம்வளர்ந்து இடந்தரத்தக்கதாய் முழ த்தினளவினதாகிய ஒருபலகையைச் சிவபெருமானுற்பெற்று, மது ரையிலே தமிழைவளர்த்து வாழ்ந்திருக்கும்போது, தம்மிற்சிற ந்த பேரறிவுடைய நக்கீரதேவநாயனர் தருமியென்பவர்க்குச் சிவ பெருமானருளிய *"கொங்குதேர்வாழ்க்கை"என்னும் செய்யுளுக் குக் குற்றங்கூறி, அதனல்நேரிட்ட ஆபத்தினிமித்தம் அக்கடவுள் பணித்தவாறே திருக்கைலையைத்தரிசிக்கப் பிரியுங்காலத்து, முன்

---

*கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி, காமஞ் செப்பா து கண்டது மொழிமோ, பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற், செறியெயிற் றரிவை கூந்தலி, னறியவு முளவோநீ யறியும் பூவே.

னர் அவராலனுபவித்த கல்வியின்பத்தை நினைந்துநினைந்து கலங்கினர். இதுபற்றியன்றே நாயனாரும், கற்றறிந்தவரது தொழிலாவது, தாம் நல்வழியொழுகுதலை மேற்கொண்டு பிறர்க்கு இன்பம் விளையும்வகை உறுதிமொழிகளை இனிது உணர்த்துதலால் யாவரும் மகிழும்படி அவரைச் சேர்ந்திருந்து, இனி இவ்வின்ப நுகருமாறு இவரை நாம் எக்காலம் காண்போமென்று நினைக்கும்படி நீங்குதலாகிய அத்தன்மையுடையதாம். என்றருளிச்செய்தனர். எ-று. நன்னர் - நன்கு.

இச்சரித்திரவிரிவைச் சீகாளத்திபுராணத்துட்காண்க. (சo)

கல்லாமை.

அஃதாவது, கல்லாமையின் இழிவு.

ஈண்டிவச வேசர்முன் னோர்க் கீடழிந்தார் வீண்வாத
மூண்ட மறையோர் முருகேசா — வேண்டுவன
கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

(இ-ள்.) முருகேசா! வேதாகம ஆராய்ச்சியில்வல்ல வசவதேவர் சென்னவசவதேவர் மடிவாலமாச்சையர் சிவநாகமையர் முதலிய அளவிறந்த அடியவர்கள் கலியாணபுரியென்னும் நகரத்தின்கண் சிவபூசைமுதலிய சிறந்த செயல்களிற்பயின்று ஒழுகுதலைக்கண்டு பொறாமைகொண்ட பிராமணர்கள் விச்சலராசன் சபையில், அவ்வடியவர்களது கொள்கையைமறுத்துத் தமது வைதிகக்கொள்கையைத் தாபிக்கஎதிர்த்து, வீணே தருக்கஞ்செய்து, மறுமொழிகொடுக்கும் வகையறியாது பெருமையிழந்தனர். இதுபற்றியன்றே நாயனாரும், நூல்களைக் கற்காதவொருவன் அறிவுடையேனென்று தன்னை மதிக்கும் மதிப்பானது, அவைகளைக்கற்றவன் கண்டுபேசக் கெடும். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவை வசவபுராணத்துட்காண்க. (சுக)

கேள்வி.

அஃதாவது, கேட்கத்தகும் நூலின்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக் கேட்டல்.

அத்தனையி மப்பலியா லர்ச்சித்து வேந்துரையின்
முத்திபெற்றான் சண்டன் முருகேசா—நத்தி
எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்.

(இ-ள்.) முருகேசா ! சிங்ககேதுவென்னும் அரசனோடு வேட்டைக்குச்சென்ற சண்டனென்னும்வேடன் ஒருகோயிலில் சிதைந்துகிடந்த ஒரு சிவலிங்கத்தைக்கண்டு, அதனை ஆவலோடுகொணர்ந்து, அரசன்முன்னர்வைத்து வணங்கி, இதனைப் பூசித்தற்குரிய நியமங்களைப் போதித்தருளல்வேண்டுமென்று பிரார்த்திக்க; சண்டனே ! நீ பூசாதிரவியங்களோடு சுடலைச்சாம்பலையுங்கொண்டு பூசிப்பாயாக என்று விநோதமாகச் சொற்றனன். அவ்வேடன் அதை உறுதியாகக்கொண்டு பூசிக்குநாளில் ஒருநாள், சிவபிரான் திருவருளாற் சுடலைச்சாம்பல் கிடையாதொழிய; மனந்தளர்ந்து, தன் விரதங்குன்றாமல் இறத்தற்குடன்பட்ட மனைவியைநீறாக்கி, அச்சாம்பலைக்கொண்டு பூசையைமுடித்து, அம்முடிவில் உயிர்பெற்று எந்நாளும்போலவே நின்மாலியமேற்றுநின்ற மனைவியைக்கண்டு, களிகூர்ந்து, அவளோடு முத்தியடைந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், ஒருவன் உறுதிப்பொருள்களிலே எவ்வளவு சிறிதாயினும் கேட்கக்கடவன் ; அக்கேள்வியானது, அவ்வளவினாலும் நிறைந்த பெருமையைத் தரும். என்றருளிச்செய்தனர். எ-று. நத்துதல் - விரும்பல்.

இச்சரித்திரவிரிவைப் பிரமோத்தரகாண்டம் ... வபூ
சைகடைப்பிடித்தஅத்தியாயத்துட் காண்க. (சஉ)

அறிவுடைமை.

அஃதாவது, கல்வி கேள்விகளினாலாகிய அறிவோடு உண்மை யறிவை உடையனாதல்.

ந்தையுன்னி நீங்கினன்சு சீலன் புயபலன்பின்
முத்தேர்கோட் பட்டான் முருகேசா—வோதில்
அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா
ஃதறி கல்லா தவர்.

(இ-ள்.) முருகேசா ! வங்கதேயத்தையாண்ட, புயபலனெ
னுமரசன் ஒருஉத்தராயண புண்ணியகாலத்தில் மிகவும் தானமளி
க்க உத்தேசித்திருப்பதைச் சுசீலரென்னுமந்தணர் கேள்வியுற்று,
தர்ப்பநாட்டையகன்று அணுகலும்,அவருடையபெருமையை அந்
ணராலுணர்ந்த அரசன் எதிர்கொண்டுவணங்கி,ஆசனத்திருத்தி,
திருகையினும் நிதியைமுகந்து அளிக்க; அச்சுசீலர் மகாராஜா
வ ! நீர் நெற்றியிலே விபூதியணிந்துகொண்டுதந்தால், இதனை
ற்பேன் : எனக் கூறினர். அவன் அவ்விபூதியால் யாது பயன் ?
ன்று அறிவின்மையால் இகழ்ந்து, விபூதியணியேன் ; உடன்பா
டல், ஏற்றுச்செல்லும். என்றுரைக்க ; அச்சுசீலர் பின்விளைவுநோ
கி, நீ சிவாபராதியாதலின் இத்தானத்தை வாங்கேன் என்றுரை
த்துச் செல்லுந்தருணத்தில், அரசனதுமனைவி மூக்கிலே துரும்பை
ட்டுத் தும்மித் தடுக்கவும், உடன்படாது தமது நகரையடைந்த
ார். அரசன் விபூதியையிகழ்ந்த பெருங்குற்றத்தால் பெரும்பிணி
டையனாகி, தன்னாட்டைப் பகைவர் கவர்ந்துகொண்டமையால்
னத்தையடைந்து, வருந்தியிருக்கும்பொழுது, ஒருவேடன் அவன்
னைவியைக் கவர்ந்துசென்று ஒருபுலிதாக்கலால்மடிய, அவள்மா

த்திரம் பிழைத்து, விதர்ப்பநாடடைந்து, ஏற்றருந்திப் பசிதணியாமல் ஒருவீட்டில் களவுசெய்து, காவலரால் மூக்கும் தனமும் அறுபட்டு, வருந்தியலைந்தனள். இவளிவ்வாறாக; அரசனும் இவளுக்குமுன்னமே அந்நாட்டையேயடைந்து, ஏற்கத்தகாத மனைகளிலும் ஏற்றருந்தி, பசிப்பிணி தணியாமையால் களவுபயின்று, ஒருநாளிரவில் அரணேறிக்குதிக்க; காவலர்கள் காலுங்கையும் துணித்தமையால் முடவனாகி ஓட்டிலே ஏற்றருந்தியுழன்றனன். அந்நாட்களில் ஒருநாள் அரசன் சுசீலர்வீட்டையடைந்து, உணவு வேண்ட; அவர் ஐயுற்று, அவனைநோக்கி, நீயாவன்? என்றுவினாவி, அவன் மறுமொழிகொடாதிருத்தலின் நீ விபூதியை இகழ்ந்து எம்மை அவமதித்த புயபலனல்லையோ? என்றனர். அரசன் திடுக்கிட்டுவணங்கி, அடியேன் அறியாமையாற்செய்த பிழையைப் பொறுத்து விபூதியளித்து ஆட்கொள்ளவேண்டும் என்று பிரார்த்தித்து, அவரளித்த விபூதியை அணிந்து உட்கொண்டவுடன், வெட்டுண்ட கைகால்கள் வளர்ந்துநின்ற தருணத்தில், அவ்வீதிவழியே வந்து வணங்கிய மனைவியை நீயாரென்றுவினவி, அவளுடைய வாய்மொழியால் மனைவியென்பதையுணர்ந்து, சுசீலரைவணங்கி, அவளுக்கும் விபூதியளிக்கும்படி வேண்டினான். அவரளித்த விபூதியினால் அவளும் முன்போலவே வெட்டுண்டவுறுப்புக்கள் வளரப்பெற்ற அற்புதத்தை அந்நாட்டரசன்கேட்டுச் சுசீலரையடைந்து வணங்கி, தன்மாமனாகிய அப்புயபலனை மாமியோடுமழைத்துச்சென்று, உபசரித்துவைத்திருந்து, சேனைகளை உடன்கூட்டியனுப்ப; புயபலன்சென்று, அப்போது தன்னாட்டையாளும் அரக்கனைவதைத்து, சிலநாள் வாழ்ந்திருந்து, சிவபதமடைந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், வரக்கடவதை முன்னே அறியவல்லவர் அறிவுடையராவார்; அவ்வரக்கடவதை முன்னேயறியமாட்டாதவர் அறிவில்லாதவராவார். என்றருளிச் செய்தனர். எ - று.

இச்சரித்திரவிரிவை உபதேசகாண்டம் விபூதிமான்மியத்திற் காண்க. (சரு)

குற்றங்கடிதல்.

அஃதாவது, காமம், குரோதம், உலோபம், மானம், உவகை, மதம் என்னும் குற்றங்களை அகற்றுதல்.

தெய்வநிதி யாதிகவர் தீமையின் மனோசவன்தான்
மொய்வளந்தோற் றேய்ந்தான் முருகேசா—வுய்யச்
செயற்பால செய்யா திவறியான் செல்வ
முயற்பால தன்றிக் கெடும்.

(இ-ள்.) முருகேசா! மனோசவனென்னுமரசன் சிவபிரான் முதலிய கடவுளரையும் அந்தணர்முதலிய பெரியோரையும் வழிபட்டுப் பகைவரைவென்று, அநீதிகலவாவண்ணம் உலகத்தை ஆளுநாளில், செல்வக்களிப்பால் அகங்கரித்து, ஆலயங்கட்குரிய நாடு பொருண்முதலியவற்றைக் கவர்ந்தமையேயன்றி, அந்தணர் முதலியோர் நிலங்கடகும் இறைப்பொருள் வாங்கினன். இப்பெரும்பாதகத்தால் ஊணதேசாதிபதியாகிய கோலன் எதிர்த்து யாவும் கவர்ந்துகொள்ள வனத்தையடைந்து, உழலுநாளில் ஒருநாள், சந்திரகாந்தனென்னும் புத்திரன் உணவுவேண்டிச்சோர; அரசன் சுமித்திரையென்னும் மனைவியைநோக்கித் தான் முன்செய்த கொடுமைகளையெல்லாங்கூறி, மூர்ச்சித்தயர்ந்து, பூர்வபுண்ணியத்தினற் பராசரமுனிவரருளைப்பெற்று, பழயநிலைமையை அடைந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், பொருளினாலே தனக்குச் செய்துகொள்ளவேண்டியவற்றைச் செய்துகொள்ளாமல் உலோபஞ்செய்தவனது செல்வமானது பின்னுள்ளதாகும் பகுப்பினதன்றி வீணேகெடும். என்றருளிச்செய்தனர். எ-று. மனோசவன், தீமையின் தோற்று தான் ஏய்ந்தானெனக் கூட்டுக.

இச்சரித்திரவிரிவைச் சேதுபுராணம் மங்கலதீர்த்தச்சருக்கத்திற் காண்க (௪௪)

பெரியாரைத்துணைக்கோடல்.

அஃதாவது, தீநெறிவிலக்கி நன்னெறியிற்செலுத்தும் பேரறிவுடையாரைத் தனக்குத் துணையாகக் கொள்ளுதல்.

நாரதனாற் சம்வரத நற்றவற்சேர்ந் தேமருத்து
பூரியின்மேம் பட்டான் முருகேசா—பாரதனில்
உற்றநோய் நீக்கி யுறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

(இ-ள்.) முருகேசா! மருத்தென்னுமன்னவன் தன்பிதா ஆங்கிரசென்னுமுனிவரால் யாகமியற்றியிருத்தலின் தானியற்ற உத்தேசித்தயாகத்திற்கு அம்முனிவர்புத்திரராகிய வியாழபகவானை வணங்கிவேண்ட; அவர் தேவேந்திரனுடைய உடன்பாடின்மைநோக்கி, யான் தேவகுருவாயிருத்தலின் வருதற்கிசைவில்லையென்றனர். அரசன் கவலையுற்றிருக்குந்தருணத்தில் நாரதராணுகி, அவன்கருத்தையறிந்து, வியாழபகவானோடுநேர்ந்த விரோதத்தால் அவர்க்கிளையவராகிய சம்வரதமுனிவர் திகம்பரராய் உன்மத்தர் போலநடித்துக்கொண்டு, காசியில்வசிக்கின்றார். அவரைக்கொண்டியற்றுகவென்று அவரைக்காணும்வகையையும் உரைத்துச்செல்ல;அவ்வாறே அம்முனிவரை விடாதுதொடர்தலும், அவர் திருவுளமிரங்கி, வியாழபகவானுக்கு என்பாலுள்ளபகைமையால் இந்திரன்முதலியோர் நின்னைக்கலைப்பர்; அதனாலே மாறுபடாதிருப்பையாயின் மிகவும் மேன்மையையடைவாயென வற்புறுத்திக்கூறி, அவனுடன்பாடறிந்து, அழைத்துச்சென்று,முஞ்சவந்தமலையையடைந்து, சிவபெருமானைப்பணிந்து, அக்கடவுளருளால் அளவில்லாதநிதிக்குவியல்களை ஒட்டகம் யானைமுதலியவற்றில் ஏற்

திவந்து, மேருமலைபோலக் குவித்துக்கொண்டு, தாம் ஆசிரியரா யிருந்து, யாகத்தை ஆரம்பித்தனர். அப்போது இந்திரன் வியாழ பகவானுடைய மனக்கவலையையறிந்து, அவரையே ஆசிரியராகக் கொண்டு அதையழியபற்றுமாறு அக்கினிதேவனால் அரசனுக்குணர்த்தியும் அவனுடன்படாமையால் எதிர்த்து, வச்சிராயுதத்தை யெறிய; அவ்வரசன் சம்வரதமுனிவர்பால் அடைக்கலம் புகுந்தமையால் அவர் ஒருமந்திரத்தினால் அதைத்தடுத்ததுமன்றி அரசன்வேண்டியவாறே மற்றொருமந்திரத்தால் தேவர்பகையையும் தணித்து, அவர் அவியருந்தும்படி யாகத்தைமுடித்தனர். அரசன் வேண்டியமட்டும் அந்தணர்முதலியோர்க்குப் பற்பல தானங்களை யுமளித்தும், குறைவில்லாமல் திரவியமிஞ்சிக்கிடக்க, அம்முனிவரால் எல்லாப்பெருமைகளையுமடைந்து இன்புற்றனன். இதுபற்றியன்றே நாயனாரும், தெய்வத்தாலாவது மனிதராலாவது தனக்குவந்த துன்பங்களை நீக்கும்விதமறிந்துநீக்கி, பின்பு அவை வராதபடி முன்னறிந்துகாக்கவல்ல தன்மையுடையவரை அரசன் அவர் மகிழத்தக்கவைகளைச் செய்து, துணையாகக் கொள்ளக்கடவன். என்றருளிச்செய்தனர். எ-று. மாண்-பெருமை, வன்மை.

இச்சரித்திரவிரிவைப் பாரதம் அசுவமேதபருவம் மருத்துயாகச்சருக்கத்துட் காண்க. (சரு)

சிற்றினஞ்சேராமை.

அஃதாவது, அறிவை வேறுபடுத்தி இருமையுங்கெடுக்கும் இயல்பையுடைய சிறியவினத்தைப் பொருந்தாமை.

வாக்கரசர் சாவகரான் மாழ்கித் தமக்கையால்
மோக்கநிலை பெற்றார் முருகேசா—பார்க்குங்கால்
நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில்.

(இ-ள்.) முருகேசா! திருநாவுக்கரசு நாயனார் கீழ்மக்களாகிய சமணர்களுடைய சேர்க்கையால், அவர்கள் விடமூட்டியும், யானையையேவியும், நீற்றறையிலிட்டும், கல்லோடுபிணித்துக் கடலிற் செலுத்தியும், மிகுந்ததுன்பமே செய்யப்பெற்றுக் கலங்கி, தம்மில் மூத்தவராகிய திலகவதியாருடைய கூட்டரவினால் சூலைநோய்தீரப்பெற்று, முத்திநெறிக்குரியராயினார். இதுபற்றியன்றே நாயனாரும், ஒருவனை அறியாமையினீக்கித் துயரடையாமற்காத்தலின் நல்லவினத்தின்மிக்க துணையுமில்லை; அறிவினீக்கித் துயரடைவித்தலின் தீயவினத்தின்மிக்க பகையுமில்லை. என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைப் பெரியபுராணத்துட் காண்க. (சுசு)

தெரிந்துசெயல்வகை.

பாண்டவர்செல் வங்கவர்வான் பண்டுதுரி யோதனன்றான்
மூண்டிழிந்தான் மாய்ந்தும் முருகேசா-வேண்டுங்கால்
எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு.

(இ-ள்.) முருகேசா! துரியோதனன் தனக்கு வேண்டியமட்டும் ஐசுவரியமிருந்தும், அவ்வளவிலே அமைதிபெறாமையால், சகுனிமுதலியோருரைத்த வார்த்தையைத்துணிந்து, பாண்டவர்க்குரிய ஐசுவரியங்களையும் அபகரிக்கஎண்ணி, நீதியோடு பொருந்தாத பலமுயற்சிகளைச்செய்து, போரின்மூண்டு, துரோணர்முதலிய பெரியோரும் கன்னன்முதலிய உரியோரும் ஆபத்துவாராவண்ணம் தன்னைக்காத்தும் மடிந்தமையேயன்றி உலகத்தாரால் இகழவும் பட்டனன். இதுபற்றியன்றே நாயனாரும், அரசர் தொழின்முடித்தற்பொருட்டுத் தமதுநிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்வாராயின் உலகமானது அங்கீகரியாது இகழும்; ஆதலால்,

அவ்வுலகம் இகழாத உபாயங்களை [illegible]ந்து செய்யக்கடவர். என்றருளிச்செய்தனர். எ-று. [illegible]-இழிக்கப்படுதல்.

இச்சரித்திரவிரிவைப் பாரதத்துட் காண்க. (சுஎ)

வலியறிதல்.

அஃதாவது, பகைவரைத் தண்டஞ்செயக்குறித்தவன் இரு திறத்தினுமுள்ள வலிமைகளை அளந்தறிதல்.

வாரிசுதை வவ்வுமுவ ணத்தையெதிர் வானவர்கண்
மூரியிழந் தெய்த்தார் முருகேசா—தேரின்
உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்.

(இ-ள்.) முருகேசா! காசிபமுனிவர் மனைவியருள்ளே கத்திருவென்பவள் ஒருநாள் இந்திரனது உச்சயிச்சிரவாவென்னுங் குதிரை அணுகக்கண்டு, வினதையை நோக்கி, இதன்வால் வெண்மையோ கருமையோ? என்றுவினவி, அவள் வெண்மையேயென்றுரைக்கத் தான் கருமையேயென்றனள். அப்போது தோற்றவள் மற்றவளைச்சுமப்பதாக இருவரும் வாக்குத்தத்தம் செய்துகொண்டமையின், கத்திரு தன்மகனாகிய கார்க்கோடகனால் அதன்வாலைக் கருமையாக்குவித்து, வினதைக்குக்காட்டி, தன்னைச் சுமக்கும்படி அவளை அடிமையாக்கிக்கொண்டனள். இவ்வாறிருக்க; இதற்குமுன்னே பெருவிரலளவு உருவத்தையுடையவர்களாகிய வாலகில்லியர்கள் காசிபமுனிவர் செய்யும் யாகத்திற்குரிய திரவியங்களைக் கொண்டுவரும்போது, பசுவின்குளம்பழுந்திய குழியிலுள்ளநீரில் உடம்புமுழுதும் அமிழ்ந்தக்கண்டு இந்திரன்நகைக்க; அம்முனிவர்கள்கோபித்து, இந்தயாகத்திலே இந்திரவிரோதியாய் ஒருவன் உதிக்கவேண்டுமென அவிசொரிந்தனர். அவ்வாறுதித்த கருடன் தனதுதாயாகிய வினதையைச் சிறையினின்றும் விடு

வித்தற்குப் பாம்புகள் கேட்டபடியே விண்ணுலகடைந்து, காவலையழித்து, அமுதத்தைக்கவர்ந்து மீளுங்கால், இந்திரன்முதலியோர் கருடனதுவலிமையை வியாழபகவானாலறிந்திருந்தும் வீணேயெதிர்த்து, வன்மையிழந்து இளைத்தனர். இதுபற்றியன்றே நாயனாரும், தலைவனாதலையுடைய தமது வலிமையினளவைத் தெரிந்துகொள்ளாதவராகி, மனவெழுச்சியால் தம்மின்வலியவரோடு போர்செய்யத்தொடங்கி, அவர்வருத்த, அது செய்துமுடிக்கப்பெறாது நடுவிலேகெட்டவர் உலகத்துப் பலருளர். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைக் காஞ்சிப்புராணம் முத்தீசப்படலத்தும், சேதுபுராணம் பாரதம் காசிகாண்டமுதலியவற்றும் காண்க.

காலமறிதல்.

அஃதாவது, வலிமையினால்மிகுதியுடையனாய்ப் பகைவன்மேற்
போர்க்குச்செல்லுமரசன் வெல்லுதற்கேற்ற
காலத்தினையறிதல்.

சிந்துபதி யைத்தந்தை யோடிறுத்தான் செவ்வியுற
முந்துவிச யன்றான் முருகேசா—அந்தலின்றி
எய்தற் கரிய திணையந்தக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயல்.

(இ - ள்.) முருகேசா! பதின்மூன்றாநாட்போரிலே அருச்சுனன் என்புத்திரனாகிய அபிமன்னுவை வஞ்சித்துக்கொன்ற சயத்திரதனை நாளை அத்தமயனத்திற்குள் கொல்லாதொழிவனேல் எரியில் மூழ்கக்கடவேனெனச் சூளுரைத்து, அன்றிரவில் கிருஷ்ணமூர்த்தியோடு திருக்கைலையையடைந்து, சிவபெருமானைவணங்கி வில்லுங்கணையும்பெற்று மீண்டு, பதினான்காநாட்போரில் துரோணாசாரியர்வகுத்த அணிவகுப்பால் அப்பகைவனைக்கொல்லுதற்குச் சமயங்கிட்டாதொழிய மனங்கலங்கி, பின்னர் கிருஷ்ணமூர்த்தி

உதவியால் சமயம்வாய்க்க; உடனே அவனைக்கொன்று, அவன் தலையைக் கீழ்விழச்செய்பவனது [illegible]ளாகும்படி தருப்பணஞ் செய்துகொண்டிருந்த அவன்பிதாவினுடைய கரத்திலேயே அத் தலையை விழச்செய்து, அவனையுமடித்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், பகையைவெல்லக் கருதுமரசர் தம்மாலே பெறுதற் கரிய காலம்வந்து கூடியக்கால் அதுநிற்குமளவிலேயே அக்கா லம் வராததற்குமுன்னே செய்தற்கரியவையாயிருந்த தொழில்க ளைச் செய்யக்கடவர். என்றருளிச்செய்தனர்.எ-று. செவ்வி-சமயம். இச்சரித்திரவிரிவைப் பாரதத்துட் காண்க. (சக)

இடனறிதல்.

அஃதாவது, வெல்லுதற்கேற்ற நிலத்தையறிதல்.

சென்னியனீ கத்தைமோ திச்சிதைத்த தோர்கோழி
முன்னுறையூர்க் கானிடை முருகேசா—மன்னுலகில்
அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின்.

(இ-ள்.) முருகேசா! மநுகுலத்துதித்த சனநாதவளவனு டைய புத்திரனாகிய அரசகுளாமணியென்பவன் தேயவளங்களைக் காணவிரும்பிப் புறப்பட்டு, பலதிவ்வியதலங்களைத் தரிசித்துக்கொ ண்டு, திரிசிராமலையின் மேல்பாலுள்ள உறையூர்க்காட்டை அடை யும்போது, அங்குள்ள ஒருகோழியானது அந்த இடத்தின்வலிமை யால் அவனுடைய பெருஞ்சேனைகளிற்பாய்ந்து, பட்டத்துயானை முதலியவற்றையும் மோதி, கலங்கும்படிச்செய்தது. அதுகண்ட அரசன் இஃது இவ்வாறுசெய்தற்கு ஏது இந்த இடத்தின்வலி மையே எனத்துணிந்து, அங்கு ஒருநகரமுண்டாக்கி, அதனை இரா சதானியாகக்கொண்டனன். இதுபற்றியன்றே நாயனாரும், ஒரு வர் பகைவரிடத்திலே தொழில்செய்யும் விதங்களையெல்லாம் கு

றையாமல்ஆலோசித்து, இடத்தோடுபொருந்தச் செய்வாராயின், அச்செயலுக்குத் தமதுதைரியமல்லாமல் வேறொரு துணைவேண்டு வதில்லை. என்றருளிச்செய்தனர். எ - று.

இச்சரித்திரவிரிவைச் செவ்வந்திப்புராணம் சூரவாதித்த சருக்கத்துட் காண்க. (ருo)

தெரிந்துதெளிதல்.

அஃதாவது, பிறப்பு குணம் அறிவு என்பவைகளையும் செய்கையையும் காட்சிமுதலியபிரமாணங்களால் ஆராய்ந்து தெளிதல்.

தீதெனுமி ராக்கதனைத் தேர்மித் திரசகன்றான்
மூதரக்க னானான் முருகேசா—வாதலினால்
தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா விடும்பை தரும்.

(இ - ள்.) முருகேசா! அயோத்தியையாண்ட மித்திரசகனென்னுமரசன் வேட்டையாட வனஞ்சென்றபொழுது, அங்கெதிர்த்த அரக்கரிருவருள்ளே மூத்தவனைமடித்தலும், இளையவன் வருத்தமுற்று, அவ்வரசனை வஞ்சிக்கக்கருதி, வேடமாறிவர; அரசன்அவனைப் பிறப்புமுதலியவற்றால் உற்றுணராது பாகஞ்செய்தற்றொழிலில் நியமித்தான். அவ்வரக்கன் சமயத்தைநோக்கிக்கொண்டிருந்து, சிராத்தகாலத்திலே அரசனது குலகுருவாகிய வசிட்டமுனிவருக்கு நரமாமிசத்தைச் சமைத்துப் படைத்துவிட்டுமறைய; அவ்வரசன் அம்முனிவர்முனிந்து சபித்தவாறே அரக்கனாகியுழன்றனன். இதுபற்றியன்றே நாயனாரும், தன்னோடு சம்பந்தமில்லாதவனைப் பிறப்புமுதலானவைகளாலும் செய்கையாலும் ஆராய்ந்திலனாகித் தெளிந்த அரசனுக்கு, அத்தெளிவு அவன்சந்ததிமுறையினும் நீங்காத துன்பத்தைத்தரும். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைப் பி... ...ாண்டம் சிவதானமகி ழைம்யிலும், பாகவதம் கன்மாடபாதன்சரித்திரத்தும் காண்க. ()

தெரிந்துவினையாடல்.

அஃதாவது, தெளியப்பட்டவரை அவர்செய்யவல்ல தொழில் களையறிந்து அவைகளிலே ஆளுந்திறம்.

காண்டலின்றிச் சச்சந்தன் கட்டியங்கா ரற்கரசை
யீண்டளித்து மாண்டான் முருகேசா—வேண்டி
எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகு மாந்தர் பலர்.

(இ-ள்.) முருகேசா! ஏமாங்கதநாட்டிலே இராஜமாபுரத்தை யாண்ட சச்சந்தனென்னுமரசன் விதையதேசத்தரசனாகிய ஸ்ரீதத் தன்மகள் விசையையென்பவளைமணந்து, அவள்பால் அனவரதமு ம் இன்பநுகரவேண்டிஎழுந்த வேட்கைமிகுதியால், கட்டியங்கார னென்னும் மந்திரியின்நிலைமையைத் தொழில்வகையால் ஆராயாம லே, தனதுநாட்டை நிமித்திகனென்னும் மந்திரிமுதலியோர் உண ர்த்திய உறுதியையும் அங்கீகரியாமல் ஒப்புவித்து, சுகித்திருக்குங் கால், அவனாலெதிர்க்கப்பட்டு வெல்லுமாற்றலிழந்து மடிந்தனன். இதுபற்றியன்றோ நாயனாரும், எல்லாவகைகளாலும் ஆராய்ந்து தெளிந்து தொழிலைவைத்தபின்னும் அத்தொழிலியல்பினாலே வேறு படுகின்ற மனிதர் உலகத்திலேபலர். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைச் சீவகசிந்தாமணி நாமகளிலம்பகத்துட் காண்க. (ருஉ)

சுற்றந்தழால்.

அஃதாவது, தனது சுற்றத்தாரைத் தன்னைவிட்டு நீங்கா வண்ணம் தழுவுதல்.

எய்த்து மகத்திறந்துஞ் சூர னிளையோரான்
மொய்த்தவளம் பெற்றான் முருகேசா—மெய்த்த

விருப்பமுச் சுற்ற மியையி னருப்பமு
வாக்கம் பலவுந் தரும்.

(இ-ள்.) முருகேசா ! சூரபத்மன் மிகமுயன்று அரிய வேள்வி புரிந்து, சிவபெருமான் எழுந்தருளாமையினால் வருந்தி, அவ்வேள்வியில் விழுந்திறந்தும், பின்னர் தன்பாலன்புமிக்க சிங்கமுகன் தாரகனென்னும் இளையோரால் அவ்வேள்வி முடிக்கப்பட்டவிடத்துப் பிரசன்னராகிய அப்பெருமானருளால் உயிர்பெற்றெழுந்து, ஆயிரத்தெட்டு அண்டங்களினரசுரிமையையும் பிறவற்றையும்பெற்று, மேம்பட்டுவாழ்ந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், அன்புநீங்காத சுற்றமானது ஒருவனுக்குக் கிடைக்குமாயின், அது கிளைத்தல்நீங்காத பலசெல்வங்களையும் அவனுக்குக் கொடுக்கும். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைக் கந்தபுராணத்துட் காண்க. (ருரு)

பொச்சாவாமை.

அஃதாவது, அழகும் செல்வமும் ஆற்றலும் முதலானவைகளால் மகிழ்ந்து தன்னைக்காத்துக்கொள்ளுதல்முதலிய காரியங்களில் சோர்தலைச்செய்யாமை.

கோடியர்தன் போற்றேன்றக் குன்றிமதர்க் கும்பமுனி
மூடுவெண்ணோ யுற்றான் முருகேசா—நாடுங்கால்
முன்னுறக் காவா திழுக்கியோன் றன்பிழை
பின்னூ றிரங்கி விடும்.

(இ-ள்.) முருகேசா ! அகத்தியமுனிவர் பல தலங்களையும்வணங்கி, திருக்கோடிகாவையடைந்து, சித்தசுத்தியோடு தினமும் சிவபெருமானைப் பூசித்துவசிக்குநாளில், அங்குள்ள பெரியோரைத் தாம்பணிதலின்றி ஏவல்கொண்டதுமன்றி, கற்பிற்சிறந்த மனை

விவாய்க்கப்பெற்று நம்போற்சிறந்தவரில்லையென்னும் செருக்கை யுமுடையவராகி, ஒருநாள் சிவபெருமானைப் பூசிக்க; அக்கடவுள் அவர்செருக்கையடக்கத் திருவுளங்கொண்டு, அச்சிவலிங்கத்திலே கோடிஅகத்தியமுனிவர் மனைவியாரோடு விரையத்தோன்றி அதைப் பூசித்து அதிலேமறையும்படி ஒருபுதுமையைக் காட்டியருளினார். அதைநோக்கிய அம்முனிவர் நாணுற்று, அதுகாரணமாக உடலெல்லாம் விளர்த்து, தமது தீயசிந்தனையைப் பலவாக இகழ்ந்து மிகவும்சோர்வுற்று, அசரீரியின்படியே திருவாவடுதுறையையடைந்து, தருமநந்தீசரருளைப்பெற்றுப் பெருமானைவழிபட்டு, அந்நோயகலப்பெற்றனர். இதுபற்றியன்றே நாயனாரும், காக்கப்படுந்துன்பங்களை அவைவருதற்கு முன்னரேயறிந்து காவாமல் மறந்திருந்தவன், பின் அவைவந்தகாலத்தில் காக்கக்கூடாமையால் தன்னுடைய அத்தவறைநினைத்து, இரங்கிவிடுவன். என்றருளிச் செய்தனர் எ - று. ஊறு - துன்பம்.

இச்சரித்திரவிரிவைத் திருவாவடுதுறைப்புராணத்துட்காண்க.

செங்கோன்மை.

அஃதாவது, ஒருபக்கத்திலேகோடாமற் செவ்விய கோல்போல அரசனாற்செய்யப்படும் முறையினது தன்மை.

மைந்தனுய்ந்தான் வற்சமமைச் சோடுமநு நீதிகண்டோன்
முந்தைமுறை தன்னன் முருகேசா—வுந்தும்
இறைகாக்கும் வையக மெல்லா, மவனை
முறைகாக்கு முட்டாச் செயின்.

(இ - ள்.) முருகேசா! மநுநீதிகண்ட சோழராசாவினது நற்றவத்தாற்பிறந்த வீதிவிடங்கனென்னும் சற்புத்திரன் ஒருநாள் சேனைகள்சூழத் தேரூர்ந்து செல்லும்போது, தெய்வகதியாகத்தேர்க்காலிற்பட்டு ஒருகன்று இறக்க; தாய்ப்பசுவருந்தி, அரண்மனை

வாயிலிற் கட்டியமணியைத் தன்கொம்பினலடித்து, அத்துயரத்தையறிவித்தது. அதுகேட்டசோழர் அப்பசுவின்முன்வந்து, நிகழ்ந்தவற்றையறிந்து, பெருங்கவலைபூண்டு, அமைச்சரோடு ஆராய்ந்தவழி,அவர்கள் உரைத்தபரிகாரங்களைப் பொருத்தமின்மையின் மறுத்து, இப்பசுவைப்போல யானும் எனது ஒருபுத்திரனையுமிழந்து, வருந்தினலன்றி இக்குற்றம் நீங்குவதல்லவெனத் தீர்மானித்து, முதன்மந்திரியாரைநோக்கி, அப்புத்திரன் மார்பிலே தேரைச்செலுத்தும்படிப் பணித்தனர். அவர் அவ்வாறுசெய்யாது தம்முயிரைவிடக்கண்டு, அரசர் தாமே அப்புத்திரன்மார்பிற் றேரைச்செலுத்தலும்,சிவபெருமான் உடனே பிரசன்னராகித் திருவருள்பாலிக்க; அப்புத்திரன்,மந்திரியும் பசுவின்கன்றும் உயிர்பெற்றெழத் தானும் பிழைத்தனன். இதுபற்றியன்றே நாயனரும்,அரசனைவன் பூமிமுழுதையும் காப்பாற்றுவான்; முட்டுப்படாமல் செங்கோலைச் செலுத்தவல்லவனையின் அச்செங்கோல் அவனைக்காப்பாற்றும். என்றருளிச்செய்தனர். எ - று. வற்சம் - பசுவின்கன்று.

இச்சரித்திரவிரிவைப் பெரியபுராணம் திருவாரூர்ச்சிறப்பிற் காண்க. (௫௫)

கொடுங்கோன்மை.

அஃதாவது, அம்முறையினது கோணுதற்றன்மை.

வேர்த்திடுக்கண் செய்து விளிந்தான் கருநாடன்
மூர்த்திபான் மேனுண் முருகேசா—கூர்த்துணரின்
மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேன்
மன்னுவா மன்னர்க் கொளி.

(இ - ள்.) முருகேசா! முற்காலத்திலே மதுரையில் மூர்த்திநாயனரென்பவர் சோமசுந்தரக்கடவுளுக்குத்தினமும் சந்தனக்காப்புக் கொடுத்துவருங்காலத்திலே, கருநாடதேசத்தரசன் பாண்டி

பனென்று அந்நகர்க்கு அரசனுக் குருசுத மதப்பிரவேசனுயிருந் தமையால் மூர்த்திநாயனுரையும் அம்மதத்திலே பிரவேசிப்பித் தற்கெண்ணி, அவருக்குச் சந்தனக்கட்டை ஒருவருங்கொடாமல் தடுத்தனன். அவர் ஒருநாள் பகல்முழுதும் சந்தனக்கட்டை தேடித்திரிந்து, பெருமையினுல் ஆலயத்திற்குவந்து, தமது விரதங் குன்றுமற் சந்தனக்கல்லிலே முழங்கையைச் சின்னபின்னப்படும்படித் தேய்த்தனர். அப்போது எழுந்த அசரீரியின்படியே அவ்விரவிலே அவ்வரசனிறக்க; மூர்த்திநாயனுர் அரசாண்டு, சிவதருமங்களில் மேம்பட்டுச் சிவபதமடைந்தனர். இதுபற்றியன்றே நாயனுரும், அரசர்க்குப் புகழ்கள்நிலைபெறுதல் நீதியினுலேயாம்; அந்நீதியில்லையாயின் அவ்வரசர்க்கு அப்புகழ்கள் நிலைபெறுதலில்லையாம். என்றருளிச்செய்தனர். எ-று. புகழ்நிலைபெறுதெனவே அவரும் நிலைபெறுதுமடிவர் என்பது கருத்து.

இச்சரித்திரவிரிவைப் பெரியபுராணம் மூர்த்திநாயனுர் புராணத்திற் காண்க. (ருசு)

வெருவந்தசெய்யாமை.

அஃதாவது, குடிகள் அஞ்சுவதும், பகுதியஞ்சுவதும் தானஞ்சுவதுமாகிய தொழில்களைச் செய்யாமை.

காந்தகபி லற்கிடும்பை செய்து கணனழிந்தான்
மூத்தோன் மழுவான் முருகேசா—வேத்தும்
இறைகடிய னென்றுரைக்கு மின்னுச்சொல் வேந்த
னுறைகடுகி யொல்லைக் கெடும்.

(இ - ள்.) முருகேசா! கணனெனுமரசன் வேட்டையால் மெலிந்து, கபிலமுனிவரது ஆச்சிரமத்தையடைய; அவர் இரங்கி, இந்திரன்பாற்பெற்ற சிந்தாமணியைக்கொண்டு ஒருநகரத்தையும் பற்பலவிசித்திர உணவாதிகளையும் உண்டாக்கி ஊட்டியுபசரித்து,

அவனையும் அவன்சேனைகளையும் காத்தனர். அவ்வரசன் அம்முனிவர் அவ்வாறு உபசரித்தற்குக் காரணமாயுள்ள அம்மணியைக் கேட்டு, அவர் உடன்படாமையின் வலிந்துபறித்துக்கொண்டு தன்னகரையடைந்து, பிதாவாகிய அபிசித்ராசனுக்கு உணர்த்த; அவன் மனம்நடுங்கி புதல்வனைநோக்கி, முனிவர்கட்கு இடுக்கண் விளைத்தால் கெடுவது திண்ணமேயாதலின் இதை அவர்பால்கொடுத்துவிடுதலே தகுதியென வலியுறுத்தினன். அரசன் அம்மொழியைமறுத்துவிட்டு, அம்மணியைக் கொடாதிருந்தமையால் அம்முனிவருடைய வழிபடுகடவுளாகிய விநாயகக்கடவுளது மழுப்படையால் மடிந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், குடிகளால் நமதரசன் கடுமையையுடையவனென்றுசொல்லப்படுகிற துன்பந்தருஞ்சொல்லையுடைய அரசன் ஆயுள்குறைந்து விரைவிற்கெடுவான். என்றருளிச்செய்தனர். எ - று. உறை - முதனிலைத்தொழிற்பெயர். அது ஆகுபெயராய் உறைதலைச்செய்யும் நாள்மேல்நின்றது.

இச்சரித்திரவிரிவை விநாயகபுராணம் சிந்தாமணிவிநாயகர் திருவவதாரப்படலத்துட் காண்க. " (ருஎ)

கண்ணோட்டம்.

அஃதாவது, தன்னோடு பழகினவரைக்கண்டால் 'அவர்சொல்லப்பட்டனவற்றை மறுக்கமாட்டாமை.

ஒவி னுழ வன்வேண்ட வுக்கிர னிந்திரன்கொண்
மூவைவிடு வித்தார் முருகேசா—தாவலிலாக்
கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை.

(இ-ள்.) முருகேசா ! சேரசோழபாண்டியரென்னும் மூவரும் தம்முடைய நாடுகளில் மழையின்மையால் அகத்தியமுனிவருடை

ய கட்டளைப்படியே இந்திரனது சபையையடைந்துழி, அவன்கா ட்டிய் தவிசுகளிலே இருவருமிருக்க ; உக்கிரபாண்டியர் மாத்திர ம் அவனுடைய தவிசிலேறி ஒருங்கிருந்தனர். அதுகண்ட இந்திர ன் சேரசோழருடைய கருத்தைவினவி, அவர்களுடைய நாடுகளி ன்மாத்திரம் மழைபெய்யும்படி நியமித்து, அனுப்பிவிட்டு, பாண்டி யருடைய செருக்கையறிந்து, வரிசையளிப்பான்போலத் தாங்கப் படாததொரு ஆரத்தைக்கழுத்திலிட; அப்பாண்டியர் அதை மல ர்மாலைபோலத்தாங்கினவராய் அவனைச் சிறிதும் மதியாமல் தந்நா ட்டையடைந்து, ஒருநாள், அவ்விந்திரனுடைய புட்கலாவருத்தமு தலிய நான்குமேகங்கள் பொதியமலைச்சாரலில் மேயக்கண்டு, அவ ற்றைச் சிறையிடுவித்தனர். அஃதுணர்ந்த இந்திரன் அவரையெ திர்த்து, ஆற்றாது முரிந்தோடி, பின்னர் உமது நாட்டில் மழைபெ ய்யச்செய்வேன் தயைகூர்ந்து மேகங்களை விடுவித்தருளுக என்று ஓரோலைவிடுக்க; அத்தருணத்தில் அவ்விந்திரனுக்காக வேண்டிக் கொண்ட ஒரு வேளாளன்பொருட்டுக் கண்ணோடி, அவற்றைவிடு வித்தனர். இதுபற்றியன்றே நாயனாரும், உலகநடையானது கண் ணோட்டத்தினிடத்தே நிகழ்வதாகும் ; ஆதலால், அக்கண்ணோட் டமில்லாதவர் உளராதல் பூமிக்குப் பாரமாவதற்கே வேறொன் றுக்கன்று. என்றருளிச்செய்தனர். எ-று. தாவல் - அழிதல்.

இச்சரித்திரவிரிவைத் திருவிளையாடற்புராணம் இந்திரன் முடிமேல் வளையெறிந்தபடலத்திற் காண்க. (ருச)

ஒற்றடல்.

அஃதாவது, பகைவர் அயலோர் நட்பினர் என்னும் மூன்றுதிறத் தாரிடத்தும் நிகழ்ந்தவையறிதற்கு ஒற்றரை ஆளுதல்.

பின்னைகரம் வீடியபின் பேதுற்றான் சூரனொற்றை
முன்னினிதா ளாமன் முருகேசா—வன்னதனால்

ஒற்றினு லொற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில்.

(இ-ள்.) முருகேசா! சூரபத்மனுக்குப்பயந்து, இந்திரன் இந்திராணியோடு பூவுலகத்தடைந்து, அவளை ஐயனார்பால் ஒப்புவித்துவிட்டு, தனதுகுறையைச் சிவபெருமானிடம் முறையிடுதற்குத் திருக்கைலைமலையையடைய; அவ்வையனார் கட்டளைப்படி வீரமாகாளராற் காக்கப்பட்டிருந்த இந்திராணியைச் சூரபத்மனுடையதங்கையாகிய அசமுகிகண்டு, தமையனுக்கு மனைவியாக்கத் துணிந்து பற்றியிழுத்து, வீரமாகாளராற்கைவெட்டுண்டு புலம்பிச் சென்று, சூரபத்மனிடம் முறையிட்டனள். அவன் முன்னரே ஒற்றரை நியமித்துவைத்திருந்தும் பகைவனாகிய இந்திரனிருக்குமிடத்தையும் அவன்செய்யும் முயற்சியையும் அவர்களால் ஆராயாத பெருங்குற்றத்தால் வருந்தி, அவ்வொற்றரைநோக்கி, நீவிர் ஏன் இவ்விடயங்களையெல்லாம்அறிந்துவந்து அறிவியாதொழிந்தீர் என வீணேவெகுண்டு அயர்ந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், ஒற்றனைக்கொண்டு எல்லாரிடத்தும் நிகழ்ந்தவைகளை அறிந்துவரச்செய்து அவ்வுகளாலடையும்பயனை ஆராய்ந்தறியாத அரசனானவன் வெற்றியடையக்கிடந்தது வேறொருவழியில்லை. என்றருளிச் செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைக் கந்தபுராணம் சூரன்றண்டஞ்செய்படலத்துட் காண்க. (ருக)

ஊக்கமுடைமை.

அஃதாவது, மனம் மெலிதலின்றித் தொழில்செய்தலிலே எழுச்சியுடைத்தாதல்.

நாள்களொடு சோளியக்கு நற்பதவி யைத்துருவன்
மூள்கருத்தாற் பெற்றான் முருகேசா—நீள்பெருக்கின்

வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்தம்
முள்ளத் தனைய துயர்வு.

(இ-ள்.) முருகேசா! உத்தானபாதராசன் சுருதி சுநீதியென்னும் மனைவியரோடுவாழுநாளிலே ஒருநாள், மூத்தாளாகிய சுருதியின்புதல்வனுன உத்தமனென்பவன் சிங்காதனத்தில் வீற்றிருக்கும் பிதாவின்மடியில் ஏறியிருக்குந்தருணத்தில், சுநீதியின்புதல்வனுகிய துருவனும் அதில்ஏற; சுருதியென்பவள் அவனைநோக்கி, நீ பட்டத்திற்குரியவனல்லை; ஆகையால், ஏறுதேயெனமறுக்க; அவளிடத்துவைத்தகாதலால் அரசனும் அதற்கு உடன்பட்டிருந்தனன். அதுகண்டதுருவன் மனநொந்து, மாதாவினிடம் நடந்ததையறிவித்து, அவள்வருத்தத்தைமாற்றி அநுமதிபெற்று, தான் எட்டுவயதுடையவனுயிருந்தும் ஊக்கத்தால் சப்தரிஷிகளையடைந்து, அவருபதேசப்படியே தவம்புரியுங்கால், இந்திரனுல் விடுக்கப்பட்ட பூதமுதலியவைகட்கும் சிறிதுங் கலங்காதுநின்று நக்ஷத்திரங்களையும் நவக்கிரகங்களையும் பிணித்த திகிரியைச்சுழற்றி விளங்கும் பெரும்பதவியை விஷ்ணுமூர்த்தியால் அளிக்கப்பெற்று, மாதாவோடு மேம்பட்டனன். இதுபற்றியன்றே நாயனுரும், நீர்ப்பூவின் காம்புகளினதுநீளம் நின்ற நீரினளவினவாம்; அதுபோல உயர்ச்சியானது மனிதரது மனவுறுதியினளவினதாம். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவை இலிங்கபுராணம் விஷ்ணுபுராணம் பாகவதம் காசிகாண்டமுதலியவற்றுட் காண்க. (சுo)

மடியின்மை.

அஃதாவது, நினைக்கப்பட்டவைகளைச் செய்யும்போது சோர்தலில்லாமை.

அம்புவிழுற் றும்புரந்தா னுண்மைரகு மாற்றலரை
மொய்ம்பதனுல் வென்றே முருகேசா—விம்பர்

மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
றாஅய தெல்லா மொருங்கு.

(இ-ள்) முருகேசா! திலீபமன்னவன் காமதேனுவைவழி பட்டுப்பெற்ற இரகுவென்னுமரசன் தன்பிதாவியற்றிய யாகத்தின் பொருட்டுத் திக்குவிசயஞ்செய்துவரும்போது இந்திரன் யாககுதிரையைக்கவர; சோர்வில்லாமல் அவனையும்வென்று, யாகபலன் சித்தியாகும் வரத்தை அவனாற் பெற்றுமீண்டு, சிலநாட்சென்றபின், பிதா தவஞ்செய்ய வனத்தையடைதலும், தான் அரசுரிமையைமேற்கொண்டு, ஒருவரும் நிகரில்லையாம்படித் திக்குவிசயஞ் செய்துபெற்ற எண்ணிறந்த நிதிக்குவியல்களைக்கொண்டு விசுவசித்தென்னும் யாகமியற்றி, அந்தணர்க்கு அவைகளைத்தானஞ்செய்து, வறியன்போன்றிருந்தனன். அவ்வமையத்திலே, வரதந்து முனிவரிடம் பதினான்குவித்தைகளும்பயின்ற கௌற்சமுனிவர் குருதக்ஷிணையாகப் பதினான்குகோடிப் பசும்பொன்கொடுக்கவேண்டி அரசனையடைய; அவன் அவரைவணங்கி இருக்கச்செய்து, தன்னிடம் செல்வமின்மையால், குபேரனைச்செயித்து வேண்டுந்திரவியம்பெற உத்தேசித்திருப்பதை அவனறிந்துஅஞ்சி, அன்றிரவே அவ்வரசனது பொக்கிஷசாலையில் சுவர்ணமழை பொழிவித்தனன். அவை, முனிவர் உத்தேசித்துவந்த அளவிற்கு அதிகமிருக்கவும் அவற்றையெல்லாங்கொடுத்து, அம்முனிவர் ஆசீர்வதித்தபடி அயனென்னும் புத்திரனைப்பெற்று வாழ்ந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், சோம்பலில்லாத அரசன் திருமாலளந்த உலகமுழுமையும் ஒருசேரவடைவன். என்றருளிச்செய்தனர். எ-று. அடியளந்தான் - திருமால். இது ஈரடியால் மூவுலகளந்தமையிற்போந்த பெயர். இம்பர் - இவ்வுலகு.

இச்சரித்திரவிரிவை இரகுவம்சத்துட் காண்க. (சுக)

ஆள்வினையுடைமை.

அஃதாவது, இடைவிடாத மெய்ம்முயற்சி உடையனாதல்.

ஆள்வினையான் மிக்கதவ மாற்றிச் சுவேதமன்னன்
மூள்வினையுந் துய்ந்தான் முருகேசா—கோள்வினையாம்
ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

(இ - ள்.) முருகேசா! சுவேதராசன் தனது அரசுரிமையைப் புதல்வன்பாலொப்புவித்து, மனைவியோடுவனத்தையடைந்து, முனிவனாய்த்தவஞ்செய்கையில், தன்மனைவிக்குண்டாகிய மரணவேதனையைக்கண்டு, அந்தோ! இத்தன்மையவாகியவேதனை என்னையும் வருத்துமேயென்றஞ்சி, சுக்கிராசாரியரையடைந்துவழிபட்டு, மரணவேதனை நீங்கும்வண்ணம் மிருத்தியுஞ்சயமந்திரோபதேசம் பெற்று, அவர் கற்பித்தவாறே பலதலங்களையுந்தரிசித்துத் திருநெல்வேலியையடைந்து, தரிசனஞ்செய்து, அகத்தியமுனிவரால் அத்தலமகிமையையறிந்து, கடவுளைவழிபட்டுவசித்தனன். அங்கே அந்தியகாலம் சமீபித்தலால், இயமன் பயமுறுத்திப் பாசத்தையெறிந்துபற்றலும், அரசன்கலங்காது, சிவநாமங்களை உச்சரித்து நின்றவுறுதியால் சிவபிரானெழுந்தருளி இயமனையுதைத்துத் தன்னைக்காத்தருளப்பெற்றனன். இதுபற்றியன்றே நாயனாரும், இளையாமல் தொழிலைமுயல்வோர் பயனைவிலக்குவதாகிய ஊழினையும் புறங்காண்பர். என்றருளிச்செய்தனர். எ - று.

இச்சரித்திரவிரிவைத் திருநெல்வேலிப்புராணம் விருத்தாசலபுராணம் திருவெண்காட்டுப்புராணம் கூர்மபுராணம் இலிங்கபுராணம் முதலியவற்றுட் காண்க. (௯௨)

இடுக்கணழியாமை.

அஃதாவது, தொழிலிலேமுயல்வோன் ஊழினாலாவது பொருளின்மையாலாவது மெய்வருத்தத்தாலாவது தனக்குத் துன்பம் வந்தவிடத்து அதற்கு மனங்கலங்காமை.

செற்றுச் சுயோதனன்செய் தீங்கையின்பிற் றேர்தரும
முற்றுமின்பந் துய்த்தான் முருகேசா—பற்றிவரும்
இன்னாமை யின்ப மெனக்கொளி னாகுந்தன்
னொன்னார் விழையுஞ் சிறப்பு

முருகேசா! துரியோதனன் வீமனைப்பிணித்து நதியிலிட்டும், அரவங்களாற்கடிப்பித்தும் நதியில்வசிநாட்டியும், விஷபக்ஷணங்களையுண்பித்தும், பாதலத்திலடையும்படிக் கங்கையிலழுத்தியும், கொல்லுதற்கு யத்தனித்தமையேயன்றி, நெருப்பிட்டு ஐவரையுங் கொல்ல அரக்குமாளிகைவகுத்தும், நாடுமுதலியவற்றைச் சூதிற்கவர்ந்தும், திரௌபதையைத்துகிலுரிந்தும், அறுவரும் வனத்தடைந்திருக்குங்கால் அகாலத்தில் அன்னம்வேண்டுமாறு துருவாசமுனிவரையனுப்பியும், கொல்லும்படி காளமுனிவரால் பூதத்தையேவியும், இவ்வாறு எண்ணிறந்த இடுக்கண்களையியற்றவும், தருமர், தம்பியர்களைத்தணித்து, அவற்றையெல்லாம் இன்பமெனவே பாராட்டினமையால் அத்துரியோதனனையும் போரிலேவென்று, எல்லாஇன்பங்களையும் அநுபவிக்கப்பெற்றனர். இதுபற்றியன்றே நாயனாரும், ஒருவன் தொழில்செய்யுமிடத்து முயற்சியால்வரும் துன்பத்தையே தனக்கு இன்பமாக நினைத்துக்கொள்ளுவானாயின், அதனால் தன்பகைவர் நன்குமதித்தற்கேதுவாகிய உயர்ச்சியானது உண்டாகும். என்றருளிச்செய்தனர். எ - று.

இச்சரித்திரவிரிவைப் பாரதத்துட் காண்க. (௬௫)

அமைச்சு.

அஃதாவது, அமைச்சனது [illegible]ற்செய்கைகள்.

சேக்கிழார் சென்னிகக்குத் தொண்டர் சிறப்புணர்த்தி
மோக்கநெறி தந்தார் முருகேசா—ஆக்கி
அறிகொன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன்.

(இ - ள்.) முருகேசா! அநபாயசோழராசாவின் முதன்மந்திரியாராகிய சேக்கிழார்நாயனார் அவ்வரசர் சிவசரித்திரங்களை ஆராயாது சமணநூலாகிய சிந்தாமணியையே பாராட்டிவருதலை யறிந்து, அவர்க்கு இது புண்ணியவிர்த்திக்கு ஏதுவன்றென வற்புறுத்தி, அப்பயிற்சி நீங்குமாறு திருத்தொண்டர்கள்சிறப்பையும் சரித்திரங்களையும் செவியறிவுறுத்தி, வீட்டுநெறிக்குரியராக்கினர். இதுபற்றியன்றே நாயனாரும், அறிந்துசொல்லினவரது அறிவையு மழித்துத் தானும்அறியானேயாயினும், அக்குற்றநோக்கிக் கைவிடாமல், அரசனுக்கு உறுதியானவைகளைச்சொல்லுதல், அமைச்சனுக்கு முறைமையாகும். என்றருளிச்செய்தனர். எ - று. அறி-முதனிலைத்தொழிற்பெயர்.

இச்சரித்திரவிரிவைச் சேக்கிழார்நாயனார்புராணத்துட் காண்க.

சொல்வன்மை.

அஃதாவது, தான் நினைத்ததொழில் முடியும்வழியால் வார்த்தைகளைச்சொல்ல வல்லவனாதல்.

வாதவூ ராளிசெண்டால் வாங்கலின்னோர் வண்மையெனு
மோதமிறைக் கீந்தார் முருகேசா—தீதிலதாச்
சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.

(இ-ள்.) முருகேசா! மாணிக்கவாசகசுவாமிகள் அரிமர்த்தன பாண்டியன்பால் முதன்மந்திரியாராகி வாழுநாளில், குதிரைகள் வாங்குதற்குக் கொண்டுசென்ற நாற்பத்தொன்பதுகோடி பசும்பொன்னையும் திருப்பெருந்துறையிலே தம்மையாட்கொண்ட சிவபெருமானுடைய திருப்பணிமுதலியவற்றில் உபயோகித்திருத்தலை அரசன் கேள்வியுற்று, ஓரோலைவிடுக்க; சுவாமிகள் பாண்டியனையடைந்து, குதிரைகளெல்லாம் திருப்பெருந்துறையிலிருக்கின்றன; ஆவணிமூலத்திற்கு வந்துசேரும்; என்றுகூறலும், அரசன் குதிரைகள் அங்கின்மையைத் தூதராலறிந்து துன்புறுவித்தனன். சிவபெருமான் குறித்த அத்தினத்தில் நரிகளைப் பரிகளாக்கித் தாமே அவற்றிற்குத் தலைவராயெழுந்தருளிவர; அரசன் மகிழ்ந்து, தலைவராகிய சிவபிரானுக்கு விலைமதிப்பில்லாத ஒரு பொற்றுகிலளித்தலும், அதனை அத்தலைவர் சவுக்கிலேற்றமைகாரணமாகப் பாண்டியர்க்குக் கோபமூளக்கண்டு, சுவாமிகள் இவர் இவ்வாறு ஏற்பது ஆரியதேசவழக்கம்என்று உசிதமாகவுரைத்து, அரசனைமகிழ்வித்தனர். இதுபற்றியன்றே நாயனாரும், அமைச்சர் தாம் சொல்லக்கருதியசொல்லை வெல்லுஞ்சொல்லாக, வேறொருசொல் இல்லாமையையறிந்து, சொல்லக்கடவர். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைத் திருவாதவூரர்புராணத்தும் திருவிளையாடற்புராணத்தும் காண்க. (சஎ)

வினைத்தூய்மை.

அஃதாவது, செயப்படுந்தொழில்கள் பொருளேயன்றி
அறமும் புகழுந்தந்து நல்லனவாதல்.

வேள்வியிற்கோ ளூனுகர்ந்தும் வேடரிற்றூழ்ந் தேழ்மறையோர்
மூள்விதன முற்றார் முருகேசா—நீள்வின்
இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

(இ-ள்.) முருகேசா! கௌசிகனென்னும் அந்தணனுடைய புதல்வராகிய அசூயன் குரோதனன் வாக்துருஷ்டன் அயீஞ்சிரன் கவி பிசினன் பிதிர்வர்த்தியென்னும் எழுவரும் கர்க்கமுனிவர்மாணாக்கராய், அவருடைய பசுவையும் கன்றையும் மேய்க்குநாளில், பஞ்சகாலம்வர, பற்பலபுசித்தும் பசித்தழல்மூளுதலால் அப்பசுவைக்கொன்றுண்ணத் துணிந்தனர். அவருள்ளே பிதிர்வர்த்தியென்பவன் இதனைப் பிதிரர்க்கு ஊட்டியுண்டால் கதிபெறலாமென்று கூறி, இருவர்தேவர், மூவர்பிதிரர், ஒருவன் அதிதியாக நியமித்து, தான் கர்த்தாவாக இருந்து, அதனைப் பாகஞ்செய்து விதிப்படிச்சிராார்த்தமுடித்து, கர்க்கமுனிவரையடைந்து, பசுவைப் புலி வதைத்தது என்றுரைத்தனன். சிலநாட்செல்ல எழுவருமிறந்து, அடுத்த இருபிறப்பில் முறையே வேடரும் மிருகங்களுமாயுதித்து, பின் மானசசரசிலே சக்கரவாகப்பறவைகளாகி, பூர்வத்திலே செய்த கொடியகிருத்தியத்தைச் சிரார்த்தமாகச்செய்த புண்ணியத்தால் யோகாப்பியாசம் பயிலுநாளில், பாஞ்சாலதேசத்து விப்பிராசனும் மந்திரிபாலரும் அங்குள்ளசோலையில் உலாவக்கண்டு, அவ்வைசுவரியத்தைவிரும்பிய மூவருள் இருவர் மந்திரிபாலராய்ப்பிறக்க, பிதிர்வர்த்தியென்பவன் அரசனாயுதித்து, பிரமதத்தனெனப் பெயர்பூண்டுவளருங்கால், முன் யாகத்திற்கொல்லப்பட்டபசு அப்புண்ணியத்தால் சந்நிதியென்னும் பெயரோடு வேற்றரசன்மகளாய்ப்பிறக்க, அவளைமணந்து, விஷ்ணுமூர்த்திஉபாசனையால் எறும்பு முதலிய எவற்றின்பாஷையையுமுணர்ந்து, காம்பிலிதேசத்தையாண்டுவந்தனன். அக்காலத்திலே, சக்கரவாகப்பறவைகளாயிருந்த மற்றைநால்வரும் அந்நகரத்தில் சுதரித்திரன் என்னும் அந்தணனுக்குப்புதல்வராயுதித்து, ஒரு கிரந்தமொன்றியற்றிப் பிதாவின் பாற்றந்து, இதை அரசனிடங்கொடுத்து வேண்டுந்திரவியம்பெற்று வாழ்கவென்றுசொல்லித் தவத்திற்செல்ல; அவ்வாறே கொண்

ம்சென்ற கிரந்தத்தால் அரசன் தன்பூர்வநிலைமை முதலியவற்றை யறிந்து, அவ்வந்தணர்க்குவேண்டுவனகொடுத்து அனுப்பிவிட்டு, மந்திரிமாரிருவரும் மனைவியும் உடன்வர, அந்நால்வரையுமடைந்தான். ஆக எண்மரும் அரியதவங்களைச்செய்து, விஷ்ணுபதவியைப் பெற்றனர். இதுபற்றியன்றே நாயனாரும், அசைவற்ற தெளிவையுடையவர் தாம் துன்பத்திலேபடவரினும் அதுதீர்தற்பொருட்டு இழிவுவந்ததொழில்களைச் செய்யார். என்றருளிச்செய்தனர். எ-று. உம்மை - உயர்வுசிறப்பு. விதனம் - வேதனை.

இச்சரித்திரவிரிவை மச்சபுராணம் எறும்புச்செய்கையுணர்ந்தவத்தியாயத்தும் பிதிர்மகிமையத்தியாயத்தும் காண்க. (௬௬)

வினைத்திட்பம்.

அஃதாவது, பரிசுத்தமாகிய தொழிலைமுடிப்பவனுக்கு வேண்டுவதாகிய மனவலிமை.

சீவகன்சீ றாதிருந்தே தெவ்வையழித் தான்முடிவின்
மூவுலகும் போற்று முருகேசா—யாவும்
கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை யிடைக்கொட்கி
னெற்றா விழுமந் தரும்.

(இ-ள்.) முருகேசா! சீவகன் அச்சணந்தியாசிரியரிடத்துச் சகலகலைகளினும் தேர்ச்சியடைந்தபின், தன்பிதாவாகிய சச்சந்தனென்னுமரசன் கட்டியங்காரனாற் கொல்லப்பட்டமைமுதலியவற்றை அவ்வாசிரியராற் கேள்வியுற்றுக் கோபமூண்டுழி, அவர் கட்டளைப்படியே தணிவுற்றிருக்குநாளில், கட்டியங்காரன்வசத்திருக்கும் பட்டத்துயானை குணமாலையென்பவளைக் கொல்ல வருவதுநோக்கி, அதனதுமதத்தை அடக்கியதிகாரணமாகப் பகைமூண்டு, அக்கட்டியங்காரன் தன்னைக் கொல்லத்துணிந்தும், சுதஞ்சணனென்னும் தேவனுதவியால் மறைவுற்றிருந்து, காலமுடிவில்

பதுமுகனென்னும் தோழன்முதலியோரோடு வெளிப்பட்டுக் கட்டியங்காரனைவதைத்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், செய்யப்படுந்தொழிலை முடிவிலே வெளிப்படும்படி, அதற்கு முன்னெல்லாம் மறைத்துச்செய்வதே வலிமையாகும்; நடுவிலே வெளிப்படுமாயின் அவ்வெளிப்படுதல் செய்தவனுக்கு நீங்கப்படாத துன்பத்தைக் கொடுக்கும். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைச் சீவகசிந்தாமணி குணமாலையாரிலம்பகத்தும் மண்மகளிலம்பகத்தும் காண்க. (ருஎ)

வினைசெயல்வகை.

அஃதாவது, மனவலிமையால் தொழிலைச்செய்யுந் திறம்.

யாண்டுளனு ராயணனென் றேற்றிரணி யன்மகன்பான்
மூண்டுசின மாண்டான் முருகேசா—வேண்டின்
முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

(இ-ள்.) முருகேசா! இரணியாக்ஷன் பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு பாதலத்திற்செல்ல விஷ்ணுமூர்த்தி வராகவுருக்கொண்டு அவனைக்கொன்றமையால், இரணியகசிபு என்னும் மூத்தவன் அவர்பால் வீணேபகைகொண்டு, பிரமதேவரைக்குறித்துத் தவமியற்றி, உலகங்களை ஆக்கல் காத்தல் அழித்தல்களைத் தானேசெய்தல்முதலிய பல அரியவரங்களையும், திரிமூர்த்திகள் தமக்குரிய உருவத்தோடு ஆயுதமுடையராயெதிர்க்கினும், பகலிரவென்னுங்காலத்தும், மண் விண் உள் புறம்பென்னும் இடங்களினும் அழியாமையும், பிறவும்பெற்று, யாவரும் தன்னையேவழிபடும்படி இந்திராதியர்க்குத் துன்பம் விளைத்து, அரசியற்றுவானாயினன். அந்நாளில் அவன்புதல்வர் நால்வர்க்கும் சுக்கிராசாரியர்புதல்வராகிய சண்டன்மர்க்கனிருவரும் கல்விகற்பித்துவர; அந்நால்வருள்மு

த்தவனாகிய பிரகலாதன் விஷ்ணுவையே பரம்பொருளெனக்கொண்டமையை இரணியனறிந்து சினந்து, அங்ஙனக் கொல்லும்படி பலதுன்பங்களைச்செய்தும் கொல்லப்படாமற் பிழைத்தமையைக் கண்டு, மனம்புழுங்கி, ஒருநாள் அந்திவேளையில் புதல்வனையழைத்து, நீகூறியபடி அரி எங்கும் உள்ளவனாயின் இத்தூணிற்காட்டுக வென ஒரு தூணைப்புடைத்து ; அதிற்றோன்றிய நரசிங்கமூர்த்தியோடு எதிர்த்து, அவர்நகத்தாற் கிழிக்கப்பட்டிறந்தனன். இது பற்றியன்றே நாயனாரும், தொழில்செய்யுமிடத்து அது முடிதற்குளதாகிய முயற்சியையும், அதற்குவரும் இடையூற்றையும், அவ்விடையூறு நீங்கி முடிந்தால் தானடையும் பெரும்பயனையும் சீர்தூக்கிச் செய்யக்கடவன். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவை மச்சபுராணம் உபதேசகாண்டம் காஞ்சிப்புராணம் பாகவதம் விஷ்ணுபுராணமுதலியவற்றுட் காண்க.

தூது.

அஃதாவது, பொருத்தல் பிரித்தல்களுக்கு வேற்றரசரிடத்தே செல்வாரது தன்மை.

சூரனெதிர் தக்கவுரை சொற்றியுமாந் துற்றகன்றான்
மூரிமிகும் வாகு முருகேசா—வோரின்
விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன்.

(இ-ள்.) முருகேசா! தேவரீரால் தூதாகவிடுக்கப்பட்ட வீரவாகுதேவர் பிரமவிஷ்ணுக்களும் அஞ்சத்தக்க சூரபத்மனுடைய சபையையடையுங்கால், அவன்சிறிதும் மதியாதிருக்க; அத்தருணத்து தேவரீரைப் பிரார்த்தித்துப்பெற்ற உயர்ந்த ஆசனத்தில் செம்மாந்திருந்து, அவனைநோக்கி, சயந்தன்முதலிய தேவரைச் சிறைவிடுதலோ? அன்றிப் போர்க்குவருதலோ? நின்கருத்து

யாது? என்றுவினவி, கேட்ட வினாக்களுக்குத் தக்கவிடைகளையு மூரைத்து, போர்செய்யுங் கருத்துடையனாயிருத்தலையறிந்து, அஞ்சாது திரும்பினர். இதுபற்றியன்றே நாயனாரும், தனக்கு வரும் துன்பத்திற்கஞ்சி அரசனுக்குத் தாழ்வான வார்த்தையை வாய் சோர்ந்தும் சொல்லாத வலிமையுடையவனே தன்னரசன் சொல்லிவிட்டவார்த்தையை வேற்றரசர்க்குச் சொல்லுதற்குரியவன். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைக் கந்தபுராணத்துட்காண்க. (சுக)

மன்னரைச்சேர்ந்தொழுகல்.

அஃதாவது, மந்திரி அரசரைப்பொருந்தி நடக்கும் விதம்.

மன்னனயி ராதுமெல்ல மல்குவித்தார் சைவநெறி
முன்னுவச வேசர் முருகேசா—வின்னதனுல்
போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்
றேற்றுதல் யார்க்கு மரிது.

(இ-ள்.) முருகேசா! இங்குளாபுரியிலவதரித்த வசவதேவர் கல்யாணபுரியில் சமணசமயத்தழுந்திய விச்சலராசன் வேண்டுகோளின்படியே அவனை நல்வழிப்படுத்தி உலகத்தில் சைவசமயத்தைப் பரப்புதற்பொருட்டு மந்திரித்தொழில்பூண்டு, சிவசரணர்களை மிகவும் வழிபட்டுவருதலைக்கண்டு பொறாமையதிகரித்த சமணர்களுணர்த்தும் துர்ப்போதனையால் அரசன் சந்தேகங்கொள்ளாமல் சைவசமயமே மெய்ச்சமயமெனத்துணியுமாறு,கள்ளவேடம்பூண்டுவந்தசமணர்களை மெய்யடியராக்கல் சமணர்கள் மண்முதலியவற்றால் இபற்றப்பட்ட வஞ்சனைவடிவங்களை மாதவர்களாக்கல் முதலிய அளவிறந்த அற்புதச்செயல்களை அவ்வரசனுக்குக்காட்டி அவனைத் தன்வயமாக்கினர். இதுபற்றியன்றே நாயனாரும், அரசர் அரியபிழைகள் வந்தவைகளாகக்கேட்டுச் சந்தேகித்தபின்பு

அவரைத்தெளிவித்தல் யாவர்க்கும் அருமையாதலால் மந்திரிகள் தம்மைக் காத்துக்கொள்ளவேண்டினல், அப்பிழைகள் தம்மிடம் வாராமற் காக்கக்கடவர். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவை வசவ்புராணத்துட் காண்க. (எ0)

குறிப்பறிதல்.

அஃதாவது, பிறர் நினைத்ததை அவர்சொல்லாமல் அறிதல்.

இந்தனக்கே லாமரமென் றுன்றருமன் வீமனெண்ண
மூந்தவையிற் றேர்ந்தே முருகேசா—மைந்தருள்ளும்
ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.

(இ-ள்.) முருகேசா! திரௌபதைமேற் காதல்கொண்ட கீசகன் அவளை விராடனதுசபையின்கண் துரத்திவருதலை வீமன்கண்டு, மனம்பொறுது, அவனைக்கொல்லுதற்காக அங்கிருந்த ஒருமராமரத்தைப் பிடுங்கத்துணிய; அதனைத் தருமர் குறிப்பாலுணர்ந்து, அவனைநோக்கி, இம்மரம் விறகுக்குரியதன்று எனவுரைத்து, அவனதுகருத்தைமாற்றி, தம்மை வெளிப்படாவண்ணம் காத்தனர். இதுபற்றியன்றே நாயனரும், ஒருவனதுமனதினிடத்திலே நிகழ்வதைச் சந்தேகப்படாமல் துணிவாக அறியவல்லவனை மனிதனேயாயினும், தெய்வத்தோடு சமானமாக நன்குமதித்தல் வேண்டும். என்றருளிச்செய்தனர். எ-று. இந்தனத்துக்கு என்பதில் அத்துச்சாரியை தொக்கது.

இச்சரித்திரவிரிவைப் பாரதத்துட் காண்க. (எக)

அவையறிதல்.

அஃதாவது, அரசனேடிருந்த சபையியல்பை அறிதல்.

சொற்றவிடைச் காடர்கவி தோற்றதுதென் னன்சபையி
முற்றுசுவை யுற்றும் முருகேசா—வுற்றணுகா [ன்

அங்கணத்து ளுக்க வமிழ்தற்றுந் றங்கணத்த
ரல்லார்முற் கோட்டி கொளல்.

(இ-ள்.) முருகேசா! குலேசபாண்டியன் மிகவும் கல்வியுடை யனுயிருந்தமையால் சங்கப்பலகையும் இடந்தந்தமையைக் கேள்வியுற்று, கபிலதேவருடைய நட்பினராகிய இடைக்காடர் அவ்வரசனைக்காணுதற்பொருட்டு அரியசெய்யுளை இயற்றிச்சென்று அரங்கேற்றியபொழுது, அவன் அதிலுள்ள சொற்சுவை பொருட்சுவைகளை அனுபவித்தறிந்தும் பொறாமையால் யாதொன்றுமுரையாது அவமதிக்க; அது பயனிலதாய்முடிந்தது. இதுபற்றியன்றே நாயனுரும், நல்லோர் தம்முடைய இனத்தரல்லாதவர்சபையிடத்தி யாதொன்றையும் சொல்லாதிருக்கக்கடவர்; சொல்லின், அது பரிசுத்தமில்லாதமுற்றத்திலே வீழ்ந்த அமிர்தம்போலப் பயனில்லாததாம். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைத் திருவிளையாடற்புராணம் இடைக்காடன்பிணக்குத்தீர்த்தபடலத்துட் காண்க. (எஉ)

அவையஞ்சாமை.

அஃதாவது, சொல்லுதற்குரிய சபையையறிந்து சொல்லுங்கால் அதற்கஞ்சாமை.

தாதையைவெல் வந்திமுனி தன்னையிட்ட வக்கிரன்றன்
மூதுணர்வால் வென்றான் முருகேசா—கேதமிலா
ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு.

(இ-ள்.) முருகேசா! அநேகபதரென்னுமுனிவர் தம்மாணுக்கர்களுக்கு இரவும் பகலும் ஓய்வின்றி வேதமோதுவிக்குங்கால், அவரது மனைவியாகிய சுசாதையினது கருப்பத்தினின்றும் நெடுநாளாக வெளிப்படாமலிருந்த அவரது புத்திரர் இவ்வாறு ஓயாமற்

சொல்லுவிக்கில் மாணுக்கரென்செய்வார் ; நித்திரையால் சந்தை தவறுகின்றது என்றனர். அதுகேட்ட பிதா ஸ்ரீ வேதப்பொருளைக் கற்பதற்கு இடையூறுகிபவார்த்தை கூறினமையால் எட்டுக்கோணமுண்டய உடலோடு பிறப்பாயாக என்றுசபித்துவிட்டு, மனைவி வேண்டிய சிலபொருளினிமித்தம் மிதிலையிலே சனகராசன்யாக சாலையையடைந்து அங்கெதிர்த்து வாதித்த தருக்கத்திலேவல்ல வந்திமுனிவருக்குத்தோற்று, நாணத்தால் மீண்டுவாராது, கடற்கரையையடைந்து வசித்தனர். அந்நாளிலுதித்த புதல்வர் அஷ்டவக்கிரரென்னும் பேர்புனைந்து, உதானரென்னுமுனிவர்பால் வேதவேதாங்கமுதலியவற்றிற்பயின்று தேர்ச்சியடைந்தபின், பிதாவினிலைமையைக் கேள்வியுற்று, சனகராசனது சபையைஅடைந்து, வந்திமுனிவரை வாதித்துவென்று, அரசனுலுபசரிக்கப்பெற்று,பிதாவையடைந்துவணங்கி நிகழ்ந்தமையையறிவித்து, அவரை அழைத்துக்கொண்டு ஆச்சிரமத்தையடைந்து வாழ்ந்திருந்தனர். இதுபற்றியன்றே நாயனுரும், வேற்றரசர்சபையில் அஞ்சாமல் எதிர்மொழியைக்கொடுக்குங்காரணமாகச் சொல்லிலக்கணவழியாலே அளவுநூலைத்தெரிந்து கற்கக்கடவர். என்றருளிச்செய்தனர். எ-று

இச்சரித்திரவிரிவைப் பாரதம் ஆரணியபருவம் தருமர் தீர்த்தயாத்திரைச்சருக்கத்துட்காண்க. (சாஙு)

நாடு.

அஃதாவது, அரண்முதலிய அங்கங்களுக்கு அவசியம் வேண்டுவதாகிய நாடு.

எச்சிறப்பேய்ந் தென்னிலங்கை வீந்ததரா சினத்தான்
மூச்சகமூ மேத்து முருகேசா—மெச்சவே
ஆங்கமை வெய்திப் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

(இ-ள்.) முருகேசா! இலங்கையானது எவ்வகைவளங்களும் அமையப்பெற்றிருந்தும் யாதுபயன்? அதையாண்ட இராவணன் மிகுதியும் தீத்தொழிலுடையவனாயிருந்தமையின் அது அநுமாரால் எரியூட்டி அழிக்கப்பட்டது. இதுபற்றியன்றே நாயனாரும், அமைவில்லாத அரசனைப்பெற்ற நாடு மேற்சொல்லிய வளங்களெல்லாம் நிறைந்துள்ளதாயினும் அவைகளாலே பயனுடையதன்று. என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவை இராமாயணத்துட் காண்க. (எச)

அரண்.

அஃதாவது, நாட்டிற்கு உறுப்பாய் அடங்குவதாயினும் அந்நாட்டிற்கும் அரசனுக்கும் பகைவராற் றொலைவுவாராவண்ணம் சேமமாய்நின்று காக்கும் அரணினது தன்மை.

நம்மரனார் செய்புன் னகையில்வெந்த வேயசுரர்
மும்மதிலு மேனுண் முருகேசா—வம்ம
எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்லத ரண்.

(இ-ள்.) முருகேசா! சூரபத்மனது தம்பியாகிய தாரகனுக்குப்பிறந்த தாரகாக்கன் கமலாக்கன் வித்துன்மாலி என்னுமூவரும் கோடிவருடம் தவம்புரிந்து, பிரமதேவரால் பொன் வெள்ளி இரும்புகளாலாகியமூன்றரண்கள் முறையே சுவர்க்கம்அந்தரம் பூமி என்னுமிடங்களில் நிலைபெற்றிருந்து வேண்டுமிடங்கட்கு உடன்வரவும், அவை ஆயிரவருடத்திற்கொருமுறை ஒருமுகூர்த்தநேரம் ஒருங்குசேரவும், அக்காலத்தில் ஒருகணைவிடுத்து அழித்தாலன்றி வேறுஎவ்வகையாலும் அழியாதிருக்கவும், திருமாலாதிதேவர்கள் எதிர்க்கில், தமக்குத்தோற்றோடவும் வரம்பெற்று, மயனால் வகுக்கப்பட்ட மாளிகைகளோடுகூடிய அவ்வரண்களிலிருந்துகொண்டு,

விபூதி ருத்திராக்ஷ தாரணங்களும், பஞ்சாக்ஷரஜெபமுமுடையோராய் விதிப்படி சிவபெருமானைப்பூசித்துவந்தனர். இங்ஙனமிருந்தும், அசுரகுலத்திலுதித்தமையின் தேவர்களுக்கு எண்ணில்லாத இடுக்கண்களையே செய்துவருங்கால், திருமால் புத்தகுருவாகிச் சென்று, நாரதரைக்கொண்டு அவ்வசுரர்மனவிபரது கற்பையழித்ததுமன்றி, தான் சிவபூசைமுதலியவற்றால் பயனில்லையெனப்போதித்து, அசுரரைச் சிவபத்தியில் வழுவும்படிச்செய்துவிட்டு, திருக்கைலையையடைந்து, பெருமான் கட்டளைப்படியே பூமிமுதலிய தெய்வீகமுள்ள பொருள்களையெல்லாம் இரதமுதலிய உறுப்புக்களாக்கி, தான்பாணமாக; பெருமான் பிரமதேவராற் செலுத்தப்பட்ட அவ்விரதத்திலெழுந்தருளி, திரிபுராதிகளுடைய நிலைமையைநோக்கி நகைத்தலும், அம்மூவரண்களும் அப்புன்முறுவலின் அக்கினியால் வெந்தழிந்தன. இதுபற்றியன்றே நாயனாரும், அரணுளது மாட்சிமையெல்லாம் உடையதாகியவிடத்தும் தொழில்செய்தலிற் பெருமையில்லாதவரிடத்திலே அம்மாட்சிமை இலதாம். என்றருளிச்செய்தனர். எ-று. அம்ம-உரையசை.

இச்சரித்திரவிரிவை உபதேசகாண்டம் கூர்மபுராணம் இலிங்கபுராணம் காஞ்சிப்புராணம், திருக்கூவப்புராணம் திருவதிகைப்புராண முதலியவற்றுட் காண்க. (எரு)

பொருள்செயல்வகை.

அஃதாவது, பொருளைச்சம்பாதித்தலின் விதம்.

மன்னுகிழி பெற்றகுல பூடணனுன் மல்கினவே
முன்னுமற மெல்லா முருகேசா—துன்னியதோர்
குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

(இ-ள்.) முருகேசா! குலபூடணபாண்டியன் சிவதருமங்களை விடாதுசெய்கின்றோமென்னும் செருக்கால் அந்தணரையவமதித்

தலால், அவர்கள் மனம்வருந்தி யாகாதிகருமங்களைச் செய்யாது விடுத்தலின் மழைகுன்றி விளைவுகள் குறைந்தன. அதனால், அவ்வந்தணர் அயல்நாட்டையடையக் குடிகளும் அவ்வாறே செல்லத்துணிதலைப் பாண்டியனுணர்ந்து, சோமசுந்தரக்கடவுளை வழிபட்டு உலவாக்கிழிபெற்று, அப்பொருள்கொண்டு குடிகளைக்காத்தலோடு அறங்களையும் வளர்க்க; அவை முன்னையிலும் விருத்தியடைந்தன. இதுபற்றியன்றே நாயனாரும், தன்கையதாகியபொருள் உண்டாயிருக்க ஒருதொழிலைச்செய்பவனது செய்கையானது ஒருவன் மலைமேலேறிநின்று யானைகளதுபோரை அச்சமும் வருத்தமுமின்றிக் கண்டதனோடொக்கும். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைத் திருவிளையாடற்புராணத்துட் காண்க.

படைமாட்சி.

அஃதாவது, சேனையினது நன்மை.

பற்றுநிரை மீட்டெதிர்த்த பார்த்தனாற் புண்பட்டார்
முற்றினவர் யாரும் முருகேசா—சுற்றி
ஒலித்தக்கா லென்னா முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும்.

(இ-ள்.) முருகேசா! விராடபுரத்தரசனுடைய பசுநிரையைத் துரியோதனன் முதலியோர் கவர்ந்துசெல்லுங்கால், அவற்றைமீட்டு விராடபுரத்திற்கனுப்பிவிட்டு பின்னர்த் தனியனாயெதிர்த்த ஆண்மைமிக்க அருச்சுனனோடு போர்புரிதற்குச் சூழ்ந்த துரோணர்முதலிய பலரும் அவனொருவனுக்குத் தோற்றோடினர். இதுபற்றியன்றே நாயனாரும், (வீரரல்லாதார்பலர் திரண்டொலித்தால் அதற்கு வீரனஞ்சான்; அவனெதிர்த்தபொழுதே அவர் பலருங் கெடுவர்.) என்பதுதோன்ற, எலிகளாகியபகை திரண்டு கடல்போல் ஒலித்தால், பாம்புக்கு என்னதுன்பம் வரும்; அப்பாம்பு

முச்செறிந்தவளவிலே அப்பகை தானேகெடும். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைப் பாரதத்துட் காண்க. (எஎ)

படைச்செருக்கு.

அஃதாவது, சேனையினது மறமிகுதி.

மாலுறுத்தி விடுமன்பான் மாண்டசிவே தற்கயர்ந்தார்
மோலிபுனை மன்னர் முருகேசா—சாலப்
புரந்தார்கண் ணீர்மல்கச் சாகற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து.

(இ-ள்.) முருகேசா! விராடராசன்புதல்வனாகிய சிவேதனென்பவன் பாண்டவரால் சேனைத்தலைவனாக நியமிக்கப்பட்டு, முதனாட்போரில் எண்ணிறந்த சேனைகளையழித்து, வீஷ்மருக்கும் கலக்கத்தையுண்டாக்கி, அவர்செய்த கொடியவஞ்சனையால் மடிய; அதுகண்ட தருமர்முதலிய மன்னரெல்லாம் அவனது வீரப்பாட்டைவியந்து பாராட்டிவருந்தினர். இதுபற்றியன்றே நாயனாரும், தமக்குச்செய்த நன்றிகளைநினைந்து ஆண்ட அரசரது கண்கள் நீர்பெருகும்படி போரிலே சாகப்பெறின், அச்சாவு இரந்தாயினும் கொள்ளுந்தகுதியையுடையது. என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைப் பாரதத்துட்காண்க. (எஅ)

நட்பு.

அஃதாவது, புணர்ச்சி பழகுதல் உணர்ச்சியொத்தல் என்னும் மூன்றும் நிகழ்வதாகிய் தொடர்ச்சி.

மேவ விதுரமனொடு விண்ணிழந்திம் மண்ணடைந்தார்
மூவரகல் வஞ்சி முருகேசா—தாவில்
அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்க
ணல்ல லுழப்பதா நட்பு.

(இ-ள்.) முருகேசா! வசுக்களில் ஒருவனாகிய விதூமன் பிரமசபையிலே நடித்துநின்ற அலம்புசையினது ஆடை காற்றால் விலகுங்கால், அவளது குறியைக் காதலுற்றுநோக்கிய குற்றங்காரணமாகப் பூமியிலே அவளையனுபவிக்கும்படி பிரமதேவர் சபித்தவாறே சதானீகனென்னும்அரசன்பால் சகத்திரானீகனென்னும் பெயரோடு பிறக்கத்துணிந்தபோது, அவனோடு பிரியாதநட்புபூண்ட, மாலியவான் புட்பதந்தன் பலோற்கடன் என்னும் மூவரும் பிரிவையஞ்சித் தாமும் விண்ணுலகத்தையிழந்து, உடன்பிறந்து பழகியிருந்து, முடிவில் அவனோடு விண்ணுலகடைந்தனர். இதுபற்றியன்றே நாயனாரும், ஒருவனுக்கு நட்பாவது அழிவைத்தருகிற தீயவழிகளிலேவிலக்கி, நல்லவழிகளிலே செலுத்தி, ஊழினாலே கேடுவந்தவிடத்தும், தானும் உடனிருந்து, அத்துன்பத்தை அனுபவிப்பதேயாம். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைச் சேதுபுராணத்துட் காண்க. (எசு)

நட்பாராய்தல்.

அஃதாவது, நட்பினரை ஆராய்ந்தறிந்தே சினேகிக்க வேண்டுதலால், அவரை ஆராயுந்திறம்.

வஞ்சகவா னந்தனட்பாற் சூரியசன் மாஞானா
முஞ்சுமிடர் பெற்றான் முருகேசா—நெஞ்சதனில்
ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும்.

(இ-ள்.) முருகேசா! கௌசிகநாட்டிலே விக்கிரமநகரத்திலேயுள்ள பிராமணனாகிய சூரியசன்மனென்பவன், தன்பகைவனாகிய ஆனந்தனென்னுமந்தணன் தன்னை வஞ்சிக்கக்கருதிவந்து வணங்கிநிற்றலையுணராது, அவனை நட்பினனாகக்கொண்டபொழுது, அவன் ஓரிரவில் சூரியசன்மனைநோக்கி, நமது ஊர் மலையருகாதலின் வீதிகளில் வேங்கைகள் சஞ்சரிக்கின்றன; யான் கண்டுசொ

ல்வேன்; நீ எய்வாயாக. எனவுரைத்துச்சென்று, ஒருபசுவைப் புலி த்தோல்போர்த்து நிறுத்திவிட்டுவந்து காட்ட; அவன் புலியென த்துணிந்து எய்தனன். உடனே, ஆனந்தன் இங்கே நீ வேங்கை யைநோக்கிக்கொண்டிருக்கில் யான் கள்வர்வாராவண்ணம் வீட்டைநோக்கிவருவேன் எனச்சென்று, சூரியசன்மனது மனைவியை யடைந்து, ஈண்டுக்கள்வர்வருவார் வெளியேவருகவென அவளை மகன்மனையிலிருத்திவிட்டு, மகனை அவன்மனைவியோடு சூரியசன் மனது மனையிலிருத்தி, தம்பீ! கள்வர் நின்னுடைய தந்தையைப் போலஅழைப்பர்; நீ கதவைத்திறவாதே. என வற்புறுத்திவிட்டு, சூரியசன்மனையடைந்து, நின் மனைவி பரபுருடனோடு கலந்திருக்கின்றனள் என்றனன். அதைக்கேட்ட சூரியசன்மன் சினந்து சென்று, கதவைத்தட்டுங்கால், அவர் திறவாமையின் வீடேறிக் குதித்து, அவரைவெட்டியபின்பு, இன்னாரெனத்தெளிந்து, வருந்திருந்தருணத்தில், இதை ஆனந்தனால்உணர்ந்த நகரத்தந்தணர்கள் ஒருங்கு திரண்டு சூரியசன்மனையழைத்து, இக்கொடுமையை ஏன்செய்தாயெனக் கேட்க; இது ஆனந்தனால் நேரிட்ட வஞ்சனையேயென்றுணர்த்தியும், அவர் தன்மேற்கொண்ட ஐயநீங்குமாறு ஸ்ரீபஞ்சாக்ஷர ஜெபவலிமையால் கேதாரநாதர்சந்நிதியிலேயுள்ள இடமேயன்றி மதில்களிலுள்ள இடபங்களும் புல்லருந்தச்செய்து, குற்றத்தினின்றுநீங்கி, பசுவும் மகனும் மருகியும் பிழைக்கப்பெற்றுய்ந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், குணமும்செய்கையும் நல்லனென்பதும் அல்லனென்பதும் பலகாலாராய்ந்தும் பலவழியாலாராய்ந்தும் ஒருவனோடு நட்புக்கொள்ளாதவன் முடிவில் தான் சாதற்கேதுவாகிய துன்பத்தைத் தன்மாற்றார் விளைக்கவேண்டாமல் தானே விளைத்துக்கொள்ளுவன். என்றருளிச்செய்தனர். எ-று. வாளா-வீண். முஞ்சுதற்கேதுவாகிய இடரை முஞ்சுமிடரெனக் காரியத்தைக் காரணமாக உபசரித்தார்.

இச்சரித்திரவிரிவை உபதேசகாண்டம் பஞ்சாக்கரமான்மியச்சருக்கத்துட் காண்க. (அ0)

பழமை.

அஃதாவது, நட்பினரது பழமையாந்தன்மையை நோக்கி அவர்செய்த பிழைகளைப் பொறுத்தல்.

நம்பனமர்க் கேன்றவா ணற்புரந்தான் றன்மையுன்னி
மொய்ம்புதொலை யாமன் முருகேசா—வம்புவியில்
பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.

(இ-ள்.) முருகேசா! வாணாசுரன் தினமும் ஆயிரம் சிவலிங்கம் பூசித்துவந்த புண்ணியத்தால் சிவபிரான் காக்ஷிதந்தருளுங்கால் வணங்கிக் குடமுழாமுழக்க; பெருமான்மகிழ்ந்து ஆயிரங்கரங்களும், அவன்வேண்டியவண்ணமே அக்கினிக்கோட்டையும் அளவில்லாநிதியமும், பேராற்றலும், பிறவுந் தந்தருளினர். அவன் விஷ்ணுவாதி தேவரைவென்று, தினமும் கைலையிற்சென்று தரிசித்துவருநாளில் ஒருநாள், திருநடனதரிசனந்தந்தருளும்போது ஆயிரங்கரங்களாலும் குடமுழாமுழக்கி, அக்கடவுள் உமாசகிதராய்த் திருவோலக்கத்தோடு தனதுவாயிலில் தினமும் தரிசனந்தந்து வீற்றிருக்க வரம்பெற்றனன். அவ்வாறே வீற்றிருக்குங்காலத்திலே ஒருதினம் பெருமானைவணங்கி, 'கர்த்தனே! விஷ்ணுமுதலியோரும் தோற்றமையால் எனது புயத்தினவுநீங்கத் தேவரீரோடு போர்செய்ய எண்ணினேன். என்னலும், கடவுள், அவன் தம்மிடம்வைத்த பழயஅன்பினைச்சிந்தித்துத் தாம் தண்டித்தல் முறைமையன்று எனக்கொண்டு, அவனைநோக்கி; முன்தோற்ற விஷ்ணு இப்போது கிருஷ்ணவதாரத்தில் உபமன்னியுவால் நம்மைப்பூசித்து வலிமிகுந்திருத்தலின், அவர்வந்து நின்னைவெல்வரெனக் கட்டளையிட்டனர். இவ்வாறிருக்க; கிருஷ்ணமூர்த்தியின்பேரனாகிய

அநிருத்தனை வாணாசுரன்மகள் உசையென்பவள் கனவிலணைந்து புலம்புதலால் அவனை நித்திரைவேளையிலே சித்திரரேகையென்னும்தோழி கவர்ந்துவந்து கூட்டுவித்தமையை வாணாசுரனறிந்து அநிருத்தனைச்சிறையிடுவித்தமையால், கிருஷ்ணமூர்த்தி யுத்தத்திற்குவந்தபோது, விநாயகக்கடவுள், சுப்பிரமணியக்கடவுள், உமாதேவியார் என்னுமூவரும் அவர் பூசித்தமையால் நீங்குவதைப் பெருமானறிந்து தாம்எதிர்த்தனர். உடனே கிருஷ்ணமூர்த்தி வணங்கி, தன்னோடு எதிர்க்காவண்ணம் வேண்டலும், பெருமான் முன்னாளிலே மைநாகமலையில் தவம்புரியும்போது யாவர் எதிர்ப்பினும் வெல்லும்படி அவர்க்கு அளித்தவரம் பழுதுபடாவண்ணம் போர்மூண்டு, தோற்றவர்போலநிற்றலும், அதுகண்ட வாணாசுரன்எதிர்த்துப் போர்செய்தனன். கிருஷ்ணமூர்த்தி அவன் கரங்களனைத்தையும் சேதிக்கும்போது, பெருமானுணர்த்தியவாறே நான்குகரங்களைவிடுத்து, அவன்பால் நட்புபூண்டு அவன்மகளைத் தமதுபேரனாகிய அநிருத்தனுக்கு மணம்புணர்த்தி, துவாரகையையடைய; சிவபிரானும் வாணாசுரனைப் புயத்தினவுநீங்கியதா? எனவினவி, முன்போலவே கரங்களையளித்து என்றும் குடமுழாமுழக்கும் கணநாதனாக்கிக் கைலையிற்சேர்த்தனர். இதுபற்றியன்றே நாயனாரும், தாம் வெறுக்கத்தக்கவைகளைச் சினேகித்தவர்செய்தால் அதற்குக்காரணம் அறியாமையொன்றோ? மிகுந்த உரிமையுமாமென்று அறியக்கடவர். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவை உபதேசகாண்டம் வாணாசுரன்பூசனைச் சருக்கத்தும், காஞ்சிப்புராணம்வாணீசப்படலத்தும் காண்க. (அக)

தீநட்பு.

அஃதாவது, தீக்குணத்தாரோடு உளதாகிய நட்பு.

இன்னலே பல்குநம்பா லென்று விபீடணன்றன்
முன்னவனை நீத்தான் முருகேசா—துன்னிப்

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்ற லினிது.

(இ-ள்.) முருகேசா! விபீஷணன் இராவணனுக்கு உறுதி மொழிகளைப் பன்முறையுரைத்தும் அவனுடன்படாமைகண்டு, யாம் இவனோடு கலந்துநிற்போமாயின் நமக்குத் துன்பமேவிளையும் எனத்துணிந்து, அவனையகன்று இராமமூர்த்தியை அடைக்கலமாக அடைந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், ஆசைமிகுதியால் உண்பவர்போன்றாராயினும், தீக்குணமுடையவரது நட்பானதுவளர்தலினும் குறைதலினிது. என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவை இராமாயணத்துட் காண்க. (அஉ)

கூடாநட்பு.

அஃதாவது, பகைமையால் உள்ளே கூடாதிருந்தே சமயங் கிடைக்குமளவும் புறத்திலே கூடி நடப்பவர் நட்பு.

நேசன்போற் காடுவெட்டி நேரியன்றென் னற்றமுழி
மோசமே செய்தான் முருகேசா—மாசின்
மனத்தி னமையா தவரை யெனைத்தொன்றுஞ்
சொல்லினாற் றேறற்பாற் றன்று.

(இ-ள்.) முருகேசா! அரசபுரந்தரபாண்டியனிடத்துப் பகைகொண்ட காடுவெட்டியசோழன் புறத்தே அன்புடையோன்போலப் பாண்டியன்பாலுறவாடி, என்மகளை நினக்குத்தருவேன் என உறுதிமொழிகூறிப் பின்னர், அவன்தம்பியாகிய அரசசிங்கபாண்டியனைத் தன்வயமாக்கிக்கொண்டு, தன்மகளை அவனுக்கு மணம்புணர்வித்து, அவனுக்கும் அரசபுரந்தரபாண்டியனுக்கும் பகையைமூள்வித்து, வஞ்சகமே செய்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், மனத்தால் தம்மோடுபொருந்ாதவரை யாதொரு கருமத்

திலும் சொல்லினால் தெளிதல் முறைமையதல்லவென்று நீதிநூல் சொல்லும். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைத் திருவிளையாடற்புராணம் தண்ணீர்ப்பந்தல்வைத்தபடலத்துட் காண்க. (அரு)

பேதைமை.

அஃதாவது, கற்றிருந்தும் யாதொன்றும் அறியாமை.

வேதசன்மா பல்கலையின் மிக்குமுனி வர்ப்பழிப்பான்
மூதரக்க னானான் முருகேசா—காதலினால்
ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்.

(இ-ள்.) முருகேசா! கௌசிகன்மரபிற்பிறந்த வேதசன்மா வென்னும் அந்தணன் மனமொழிமெய்கள் அடங்குதற்கேதுவாகிய மெய்ந்நூல்களைக்கற்று, பிறர்க்குணர்த்தும்வன்மையில் மிகுந்திருந்தும், பேதைமையால் கற்றோர்பலரையும் அவமதித்துவருநாளில் ஒருநாள், ஒரு இராசசபையிலே அரியமுனிவர்களோடு வீணே தருக்கம்புரிந்து, அவர்சாபத்தால் அரக்கனாயினன். இது பற்றியன்றே நாயனாரும், மனமொழிமெய்கள் அடங்குதற்கேதுவாகிய நூல்களையோதியும், அவ்வடக்கத்தால்வரும் பயனையறிந்தும், பிறருக்கு அதனையறியும்படிச் சொல்லியும், தான்அடங்கி நடவாதமூடன்போல மூடர் உலகிலில்லை. என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திர விரிவைக் காஞ்சிப்புராணம் பன்னிருநாமப்படலத்துட் காண்க. (அசு)

புல்லறிவாண்மை.

அஃதாவது; சிற்றறிவினனாயிருந்தே தன்னைப்பேரறிவினனாக மதித்து, உயர்ந்தோர்கூறும் உறுதிச்சொல்லைக் கொள்ளாமை.

ஓகையினால் வேதா வுரையையுமெள் ளிச்சுதன்மன்
மூகையனாய்ச் சேர்ந்தான் முருகேசா—வாகை

அரும்மறை சோரு மறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு.

(இ-ள்.) முருகேசா! காஸ்மீரத்தையாளும் வச்சிரதேயமன்னனுடைய புரோகிதனுகிய சுதன்மன் விஷ்ணுமூர்த்தியை வழிபட்டு, பெறுதற்கரிய கல்வியைப் பெற்றிருந்தும், கற்றுணர்ந்த பெரியோர் பலரையும் அவமதித்து வந்தனன். அஃதுணர்ந்த பிரமதேவர் இரக்கமுற்று, அந்தணவுருக்கொண்டுவந்து, நல்லறிவுச் சுடர்கொளுத்தவும், அவர்மொழியையும் உட்கொள்ளாது இகழ்ந்து, அவர்சாபத்தால் நாவிழந்து ஊமையாயினன். இதுபற்றியன்றே நாயனுரும், பெறுதற்கரிய உபதேசப்பொருளைப்பெற்றும், உட்கொள்ளாதபோக்கும் புல்லறிவாளன் அவ்வுறுதியறியாமையால் தானே தனக்கு மிகுந்த வருத்தத்தைச் செய்துகொள்ளுவான். என்றருளிச் செய்தனர். எ-று. வாகை-வெற்றி.

இச்சரித்திரவிரிவை உபதேசகாண்டம் விபூதிமான்மியச்சருக்கத்துட் காண்க. (அரு)

இகல்.

அஃதாவது, இருவர் தம்முள்ளே போர்செய்து வலிமை
தொலைதற்கு ஏதுவாகிய மாறுபாடு.

ஆதியையும் வெல்வான் சலந்தரன்சென் றூழியெஃக
மோதமுடி வுற்றான் முருகேசா—வோதில்
இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலு நணித்து.

(இ-ள்.) முருகேசா! சலந்தராசுரன் பிரமவிஷ்ணுக்கள் முதலிய தேவர்களைவென்ற செருக்கால் சிவபெருமானையும் வெல்லத் துணிந்து, புறப்படும்பொழுது அவன்மனைவியாகிய பிருந்தை தடுக்

கவும் மறுத்து, திருக்கைலைமலைச்சாரலை அடைய; அஃதுணர்ந்த பெருமான் அந்தணராயெழுந்தருளிவந்து, அவனதுகருத்தையறிந்து, நீ சிவபெருமானைவெல்லுதலரிது; மீள்வையேல் பிழைப்பாய்; எனவுணர்த்தினர். அவன் அதற்கு உடம்படாமைகண்டு, உனக்கு வெல்லுமாற்றலுண்டாயின் யாம் நிலத்திலேகீறும் இச்சக்கரத்தையெடுப்பாயாக என்றருள; அத்திகிரியை வலிந்தெடுத்து சிரமேற்றாங்கி, அதனால் இருகூறாகப் பிளக்கப்பட்டு மாண்டனன். இதுபற்றியன்றே நாயனாரும், பிறரோடு மாறுபடுதலிலேமிகுதல் எனக்கு இனிதென்றுசெய்பவனது உயிர்வாழ்க்கை பிழைபடுதலும் முற்றுங்கெடுதலும் சிறிதுபொழுதில் உண்டாகும். என்றருளிச்செய்தனர். எ-று. ஆழி எஃகம் - சக்கராயுதம். மோதல்-ஈண்டுப் பிளத்தலென்னும்பொருட்டு.

இச்சரித்திரவிரிவைக் கந்தபுராணம் ததீசியுத்தரப்படலத்தும், இலிங்கபுராணம், கூர்மபுராணம், காஞ்சிப்புராணமுதலியவற்றும் காண்க. (அகூ)

பகைமாட்சி.

அஃதாவது, அறிவில்லாமைமுதலிய குற்றங்களுடைமையால் பகையை மாட்சிமைப்படுத்தல்.

நந்தியெதிர் செம்மாந்தே நாகாரி யெஞ்சலிலா
முந்தைவலி தோற்றான் முருகேசா—வுந்தும்
வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார்மேன் மேக பகை.

(இ-ள்.) முருகேசா! திருக்கைலையில் சிவபிரானைத் தரிசித்தற்பொருட்டு விஷ்ணுமூர்த்தி உள்ளேசென்றபோது, அவரதுவாகனமாகிய கருடன் வாயிலின்கண் இருந்த இடபதேவரைவணங்காது பகைத்து, இறுமாந்துநின்றமையால் அவர் விடு

த்த சிறுமூச்சிற்பிறந்த பெருங்காற்றால் மொத்துண்டு, சிறகு மூரிபட்டு, இதற்குமுன்னே இந்திரன்முதலியவரைவென்ற வலிமையையுமிழந்து வருந்தினன். இதுபற்றியன்றே நாயனாரும், தம்மின்வலியவர்க்குப் பகையாய் எதிர்த்தலை ஒழியக்கடவர்; மற்றை மெலியவர்க்குப் பகையாதலை ஒழியாமல் விரும்பக்கடவர். என்றருளிச்செய்தனர். எ-று. நாகாரி-கருடன். மேக-மேவுக.

இச்சரித்திர விரிவைக் காஞ்சிப்புராணம் தழுவக்குழைந்த படலத்தும், திருக்கழுக்குன்றப்புராண முதலியவற்றும் காண்க.

பகைத்திறந்தெரிதல்.

அஃதாவது, பகைத்திறங்களை ஆராய்ந்தறிதல்.

ஆர்த்தொரன்பர் புத்தநந்தி யைச்செகுத்தார் சம்பந்த
மூர்த்திதிரு வாக்கான் முருகேசா—சீர்த்திமிகு
வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை.

(இ-ள்.) முருகேசா! திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் எழுந்தருளுங்கால், பரசமயகோளரிவந்தார் என்றுமுழங்கிய திருச்சின்னவொலியைப் புத்தநந்தியென்பவன்கேட்டுப் பொறாமைகொண்டு, நீவிர் இவ்வாறுஊதுதல் கூடாது என்றுமறுக்க; நாயனாருடைய அன்பருள் ஒருவர் கோபமுதிர்ந்து, அந்நாயனார் திருவாக்காகிய * "புத்தர்சமண்கழுக்கையர்" என்னுந்தேவாரத்தையோதி, அவன்றலையிலே இடிவிழச்செய்து, மடித்தனர். இதுபற்றியன்றே நாயனாரும், ஒருவன் வில்லையேராகவுடைய வுழவராகிய வீரரோடு பகைகொண்டாலும், சொல்லையேராகவுடைய வுழவ

---

* "புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச், சித்தத் தவர்க டெளிந்து தேறின, வித்தக நீறணி வார்வி னைப்பகைக், கத்திர மாவன வஞ்செ ழுத்துமே."

ராகிய அறிவினரோடு பகைகொள்ளாதொழியக் கடவன்.' என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைப் பெரியபுராணத்துட் காண்க. (அஅ)

உட்பகை.

அஃதாவது, புறப்பகைக்கு இடமாக்கிக்கொடுத்து அது வெல்லுமளவும் உள்ளாய்நிற்கும் பகை.

சத்திமுத னூற்றுவர்மாய்ந் தார்விசுவா மித்திரனுண்
மொய்த்தபகை யாலே முருகேசா—வைத்த
அரம்பொருத பொன்போலத் தேயு முரம்பொரு
துட்பகை யுற்ற குடி.

(இ-ள்.) முருகேசா! கௌசிகனென்னும் அரசன் ஒருநாள் வேட்டைக்குச்சென்று இளைத்து, சேனைகளோடு வசிட்டமுனிவரது ஆச்சிரமத்தையடைய; அம்முனிவர் கட்டளைப்படி காமதேனு பல மாதர் உருக்கொண்டு, அரசனுக்கும் சேனைகட்கும் விருந்து செய்து உபசரித்தது. அதுகண்ட அரசன் ஆச்சரியமுற்று, அதைக் கேட்க; முனிவர் இது விண்ணுலகத்ததாகலின் யான் கொடுக்குந் தகுதியதன்று என்றுவற்புறுத்தவும், அரசன்வலிந்துபற்றியதால் அது சேனைகளையழித்து விண்ணுலகடைந்தது. அப்போது அரசன் குமாரர் நூற்றுவரும் வசிட்டமுனிவரையெதிர்த்து, பாணங்களைப் பொழிந்து, அவர்பார்வையா லிறந்தமையின் அரசன்மிகமுனிந்து, சிவபெருமானிடம்பெற்ற அரிய அஸ்திரங்களையேவி, அவையாவும் முனிவர்நாட்டிய தண்டத்தில் ஒளித்தமையைக்கண்டு, தவத்தின் மிக்கது இல்லையெனவியந்து, அரசுரிமையைத்துறந்து தவமியற்றி, விசுவாமித்திரரென்னும் பிரமமுனிவராகியும் முன்னே தம்புதல்வரைக் கொன்றமைகாரணமாக, அவ்வசிட்டமுனிவர்பால்வைத்த உட்பகையால் ஒரு அரக்கனையேவ; அவனால் அம்முனிவர்து புதல்

வராகிய சத்திமுனிவர் முதலிய நூற்றுவரும் மடிந்தனர். இது பற்றியன்றே நாயனாரும், உட்பகையுண்டாகிய குடியானது, முன் வளர்ந்துவந்ததேயாயினும் அரத்திற் றேய்க்கப்பட்ட இரும்பு போல அப்பகையாற்றேய்க்கப்பட்டு, வலிமைதேயும். என்றருளிச் செய்தனர். ஏ-று. வை-கூர்மை.

இச்சரித்திரவிரிவைப் பாரதம் இலிங்கபுராணம் காஞ்சிப் புராணம் திருவானைக்காப்புராணமுதலியவற்றுட் காண்க. (அகூ)

பெரியாரைப்பிழையாமை.

அஃதாவது, பெரியராயினாரை அவமதித்தொடவாமை.

தெற்றியுதங் கற்கமிழ்தீ யாதுவஞ்சித் திந்திரன்சீர்
முற்றுமிழந் தெய்த்தான் முருகேசா—வுற்றுணரின்
ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.

(இ-ள்.) முருகேசா! உதங்கமுனிவர் அமிர்தம்வேண்டி அருந்தவம்புரியுங்கால், சிவபிரான் அதனையளிக்குமாறு இந்திரனுக்குப் பணித்தும், அவன் அவரை வஞ்சிக்கநினைந்து, அமிர்தத்தைத் தோலிற்பொதிந்து கைக்கொண்டு நீசவுருவாய்ச்சென்று, எதிரில்வைத்து, இவ்வமிர்தத்தை எடுத்துக்கொள்கவென்றுசொல்ல; அவர் நீசனே தூரநீங்குக எனத் துரத்திவிட்டு, ஆலோசித்து உண்மையுணர்ந்து, இவ்வாறுசெய்தோன் முனிவர்சாபத்தால் செல்வமும் வன்மையும் இழக்கக்கடவன் எனச்சபித்தனர். இங்ஙனமிருக்க; பிருகுமுனிவரதுபுதல்வர் சியவனர்என்பவர் சரீரமுழுதும் புற்றுமூடத் தவஞ்செய்யுநாளில், சையாதிவேந்தனுடைய புதல்வி சுகன்னியென்பவள் மலர்கொய்யச்சென்று, அப்புற்றிலேயுள்ள துவாரத்திலே கண்விளங்குவதை நோக்கி, பொன்வண்டெனக் கருதித் துரும்பிட்டுக்கிண்டலும், அவர் கண்புதைத்தமையால் சேனைமுழு

மையும் கண்ணொளிமழுங்குதலைக்கண்டு, அரசன்விசாரித்து, அச்ச முற்றணுகிவணங்கி, அக்குற்றம்பொறுக்குமாறு தன்மகளை விவாகஞ்செய்து கொடுத்துத் தன்னகரையடைந்தனன். அம்முனிவர் அவளோடுவாழுநாளில், தமக்கு யெளவனமளித்த அச்சுவினிதேவர் கட்கு யாகத்திலே அவிப்பாகம் ஏற்படுத்தவுத்தேசித்து, தாமியற்றியயாகத்தில் பாகம்வகுக்குங்கால், இந்திரன் அவர்க்குக் கொடாவண்ணந்தடுத்து, அவருடன்படாமையாற் சீறி, தனதுவச்சிரத்தை வீசி, அபசயமுற்றதன்றியும், அவர்சாபத்தால் செல்வமுமிழந்து துயருழந்து, இவற்றிற்குக்காரணம் உதங்கரைவஞ்சித்தமையேயெனத்துணிந்து, அவரைவழிபட்டு அமிழ்தீர்ந்து, பழையநிலைமையையடைந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், உயர்ந்த விரதங்களையுடையவர் கோபிப்பாராயின் இந்திரனும் நடுவே தன் பதமிழந்து கெடுவான். என்றருளிச்செய்தனர். எ-று. தெற்றல்-மாறுபடல். வேந்தன்-இந்திரன். வேந்து-வேந்தனது பதவி. சிவனர்-சௌனகர்.

இச்சரித்திரவிரிவைப் பூவாளூர்ப்புராணம் இந்திரனருச்சனைப் படலத்தும், சௌனகர்சரித்திரவிரிவைப் பாரதம் தருமர்தீர்த்த யாத்திரைச்சருக்கத்தும் காண்க. (கூ0)

பெண்வழிச்சேறல்.

அஃதாவது, தன்வழிநடத்தற்கு உரியவளாகிய மனைவிவழியே தான் நடத்தல்.

தாசரதி யுஞ்சீதை தன்வழிப்பட் டோர்மானைன்
மோசம்போய்ச் சோர்ந்தான் முருகேசா—பேசுங்கால்
எண்சேர்ந்த நெஞ்சுத் திடனுடையார்க் கென்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில்.

இ-ள்.) முருகேசா! மாரீசன் இராவணன்கட்டளைப்படி இளமையும் பொன்னிறமும்வாய்ந்த மான்வடிவுகொண்டு, தண்டகா

ரணியத்தையடைந்தவழி, அதனைப் பிடித்துத்தரும்படிச் சீதை வேண்ட; அப்போது இலக்குமனர் இது அரக்கரதுவஞ்சனையால் வந்த மாயமானேயெனவுணர்த்தியும், இராமமூர்த்தி அவர்வார்த்தையைமறுத்து, அதனைப்பிடிக்கச்சென்று சீதையுமிழந்து, சிந்தை கலங்கினர். இதுபற்றியன்றே நாயனரும், கருமஆலோசனையிலே சென்ற மனத்தையும் அதனாலாகியசெல்வத்தையும் உடையவர்களுக்கு மனையாளைச்சேர்தலால் விளையும் அறிவின்மை எக்காலத்தும் உண்டாகாது. என்றருளிச்செய்தனர். எ-று. எனவே, உண்டாகாநெறியிலே முயல்வரென்பதுகருத்து. திரிமூர்த்திகளுள்ளே ஒருவராகவைத்தெண்ணப்படும். திருமாலினவதாரமாகிய இராமமூர்த்தியும் மோசம்போய்ச்சோர்வரேல், ஏனையோர்நிலைமையை இசைக்கவேண்டுவதில்லையென்னும் பொருள்தந்துநிற்றலின் உம்மை-உயர்சிறப்பு. மோசம்போதல் - அற்பமாகிய வேற்றுப்பொருளைவிரும்பிச் சிறந்த உரியபொருளையும் இழத்தல்.

இச்சரித்திரவிரிவை இராமாயணத்துட் காண்க. (கூக)

வரைவின்மகளிர்.

அஃதாவது, தமது இன்பத்தை விலைகொடுப்பவர்யாவர்க்கும் விற்பதல்லது அதற்கு ஆவார் ஆகாதார் என்னும் வரைவில்லாத மகளிரது இயல்பு.

மாழ்கிவரை வின்மகளிர் வஞ்சனையிற் பாட்களன்றான்
மூழ்கியல்லாப் புற்றான் முருகேசா—வீழ்கும்
பொருட்பொருளார் புன்னலந் தோயா ரருட்பொரு
ளாயு மறிவி னவர்.

(இ-ள்.) முருகேசா! அளகைநகரத்துள்ள பாட்களனென்னும் ஓரந்தணன் தான்தேடிய பெரியநிதிக்குவியல்களை வரைவின்மகளிர்க்குஅளித்து, பின்னர் ஈதற்குப்பொருளின்மையால் களவுசெ

ய்துகொடுத்து வாழுநாளிலே ஒருநாள், அந்தணருடைய வேள்விக்குரியஒரு பசுவைத்திருடி, காவலரால் கால்வெட்டுண்டு, ஆதரிப்பாரின்றி அலைந்தனன். இதுபற்றியன்றோ நாயனாரும், இன்பமாகிய்பொருளையிகழ்ந்து பொருளாகியபொருளையே விரும்பும் மகளிரது புல்லியநலத்தை, அருளோடுகூடியபொருளை ஆராய்ந்து சம்பாதிக்கும் அறிவையுடையவர் தீண்டார். என்றருளிச்செய்தனர். எ-று. அல்லாப்பு-துன்புறுதல்.

இச்சரித்திரவிரிவைத்திருவாப்பனூர்ப்புராணத்துட் காண்க.

கள்ளுண்ணாமை.

அஃதாவது, ஒழுக்கமும் உணர்வுமழிப்பதாகிய கள்ளினை உண்ணாமையினது சிறப்பு.

தூயபல பத்திரன்றான் சூதனைமாய்த் தல்லலுற்றான்
மூயமது மாலான் முருகேசா—வாயுங்கால்
துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் என்றுமன்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

(இ-ள்) முருகேசா! பலராமர் ஒருநாள் மதுபானஞ்செய்து மயங்கினவராய், தன்மனைவியாகிய இரேவதியோடு பலமாதர்கள் சூழத் தளர்நடையுடன் இரைவதமலையையடைந்து, வனச்சிறப்புக்களை நோக்கிக்கொண்டே சிவபுராணபடனம் செய்துகொண்டிருக்கும் சூதமுனிவரது சமீபத்திலணுக; முனிவர்கள் இவர் மதுபானத்தால மயங்கியிருத்தலின், உபசரித்து அனுப்பிவிடுதலே தகுதியெனத்துணிந்து, ஒருங்கெழுந்து அவரை உபசரித்தனர். அப்பலராமர் அங்கெழாதிருந்த சூதமுனிவரைக்கண்டு, வெகுளிபொங்கி, அம்மதுமயக்கத்தால் அவரைக்கொன்று பின்றெளிந்து, ஓ ஓ! நான் இப்பெரும்பாதகத்தைச் செய்தமையால் பிரமகத்திதொடர, முனிவரால் அவமதிக்கப்பட்டேன்; மதுபானம் பொல்

லாதது: என்றுவெறுத்து, அம்முனிவரை உயிர்ப்பித்துவிட்டு, தீர்த்தயாத்திரைசெய்து, அப்பிரமகத்தியை நீக்கிக்கொண்டனர். இதுபற்றியன்றே நாயனாரும், உறங்கினவர் இறந்தவரின்வேறாயினும், அக்காலத்தே அறிவில்லாமையால் வேறெனப்படார்; அப்படியே கள்ளுண்பவர் எக்காலத்தும் அறிவில்லாமையால், நஞ்சுண்பவரே யாவர்: அவர் வேறாயினும், வேறெனப்படார். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைமார்க்கண்டேயபுராணத்துட் காண்க. (கூரு)

சூது.

அஃதாவது, சூதாடுதலின் இயல்பு.

வெஞ்சூதாற் றந்தை வெறுக்கக் குணநிதிதான்
முஞ்சினனூண் வவ்வி முருகேசா—துஞ்சும்
அகடாரா ரல்ல லுழப்பர்சூ தென்னு
முகடியான் மூடப்பட் டார்.

(இ-ள்.) முருகேசா! காம்பிலிநாட்டிலே வேள்விதத்தனது புத்திரனாகிய குணநிதியென்னுமந்தணன் தன்பிதா ஈட்டிவைத்த பொருள்களைக் கவர்ந்துபோய்ச் சூதிலேதோற்பதைத் தாயறிந்து, மைந்தனே! உன்பிதா உன்னைவினவுந்தோறும் நின்கொடுஞ் செய்கையைமறைத்து வேதமோதச் சென்றானென உணர்த்திவந்தேன்; அவர் ஒழுக்கமுடையவராதலால் இதையறிவரேல் என்னோடுநின்னையும் ஒருங்குநீக்குவர் எனவுணர்த்தியும், அத்தீத்தொழிலை விடாதொழுகி, மற்றொருநாள் பிதாவினது கைம்மோதிரத்தையும் கவர்ந்துபோய்த்தோற்றனன். அவன்பிதா அதையணிந்திருந்த ஒருவனால் தன்புத்திரனது செய்கையையறிந்து மனைவியைவினவி, அவள் மறைத்துக்கூறியவார்த்தையால் உண்மைதெளிந்து, அவ்விருவரையும் நீக்கிவிட்டு, வேறுமணமுடிக்க; அக்குணநிதியெ

ன்பவன் தாயையுமகன்று, ஆலயத்திலே சிவராத்திரியில் செவபெருமானுக்கு நிவேதித்த அன்னத்தைக்கவர்ந்து, காவலரால் வெட்டுண்டிறந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும் தன்பெயர்சொல்லல் மங்கலமல்லாமையால் சூதென்று வேறுபெயர்சொல்லப்படுகிற மூதேவியால் விழுங்கப்பட்டவர் இம்மையிலே வயிறுநிறையப்பெறார்; துன்பமுமனுபவிப்பர். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைக் காசிகாண்டம் சிவசன்மா வாயுவுலகமும் குபேரனுலகமுங்கண்டஅத்தியாயத்துட் காண்க. (கூச)

மருந்து.

அஃதாவது, பழவினையாலும் காரணங்களாலும் மக்கட்குவரும் பிணிகளைத்தீர்க்கும் மருந்தின் திறம்.

சீலமிலாப் பேய்ச்சமணர் சிந்தைநைந்தார் பாண்டியனைப்
மூலமறி யாது முருகேசா—வேலவே
நோய்நாடி நோய்முத னாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

(இ-ள்.) முருகேசா! ஒழுக்கமில்லாத பேய்ச்சமணர்கள் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருடைய திருமடத்திலே தீப்பெய்தமையால் பாண்டியருக்குச் சுரநோயுண்டாகியவழி, அதன்மூலமும் அதனைத்தணிக்குமருந்தும் உணராது அச்சமணர்கள் வீண்முயற்சிசெய்துகலங்க; நாயனார் உடனே திருநீறாகிய அருமருந்தால் அந்நோயைத் தணித்தனர். இதுபற்றியன்றே நாயனாரும், மருத்துவன் நோயாளியினிடத்து நிகழ்கின்ற நோயை அதன்குறிகளால் இன்னதென்றுணிந்து, பின்பு அந்நோய் வருதற்குக் காரணத்தையாராய்ந்து, பின் அதுதீர்க்கும் உபாயத்தினையறிந்து, அதனைப் பிழைபடாமற் செய்யக்கடவன். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைப் பெரியபுராணம் திருவிளையாடற்புராண முதலியவற்றுட் காண்க. (கரு)

குடிமை.

அஃதாவது, உயர்ந்தகுடியிற் பிறந்தாரது தன்மை.

நித்திரைபோர்க் கொன்றவசு வத்தாம னீக்கமுற்றான்
முத்தமுனி வோரான் முருகேசா—மெய்த்த
குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து.

(இ-ள்.) முருகேசா! திட்டத்துய்மன்முதலியோர் பதினெட்டாநாட்பகலிற்செய்த போர்மெலிவினால், அன்றிரவில் பாசறையிலே அயர்ந்துறங்கும்போது, அசுவத்தாமன் சிவபிரானிடம்பெற்ற வாட்படைகொண்டு அவரைவதைத்தமையால், தாம்சென்ற இடங்களிலெல்லாம் முனிவரால் கொடியவனென நீக்கப்பட்டு, அயர்ந்து, சேதுயாத்திரைசெய்து, அப்பழி அகலப்பெற்றனன். இது பற்றியன்றே நாயனாரும், உயர்ந்தகுடியிற் பிறந்தவரிடத்து உண்டாகுங் குற்றமானது, சிறிதேயாயினும் ஆகாயத்தில் சந்திரனிடத்துக் களங்கம்போல உலகெங்கும்பரந்து வெளிப்படும். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைச் சேதுபுராணத்தும் பாரதத்தும் காண்க.

மானம்.

அஃதாவது, எந்நாளும் தம்முடைய நிலையிலே தாழாமையும் ஊழால் தாழ்வுவந்தவிடத்து உயிர்வாழாமையுமாம்.

தேசுருவா னின்னிலைமை தேர்ந்துமா னத்திறந்தான்
மூசுபுகழ்ச் சூரன் முருகேசா—நேசமிகுஞ்
சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்.

(இ-ள்.) முருகேசா! தேவரீர் பெரும்புகழ்படைத்த சூரபத்மனோடு யுத்தம்செய்தகாலத்தில், அவனுக்குக் காட்டிய விசுவரூப தரிசனத்தால் நீரே முதற்கடவுளெனத் துணிந்தும், பகைவராய் வந்தமையின், வணங்குதல்முறையன்று என்னும் மானத்தாற்போர்செய்து, வேற்படையால் மடிந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், புகழுடனே மானத்தைநிறுத்துதலை விரும்புவோர் புகழ் சம்பாதிக்குமிடத்தும் தங்குடிக்கு ஒவ்வாத இழிதொழில்களைச் செய்யார். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைக் கந்தபுராணத்துட் காண்க. (கஎ)

பெருமை.

அஃதாவது, செய்தற்கரியசெய்தல் செருக்கில்லாமை பிறர் குற்றங்கூறாமை என்றிவைமுதலிய நற்குணங்களால் பெரியராயினரது தன்மை.

கும்பமுனி யானகுடன் சர்ப்பவென்றே குண்டலியாய்
மொய்ம்பிழந்து வீழ்ந்தான் முருகேசா—வும்பரினும்
மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல் லவர்.

(இ-ள்.) முருகேசா! வியாழபகவான் ஒருநாள் இந்திரனது சபையையடையும்பொழுது, அவன் அரம்பையர் ஆடல்பாடல்களில் கருத்தைச்செலுத்தி அவரைவழிபடாதகுற்றத்தால் செல்வத்தையிழந்ததன்றியும், தனக்குச் சத்துருவாயெதிர்த்த விருத்திராசுரனைக்கொன்று, பிரமகத்திதொடர மறைந்துமிருக்க; தேவர்கள் அரசனில்லாமல் தம்முலகம் அழிதலைநோக்கி, பூலோகத்திலேஅசுவமேதமியற்றிய நகுடனென்பவனை இந்திரனாக்கினர். அவன் போகத்தைவிரும்பி, இந்திராணியினிடம் செல்லுங்கால், தனது சிவிகையைத்தாங்கிவந்த சப்தமுனிவர்களின் பெருமையையுணராது

சீக்கிரக்குறிப்பாகச் சர்ப்ப என்னலும், முன்னர்த்தாங்கிச்செல்லும் அகத்தியமுனிவர் அவனிறுமாப்பையுணர்ந்துமுனிந்து, நீ சர்ப்பமாருக என்றுசபிக்க; அங்ஙனமே அவ்வுருவாகிவிழுந்தனன். இது பற்றியன்றே நாயனாரும், செய்தற்கரியவைகளைச் செய்யாமல் சிறியராயினோர் (தேவரினும்) மேலாக உயர்ந்த ஆசனங்களில் இருந்தாராயினும் பெரியராகார்; அவைசெய்து பெரியராயினோர் தாழ்ந்த வெறுநிலத்திலிருந்தாராயினும் சிறியராகார். என்றருளிச்செய்தனர். எ-று. கும்பமுனியால் வீழ்ந்தான் எனக்கூட்டுக.

இச்சரித்திரவிரிவைத் திருவிளையாடற்புராணம் இந்திரன் பழிதீர்த்தபடலத்துட் காண்க. (கூஅ)

சான்றாண்மை.

அஃதாவது, பலகுணங்களாலும் நிறைந்து, அவைகளை
ஆளுந்தற்றன்மை.

தொக்கிடும்பை கௌசிகனாற் சூழ்ந்துமரிச் சந்திரன்சொன்
முக்கியமாக் காத்தான் முருகேசா—வக்கணமே
ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார்.

(இ-ள்.) முருகேசா! தேவசபையில் வசிட்டமுனிவரால் உலகத்திலே அரிச்சந்திரனே சத்தியவானெனக் கூறக்கேட்ட விசுவாமித்திரமுனிவர், யாம் அவனுடைய உறுதியை அறிவோமெனச் சூளுரைத்துச்சென்று, அரசனுடைய அரசுரிமை முதலியவற்றை வஞ்சகத்தாற்கவர்ந்துகொண்டு, அவன்மனைவியையும் புதல்வனையும் அந்தணனுக்கும், அரசனை நீசனுக்கும், அடிமையாகச்செய்ததுமன்றி, புதல்வன்இறத்தல்முதலிய பலதுன்பங்களைவிளைத்தும், சத்தியத்திற்றவறாதிருந்தமையால், சிவபெருமான்கட்டளைப்படி தனது பெரிய அரசுரிமையையும் விசுவாமித்திரமுனிவரது அரிய

தவத்திற்பாதியையும்பெற்று இனிதுவாழ்ந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், சால்புடைமையாகிய கடலுக்குக் கரையென்று சொல்லப்படுவோர் மற்றைக்கடலும் கரையுள்நில்லாமற் காலம் வேறுபட்டாலும் தாம் வேறுபடார். என்றருளிச்செய்தனர். எ-று. உம்மை-உயர்வுசிறப்பு. ஆழி-கரை.

இச்சரித்திர விரிவை மார்க்கண்டேயபுராணம் அரிச்சந்திர புராணமுதலியவற்றுட் காண்க. (கூகூ)

பண்புடைமை.

அஃதாவது, பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாது நின்றே எல்லாரியல்புகளும் அறிந்நடத்தல்.

ஓவாச் சிவசமய மோங்கியதே நால்வரான்
மூவா முதலே முருகேசா—தாவாத
பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேன்
மண்புக்கு மாய்வது மன்.

(இ-ள்.) முருகேசா! சமணர் பௌத்தர்முதலிய புறச்சமயிகளால், சைவசமயம் குறைவையடைந்தவழித் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகசுவாமிகள் என்னும்நால்வர்களும், சிவபெருமானுடைய திருவருள்கொண்டு, அப்புறச்சமயிகளைக் களைந்தமையால் சைவசமயம் உலகத்தின்கண்ணே தழைத்தோங்கியது. இதுபற்றியன்றே நாயனாரும், பண்புடையவரிடத்தே பொருந்துதலால், உலகியல் எந்நாளும் உண்டாகிவருகின்றது. அங்கே பொருந்துதல் இல்லையாயின் அவ்வுலகியல் மண்ணிற்புகுந்து, மாய்ந்துபோவதாம். என்றருளிச் செய்தனர். எ-று. உலகு உலகியலையுணர்த்தலின் ஆகுபெயர்.

நால்வராற் சைவசமயந் தழைத்தோங்கியதென்பதை "சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுநற் சுந்தரனுஞ், சிற்கோல வாதவூர்த் தேசிகனு—முற்கோலி, வந்திலரே னீறெங்கே மாமறைநூ லெங்கே, யெந்தைபிரா னஞ்செழுத்தெங் கே." என்னும் சிவானந்தமாலைச்செய்யுளானும் உணர்க.

இச்சரித்திரவிரிவைப் பெரியபுராணம் திருவிளையாடற்புராணம் திருவாதவூரர்புராணம் திருநெல்வேலிப்புராண முதலியவற்றுட் காண்க. (௧௦௦)

நன்றியில்செல்வம்.

அஃதாவது, சம்பாதித்தவனுக்கும் பிறர்க்கும் பயன்படுதலில்லாத செல்வத்தின் இயல்பு.

மாழ்கிநிதி நல்காநால் வாணிகர்மாண் டார்கடலுண்
மூழ்கிநிதி யோடு முருகேசா—வாழ்வுமிக
ஈட்டி மிவறி யிசைவேண்டா வாடவர்
தோற்ற நிலக்குப் பொறை.

(இ-ள்.) முருகேசா! வடதேயத்திலே, ஆதித்தபுரத்திலேயுள்ள விச்சுவவசுவென்னும் வணிகனுடைய நான்குபுத்திரர்கள் பொருளைப்பெருக்கி வாழுநாளில், ஆதித்தேசுரர் திருப்பணிக்காக யாசித்த அந்தணனுக்குப் பொருளுதவிகூறி அலையச்செய்து, கொடாதபாவத்தால் ஒருநாள் கடலிலே, கப்பலேறிச்சென்றபொழுது, பெருங்காற்றினால் கப்பல்கவிழ, நிதியத்தோடுமூழ்கி மடிந்தனர். இதுபற்றியன்றே நாயனாரும், யாம் பிறரினும்மிகச் சம்பாதிப்போமென்று பொருள்சம்பாதித்தலையேவிரும்பி, அதன்பயனாகிய புகழைவிரும்பாத மக்களது பிறப்பு நிலத்திற்குப் பாரமாகின்ற அவ்வளவே. என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவை உபதேசகாண்டம் சிவபுண்ணியமான்மியச்சருக்கத்துட் காண்க. (கoக)

நாணுடைமை.

அஃதாவது, முன்சொல்லப்பட்ட சால்பு பண்பு முதலிய குணங்களாலுயர்ந்தோர் தமக்குத்தகாத கருமங்களில் நாணுதலுடையராந்தன்மை.

அந்தணர்க்கிந் தில்லினை நாணத்தன னழ்கத்துணிந்தா
ரந்துபத்தி ராயு முருகேசா—நந்தலிலா [ன்
நாண்வேலி சொள்ளாது மன்றோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்.

(இ-ள்) முருகேசா! பத்திராயுஎன்னுமரசன் விடபரென்னுஞ் சிவயோகியருளால் மகததேசாதிபதியை வென்று, அரசுரிமைபெற்றுவாழுநாளில் ஒருநாள், தன்மனைவி கீர்த்திமாலினியென்பவளோடு ஒருசோலையையடைந்திருக்கும்போது, சிவபிரான் அவனதுநீதியை யாவர்க்கும்புலப்படுத்தவிரும்பி, உமாதேவியார் பார்ப்பனியாகிப் பின்வர அந்தணவுருக்கொண்டு சென்று, அரசனைநோக்கி, எங்களை இப்புலியினின்றும் காப்பாயாக என்றனர். உடனே அரசன் பாணஞ்செலுத்தவும் தொடர்ந்த அம்மாயப்புலி அதை இலட்சியப்படுத்தாமல் பார்ப்பனியைக்கொன்று தூக்கிச்செல்ல; அந்தணர் இதனைக் காவாத உனதுசெங்கோல் எத்தன்மையது? உய்யவேண்டுமேல் உன்மனைவியை எனக்குக்கொடுப்பாயாக: அன்றேல் நீ அக்கினிநரகம்புகும்படிச் சபிப்பேன் என்றனர். அதுகேட்ட அரசன், நரகவேதனையையும், இல்லையென்பதினிழிவையும், யோசித்துத் தன்மனைவியை அவர்க்குக்கொடுத்து, அந்நாணத்தால் இவ்வுலகவாழ்வைவெறுத்து, அக்கினியில்விழத்துணியும்போது சிவபிரான்தோன்றி, அநுக்கிரகித்தவாறே மனைவியுடன் சிவலோகமடைந்

தனன். இதுபற்றியன்றே நாயனாரும், உயர்ந்தவர் தமக்குக் காப்பர்க நாணத்தைக்கொள்வதல்லாமல் அகன்றபூமியைக்கொள்ள விரும்பார். என்றருளிச்செய்தனர். எ-று. மன்னும் ஓவும் அசை.

இச்சரித்திரவிரிவைப் பிரமோத்தரகாண்டம் பத்திராயுமுத்திபெற்றவத்தியாயத்துட் காண்க. (கoஉ)

குடிசெயல்வகை.

அஃதாவது, தான்பிறந்தகுடியை உயரச்செய்தலின் விதம்.

சத்துருவை மாய்த்தான் பராசரன்றன் சந்ததியை
முத்திபதத் துய்த்தே முருகேசா—மெத்தில்
கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில்.

(இ-ள்.) முருகேசா! பராசரமுனிவர் தமதுபிதாவாகிய சத்திமுனிவர்முதலிய நாற்றுவரையும் உதிரனென்னுமரக்கன் விசுவாமித்திரமுனிவர்தூண்டுதலாற் கொன்றமையை அதிர்சந்தியென்னும் தாயாலுணர்ந்து, கலக்கமுற்று, சிவபெருமானைக்குறித்துத் தவமியற்றினர். பெருமானெழுந்தருளி, வணங்கிநிற்கும் அம்முனிவருக்குச் சத்துருவையழிக்கும் ஆற்றலைத்தந்தருள; முனிவர்அக்கடவுளோடுவந்த பிதாமுதலியோரைவழிபட்டு, தமது தவத்தால் அவர்கள் பிதிர்லோகத்தினின்றும் சிவலோகமடைவதையுணர்ந்து மகிழ்ந்து, பகைவனாகிய அரக்கனையும் அவன்சந்ததியோடு யாகத்தால்மடித்து, தாம்பிறந்தகுடியை உயர்த்தினர். இதுபற்றியன்றே நாயனாரும், தன்குடியையுயர்த்தற்குத் தொடங்கியகருமமுடியாமையால் அக்கருமஞ்செய்தற்குக் கையொழியேனென்கிற முயற்சிப்பெருமைபோல ஒருவனுக்கு மேம்பாடுடைய பெருமை பிறிது இல்லை. என்றருளிச்செய்தனர். எ-று. மெத்து - மென்மை.

இச்சரித்திரவிரிவை இலிங்கபுராணம் பாரதம் காஞ்சிப்புராணம் திருவானைக்காப்புராணமுதலியவற்றுட் காண்க. (௧0௩)

உழவு.

அஃதாவது, சிறுபான்மை வணிகர்க்கும் பெரும்பான்மை வேளாளர்க்குமுரித்தாகிய உழுதற்றொழில்.

இன்னலொறுக்கத் தும்முழவை யேற்றலினீ சற்கமுது
முன்னமைத்தார் மாறர் முருகேசா—வுன்னில்
இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

(இ-ள்.) முருகேசா! இளையான்குடிமாறநாயனார் சிவனடியார்களைப்பேணுதலுடையவராகி, தமதிவளங்குன்றிய வறுமைக்காலத்தும் உழவைவிடாது, தமக்குக்கிடைத்தநெல்லை விதைத்துவைத்து, பசியால்வருந்தியிருக்கும் ஓரிரவிலே, அவரைப்பரிசோதிக்கச் சிவபிரான் அடியவர்வேடமுடையராய் மழையில்நனைந்துகொண்டு பசித்தார்போன்றுஎழுந்தருளி உணவுவேண்டினர். அந்நாயனார் அவரதுநடுக்கத்தைமாற்றியிருத்தி, மழையோடு இருள்செறிதலையு நோக்காது, குறிவழியே தமதுவயலைநாடிச்சென்று, அதிலே மழையால்மிதக்கும் நென்முளைகளை வாரிக்கொண்டுவந்து, திருவமுது செய்வித்து, சிவபதமடைந்தனர். இதுபற்றியன்றே நாயனாரும், தம்முடையகையால் உழுதல்செய்துஉண்ணுதலை இயல்பாகவுடையவர் பிறரைத் தாம்இரவார்; தம்மையிரப்பவர்க்கு அவர்வேண்டியதொன்றை ஒளிக்காமற்கொடுப்பார். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைப் பெரியபுராணத்துட் காண்க. (௧0௪)

நல்குரவு.

அஃதாவது, அனுபவிக்கப்படுவனயாவும் இல்லாமை.

ஆலவா யண்ணறொழும் பைத்தருமி நீங்கவொற்க
மூலமாத் தேர்ந்தான் முருகேசா—ஞாலமிசை

இன்மை யெனவொரு பாவி மறுமையு
மிம்மையு மின்றி வரும்.

(இ-ள்.) முருகேசா! திருவாலவாயின்கண் சோமசுந்தரக்கடவுளைப்பூசிக்கும் அரியதிருத்தொண்டு வாய்க்கப்பெற்ற தருமியென்னும் ஆதிசைவர் நெடுநாள் மழையின்மையாலுண்டாகிய வறுமையின்மெலிந்து, இருமையினும் இன்பமளிக்கும் அத்தொண்டையும் விடத்துணிந்து, சந்நிதியையடைந்து, ஈண்டிருப்பனேல் உணவில்லாமல் இறப்பேன்; ஆதலின் பிழைத்தற்கேதுவாகிய நாட்டையடைந்துவசித்துச் செழித்தபின் இங்கேஅடைகின்றேன். எனமுறையிட்டவழி, கிருபாநிதியாகியபெருமான் திருவருள்கூர்ந்து, "கொங்குதேர்வாழ்க்கை" என்னும் திருப்பாசுரத்தையருளப்பெற்று, அதனைப்பாண்டியனிடத்திற்றந்து பொற்கிழியேற்று, வறுமையினீங்கினர். இதுபற்றியன்றே நாயனாரும், வறுமையெனப்படுகிற,ஒப்பற்றபாவி ஒருவனிடத்துவரும்போது, மறுமையின்பமும் இம்மையின்பமும் அவனுக்கு இல்லையாக வரும். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைச் சீகாளத்திபுராணம்நக்கீரச்சருக்கத்துட் காண்க. (௧0௫)

இரவு.

அஃதாவது, மானங்கெடாத இரவு இரவாமையோடு ஒத்தலின் அவ்விரவின்சிறப்புக் கூறுதல்.

ஒக்கலைவிட் டிக்களத்தை யோகையினி யற்புகையார்
முக்கணனுக் கிந்தார் முருகேசா—மிக்குவரும்
இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை
துன்ப முறாஅ வரின்.

(இ-ள்.) முருகேசா! சிவபெருமான் இயற்பகைநாயனருடைய அன்பைவிளக்க ஒருதூர்த்தவேடங்கொண்டு சென்று, நின்மனைவியை எனக்களித்தல்வேண்டுமென்று இரக்க; அந்நாயனர் மகிழ்ந்தளித்து, பிறரால் அவர்க்கு இடையூறுவாராவண்ணம் உடன்சென்று வழிவிடும்போது, அதுபொறாதெதிர்த்த தமதுசுற்றத்தாரையெல்லாம் தாமேயழித்து, சிவபெருமானுக்கு உவகையைவிளைவித்துத் திருவருள்பெற்றனர். இதுபற்றியன்றே நாயனரும், ஒருவனுக்கு இரந்தபொருள்கள் ஈவாரது அறிவுடைமையால் தான் துன்பமுறாமல்வருமாயின் இரத்தலும் இன்பத்திற்கு ஏதுவாம். என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைப் பெரியபுராணத்துட் காண்க. (கOரு)

இரவச்சம்.

அஃதாவது, மானங்கெடவரும் இரத்தலுக்கு அஞ்சுதல்.

துன்பகல்வோ மென்று துருபதன்பா லேற்றயர்ந்தான்
முன்பு துரோணன் முருகேசா—வின்பமிக
இன்மை யிடும்பை யிரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில்.

(இ-ள்.) முருகேசா! முற்காலத்திலே, தன்குழந்தையருந்துதற்குப் பசுவின்பாலுமின்றி மிக்கவறுமையுற்ற துரோணர், அக்கினிகோத்திரமுனிவரிடம் நம்மோடு முன் வில்வித்தைகற்ற துருபதனால் இத்துன்பத்தை நீக்கிக்கொள்வோமெனத் துணிந்துசென்று, அவனவமதித்து ஒன்றுமுதவாமையால் வெறுத்துமீண்டனர். இதுபற்றியன்றே நாயனரும், வறுமையால்வருந்துன்பத்தை முயற்சிசெய்து நீக்கக்கடவோமென்று நினையாமல், இரந்து நீக்கக்கடவோமென்று நினைக்கும் வன்மைபோல வலிமைப்பாடுடையது இல்லை. என்றருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைப் பாரதம் வாரணவதச்சருக்கத்துட் காண்க. (௧0எ)

கயமை.

அஃதாவது, மேற்சொல்லிய நற்குணங்கள்யாவும் இலராகிய கீழோரது தன்மை.

வஞ்சநலன் வாமதே வற்குத்தவான் வாசியைச்சேய்
முஞ்சியபின் னீந்தான் முருகேசா—வெஞ்சலின்றிச்
சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ்.

(இ-ள்.) முருகேசா! சலனென்னுமரசன் வனஞ்சென்று வேட்டையாடுங்கால் தப்பியோடும் ஒருமானைத்துரத்திக் கொல்லுதற்குத் தனதுதேர்க்குதிரைகள் இளைத்திருந்தமையால் அவ்வனத்திலுள்ள வாமதேவமுனிவருடைய சிறந்த இரண்டுகுதிரைகளை உடனளிப்பேனென்று உறுதிகூறிப் பெற்றுக்கொண்டுபோய், சிலநாட்சென்றமையின், அம்முனிவர் தூதனுப்பியும்கொடாதிருந்ததன்றி, அவர் தாமேவந்துகேட்டுழியும் அவற்றைக்கொடேன்; என்குதிரைகளைத் தருவேனென்றனன். முனிவர் அந்தணர்பொருளை அபகரிப்பது நீதியல்ல; தீமையணுகுமுன்னர் தந்துவிடுகவென்று வற்புறுத்தியவழி, அவன்சினந்து, அவரைக்கொல்லுதற்கு ஒருவீரனைவிடுக்க; அம்முனிவர் அசுரரை மனத்தாற்சிருட்டித்து, அரசனையும்வீரனையுமடித்து, சிலநாட்சென்றபின் அவ்விரசுரிமையைமேற்கொண்டுள்ள அவன்தம்பியாகிய நலனையடைந்து, அக்குதிரைகளைவேண்டினர். வஞ்சமிக்க அவன் அவர்தெய்வீகத்தையறிந்திருந்தும் அவரைக்கொல்லுதற்குத்துணிந்து, பாணத்தையெடுக்க; அவனதுகரம் அசைவற்றதன்றியும் அவர்சபித்தவாறே மகனும்மடியக்கண்டு அஞ்சி, பின்னர்ப்பணிந்து, குதிரைகளையீந்து, அவராசீர்வதித்தபடி-

கையானது இயங்கவும் புதல்வன்உயிர்பெற்றெழவும்பெற்று வாழ்ந்தனன். இதுபற்யன்றே நாயனாரும், ஒருவர்வந்து தங்குறையைச்சொல்லியவளவிலே மேலாயினோர் பிரயோசனப்படுவர்; கரும்புபோல நையநெருக்கியவிடத்தே கீழாயினோர் பிரயோசனப்படுவர். என்றருளிச்செய்தனர். எ - று.

இச்சரித்திரவிரிவைப் பாரதம் மார்க்கண்டாகதையுரைத்த சருக்கத்துட் காண்க. (கOஅ)

பொருட்பால் முற்றிற்று.

காமத்துப்பால்.

தகையணங்குறுத்தல்.

அஃதாவது, தலைமகன் பொழிற்கண்ணே தனித்துநின்றவளது அழகு தனக்கு வருத்தமுண்டாக்குதலைச் சொல்லுதல்.

ஓகையினு ருக்குமணி யொண்மைகண்டு சூர்கொலெனு
மோகமிக்கான் கண்ணன் முருகேசா — வாகின்
அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு.

(இ-ள்.) முருகேசா! விதர்ப்பநாட்டரசன்மகளாகிய உருக்குமணியென்பவள் கிருஷ்ணமூர்த்தியைமணம்புணரவெண்ணி, ஆலயத்தையடைந்து அம்பிகையைப்பிரார்த்தித்துமீண்டு, ஒருசோலையில் இருக்க; அவளைக்குறித்தே அவாரகையினின்றும் புறப்பட்ட கிருஷ்ணமூர்த்தி, அச்சோலையையடைந்து, உருக்குமணியின்பேரழகைக் கண்குளிரக்கண்டு, இன்னாளென அறியாது, இவள் தெய்வப்பெண்ணோவென ஐயுற்றுத்தெளிந்து, மணம்புணர்ந்தனர். இ

துபற்றியன்றே நாயனாரும், இக்கனம்பொருந்திய குழையையுடையவள் இச்சோலையிலிருப்பவளாகிய ஒருதெய்வப்பெண்ணோ? அல்லாமல் ஒரு மயில்விசேடமோ? அல்லாமல் ஒருமானுடமாதரோ? என்னெஞ்சு இவளை இன்னவளென்று அணியமாட்டாமல் மயங்காநின்றது. என்று தலைமகன்கூற்றாக அருளிச்செய்தனர். எ-று. வாகு-அழகு.

இச்சரித்திரவிரிவைக் கூர்மபுராணம் கண்ணன்மணம்புணர்ந்த அத்தியாயத்தும், விஷ்ணுபுராணம் பாகவதமுதலியவற்றும் காண்க. (௧௦௬)

குறிப்பறிதல்.

அஃதாவது, தலைமகன் தலைமகள்குறிப்பை அறிதல்.

உற்றபிணி யும்மருந்துங் காசிபனோர்ந் தான்மாயை
முற்றுழிக்கண் ணோக்கின் முருகேசா—பற்றும்
இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.

(இ-ள்.) முருகேசா! அவுணராசன்பெற்ற சுரசையென்பவள் சுக்கிராசாரியர்பால் மாயவிஞ்சைகளைக்கற்றுச் சிறந்தமையின், அவரால் மாயையெனப்பெயர்பெற்று, அவர்கற்பித்தவாறே காசிபமுனிவர்பாற்சென்று, மயக்கின்றவழி, அவர் அவளதுபார்வையால் தமக்குத்துன்பமும் இன்பமும் விளைதலைக் குறிப்பாலுணர்ந்து வியந்து, அவளோடுகூடிக் களித்தனர். இதுபற்றியன்றே நாயனாரும், இவளுடைய மையுண்டகண்களிலிருக்கின்ற பார்வையானது இப்பொழுது என்மேல் இரண்டுபார்வையாயிற்று; அவற்றுள் ஒருபார்வை என்னிடத்து நோய்செய்யும்பார்வையாம்: மற்றொருபார்வையானது அந்நோய்க்கு மருந்தானபார்வையாம். என்று தலைமகன் கூற்றாக அருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைக் கந்தபுராணத்துட் காண்க. (௧௧0)

புணர்ச்சிமகிழ்தல்.

அஃதாவது, குறிப்பறிந்துபுணர்ந்த தலைமகன் அப்புணர்ச்சியை மகிழ்ந்துகூறல்.

பூரிளமை யேற்றுவெறுப் போகநனி துய்த்துவந்தான்
மூரி யயாதி முருகேசா—வோரின்
அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு.

(இ-ள்.) முருகேசா! விடபருவாவென்னும் அசுரராசன்மகள் சன்மிட்டையும் சுக்கிராசாரியர்மகள் தேவயாணியும் ஒருநாள் நீராடியபின் காற்றாற்கலப்புற்ற ஒருவர்துகிலை மற்றொருவருடுக்க நேர்ந்தபொழுது, தேவயானி சன்மிட்டையைநோக்கி, புனிதையல்லாதநீ என்றுகிலை உடுக்கலாமோஎன்ன; அவள் என்பிதாவால் உன் பிதாசீவித்தலை உணராயோவென்று அடித்து, பாழ்ங்கிணற்றில் தள்ளிச்சென்றனள். தேவயானி அங்குவந்த யயாதிராஜனாற்கரையேறி பிதாவுக்குரைக்குங்கால் விடபருவாஅணுகி, ஆசிரியர் கோபந்தணியுமாறு சன்மிட்டையை அத்தேவயாணிக்கு அடிமையாக்க; அவள் ஆயிரந்தோழியரோடு ஏவல்புரியுநாளில், முன் வியாழபகவான்புத்திரனாகிய கசன் சுக்கிராசாரியரதுமகளை அந்தணர்க்குரிமையாகாதபடி சபித்திருத்தலால், அவர் யயாதிராசனுக்கு, சன்மிட்டையைவிரும்பாவண்ணங்கற்பித்து, தன்மகளை விவாகஞ்செய்துகொடுத்தனர். அவன் அவளோடுகூடி யது துருவசு என்னும் இருபுதல்வரைப்பெற்றதன்றியும், ஒருநாள் சோலையையடைந்துழி சன்மிட்டை புத்திரதானம்வேண்டலால் இசைந்து, அவளோடு கூடி துருகு அனு பூரு என்னும் மூன்றுபுதல்வரை அளித்தனன். இதை யுணர்ந்த சுக்கிராசாரியர் என்வார்த்தையைக் கடந்தாயாதலின்

மூப்புப்பருவம் அடைவாயெனச்சபிக்க; அரசன் அவரைப்பிரார்த்தித்து, அவர்பரிகாரமாக உரைத்தவாறே புதல்வரையழைத்து, என்மூப்பை ஆயிரவருடம் ஏற்றுக்கொண்டு இளமைதந்தவனுக்கு பின்பு இளமையோடு அரசுரிமையையும் தருவேன். என்றுரைத்து, முந்தியநால்வரும் உடன்படாமையின் பூருவினால் இளமைதரப்பெற்று, மனைவியர்பால்,எல்லையில்லாத இன்பங்களை நவநவமாக அனுபவித்துக்களித்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், நூல்களாலும் நுட்பவுணர்வாலும் பொருள்களை மேலுமேலும் அறியஅறிய முன்னையஅறிவு அறியாமையாய்க் காணப்படுதல்போல, செய்யஆபரணங்களையுடைய இவளிடத்து மேலுமேலும் புணரப்புணர முன்னையகாதல் காதலல்லாமையாய்க் காணப்படுகின்றது. என்று தலைமகன்கூற்றாக அருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவை மச்சபுராணம் விஷ்ணுபுராணம் பாரதம் பாகவதத்தும், கூர்மபுராணம் இலிங்கபுராணங்களில் சந்திரவம்ச முறைத்த அத்தியாயத்தும் காண்க. (௧௧௧)

நலம்புனைந்துரைத்தல்.

அஃதாவது, தலைவன் தலைவிநலத்தைப்,புனைந்துசொல்லியது.

சந்தமிகு வாலைநலத் தைத்தவவா லன்வியந்து
முந்திமண நேர்ந்தான் முருகேசா—கந்த
முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.

(இ-ள்.) முருகேசா! எக்காலத்தும் மாறாத யௌவனமும் அழகும் ஒழுக்கமும் ஒருங்கமைந்த வாலைமுனிவரென்பவர் நருமதாநதிதீரத்தில் சிவபூசையை மேற்கொண்டிருக்குங்கால், பிரமதேவராணுகி, நீ சித்திரகேதுவென்னும் அரசனும் அவன்மனைவியாகிய சந்திரவதனியுஞ்செய்த அருந்தவத்தாற்பிறந்த வாலையென்ப

வளை விவாகஞ்செய்துகொள்க என்றுகூற; அம்முனிவர் ரிராசை மேலிட்டால், அவர்கட்டளையையுமறுத்துவிட்டு, பின்னர் அவ்வாலையை நேரேகண்டுமிமயங்கி, அவளுறுப்புக்களைத் தனித்தனி மிக்வியந்து, உடன்பட்டுமணந்து, நாற்றெட்டுப்புதல்வரைப்பெற்று, அவர்கட்குச் சிவாதி அஷ்டோத்தரசதநாமங்களைப்பேதரித்து, அவர்களோடு வாழ்ந்திருந்தனர். இதுபற்றியன்றே நாயனாரும், மூங்கில்போலும் தோள்களையுடையவட்கு, நிறம் தளிர்நிறமாயிருக்கும்: பல்லானது முத்தமாயிருக்கும்; இயற்கைவாசனையானது நல்லவாசனையாயிருக்கும்; மையுண்டகண்கள் வேல்களாயிருக்கும். என்று தலைமகன்கூற்றாக அருளிச்செய்தனர். எ று.

இச்சரித்திரவிரிவைச் சிவரகசியம் வாலன்கிராசைச்சருக்கமுதலியவற்றுட் காண்க. (கக௨)

காதற்சிறப்புரைத்தல்.

அஃதாவது, தலைமகன் தலைமகள் ஆசைமிகுதியைக்கூறல்.

தேர்ச்சியய னிந்துமதிச் சேர்ந்துழிவாழ்ந் தேமடிவின்
மூர்ச்சித்து மாய்ந்தான் முருகேசா—நேர்ச்சிமிக
வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாத
லதற்கன்ன ணீங்கு மிடத்து.

(இ-ள்.) முருகேசா! திரணவிந்துமுனிவரது தவத்தையழிக்க இந்திரனலேவப்பட்ட அரிணியென்னும் அரம்பை அம்முனிவர் சாபத்தால் விதர்ப்பதேசத்தரசன்மகளாய் இந்துமதியென்னும் பெயரோடு பிறக்க; அவளை அயனென்னுமரசன் விவாகஞ்செய்து, பிரிவின்றி, இன்பமநுபவிக்குங்கால், அந்தரமார்க்கத்திற்சென்ற நாரதமுனிவரது யாழிலிருந்து வீழ்ந்த புஷ்பமாலையால் அவளிறத்தலும், அரசன் மூர்ச்சித்துத்தெளிந்து, அவள் பிரிவாற்றாமையால்

எட்டுவுரு வருந்தியிருந்து, உயிர்துறந்து விண்ணுலகடைந்து, அங்கே அவளுடனே இன்பம் அநுபவித்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், எனக்கு, ஆராய்ந்துகொள்ளப்பட்ட ஆபரணத்தையுடையவள் புணருமிடத்து உயிர்க்கு உடம்போடுகூடிவாழ்தல்போல ஆகின்றாள்; பிரியுமிடத்து அவ்வுயிர்க்கு அவ்வுடம்பினீங்கிப்போதல்போல ஆகின்றாள். என்று தலைமகன்கூற்றாக அருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவை இரகுவம்சத்துட் காண்க. (ககரு.)

நாணுத்துறவுரைத்தல்.

அஃதாவது, ஆற்றாளுகிய தலைமகன் தனது நாணமிழத்தலைச் சொல்லுதல்.

கோளொடுநா ணீத்தகலி கைக்கயர்ந்தான் கோமகவான்
மூளுறுகா மத்தான் முருகேசா—வாளுறுமக்
காமக் கடும்புன லுய்க்குமே நாணெடு
நல்லாண்மை யென்னும் புணை.

(இ-ள்) முருகேசா! இந்திரன் கௌதமமுனிவரது பத்தினியாகிய அகலிகையின்பேரழகை நாரதமுனிவராலறிந்து, அதிகவிரகங்கொண்டு ஒருநாள், அவர் காலைக்கடன்கழித்தற்குச் சென்றசமயத்தில் அம்முனிவர்வடிவங்கொண்டுசென்று, பெண்ணே! வழியிலே ஒருவாவியில் ஆடையில்லாமல் மூழ்கிய ஒருபெண்ணைக்கண்டு விரகமதிகரித்து மீண்டேனென்றுகூறி அவளைக்கூடி, இன்பந்துய்க்குஞ்சமயத்தில், அம்முனிவராகி நிகழ்ந்ததையறிந்து, நீ ஆராயாது இவனுடன்கலந்தமையால் கல்லாகுகவென அகலிகையைச்சபித்ததன்றி, இந்திரனையும் நீ உடன்முழுதும் பெண்குறியுடையவனுகுகவெனச்சபிக்க; அவன் அவ்வாறேயாகி, நாணத்தையும், ஆற்றலையுமிழந்து அயர்ந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், யான் தன்னைக்கடத்தற்குக்கொண்ட நாணமும், நல்லாண்மையுமாகிய புணை

களைக் காமமாகிய கடியவெள்ளமானது, என்னிற்பிரித்துக் கொண்டுபோகாநின்றது. என்று தலைமகள்கூற்றாக அருளிச்செய்தனர். எ-று. குறிஅழுகிவிழச்சபித்தனரென்பது திருவானைக்காப்புராணம்.

இச்சரித்திரவிரிவை விநாயகபுராணம் இராமாயணம் காஞ்சிப்புராணபன்னிருநாமப்படலம் முதலியவற்றுட் காண்க. (ககச)

அலராறிவுறுத்தல்.

அஃதாவது, பிறர்சொல்லுகின்ற அலரை அறிவித்தல்.

மேயருக்கு மாங்கதனை வெஃகியொரு நாண்முகுந்தை
மூயபழி பூண்டாண் முருகேசா—நேயமிகக்
கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று.

(இ-ள்.) முருகேசா! கவிமுனிவரது மனைவியாகிய முகுந்தையென்பவள் தனதாச்சிரமத்திற்குவந்த அழகிற்சிறந்த உருக்குமாங்கதமன்னனைக்காதலித்து, அவனுடன்படாமையால் குட்டநோயணுகுமாறுசபித்து, உடனே அவ்வுருக்கொண்டுவந்த இந்திரனைக்கூடி இன்பநுகர்ந்து, என்றும்அகலாத பெரும்பழிபூண்டனள். இதுபற்றியன்றே நாயனாரும், தலைமகனை நான்காணப்பெற்றது ஒருநாளேயாகும்; அதனுண்டாகிய அலரானது அவ்வளவினதன்றி, சந்திரனைப் பாம்புகொண்ட அலர்போல எங்கும் பரந்தது. என்று தலைமகள்கூற்றாக அருளிச்செய்தனர். எ-று. மன்னும் உம்மையும் அசைநிலை.

இச்சரித்திரவிரிவை விநாயகபுராணத்துட் காண்க. (ககரு)

பிரிவாற்றாமை.

அஃதாவது, தலைமகன் தலைமகளைப் பிரிந்துசெல்லுநாளில் அப்பிரிவை அவள் பொறுக்கமாட்டாதவளாந்தன்மை.

அற்றதுணி யோடுதம யந்திபுன லார்ந்துநளன்
முற்றுழியுஞ் சோர்ந்தாண் முருகேசா—பற்றி

அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற்
றேறியார்க் குண்டோ தவறு.

(இ-ள்.) முருகேசா ! நளனென்னுமரசன் தமயந்தியை மணந்து வாழுநாளில் புட்கரதேயத்தரசன்பால் நாடுமுதலியயாவும் சூதிற்றோற்று, மனைவியோடு வனத்தையடைந்துழி, அங்கே அவள்விரும்பிய ஒரு அன்னத்தைப்பிடித்தற்கு எறிந்த தன்வஸ்திரத்தோடு அது பறந்துபோக; வேறில்லாமையால் மனைவிவஸ்திரத்தையே தானுமுடுத்தி, அன்றிரவுநித்திரைசெய்யும்போது, அதிற்பாதி கிழித்துக்கொண்டு அவளைவிட்டுப்பிரிய ; அவள்புலம்பிப் பிரிவாற்றாமையால் எங்குந்தேடி தாய்வீட்டையடைந்து, சாருகாசனியென்னும் தன்தாய்தேற்றவும் தேறாமல், முன்கிழிக்கப்பட்ட ஆடையையேயன்றி வேறு ஆடைஆபரணங்களையும் உணவையும்விரும்பாமல் நீரையேஅருந்தி, சோர்ந்திருந்தனள். இதுபற்றியன்றே நாயனாரும், எதிர்ப்பட்டநாளே தலையளிசெய்து உன்னை விட்டுப்பிரியேன் அஞ்சாதிரு என்றவரே, பின் பிரிவாராயின் அவர்க்கல்லாமல் அவரால் தெளிவிக்கப்பட்ட சொல்லை மெய்யென்று தெளிந்தவர்க்குக் குற்றமுளதோ. என்று தலைமகள்கூற்றாக அருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைப் பாரதம் நைடதமுதலியவற்றுட் காண்க. (ககசு)

படர்மெலிந்திரங்கல்.

அஃதாவது, பிரிவாற்றாளாகியதலைமகள் தானுறுகின்ற துன்பத்தினை எப்போதும் நினைத்தலின் அந்நினைவால் மெலிந்திரங்கல்.

ஆகமெலிந் தாள்சீதை வான்மீகி யாதரித்து
மோகமொடு நாணன் முருகேசா—வேகமிகும்

காமமு நாணு முயிர்காவாத் தூங்குமென்
னோனு வுடம்பி னகத்து.

(இ-ள்.) முருகேசா! இராமமூர்த்தி இராவணனைச்சங்கரித்துச் சீதையைமீட்டு, அயோத்தியையடைந்து வாழுநாளில், ஒற்றரைநோக்கி உலகத்தார் நமது அரசியலைக்குறித்து எவ்வாறு கூறுகின்றாரெனவினவ; ஒற்றர் இராவணனாற் கவரப்பட்ட சீதையோடு கூடி வாழ்தலொன்றுதவிர மற்றைச் செங்கோல்முதலியவற்றைச் சிறப்பாகவே கூறுகின்றாரென்றனர். அதுகேட்ட அவர் அப்பழிச்சொல்லை மாற்றிக்கொள்ளுமியித்தம் சீதையை வனத்தில்விடுக்க; அவள் வான்மீகமுனிவரால் ஆதரிக்கப்பட்டிருந்தும் இராமமூர்த்தியைச் சிந்திக்குந்தோறும் விரகமிகுதியும், வனத்தில்விட்டமையால் நாணமிகுதியும் உடையவளாய் அயர்ந்திருந்தனள். இது பற்றியன்றே நாயனாரும், காமமும், அதுசெய்தவர்க்கு அதைச்சொல்லவொட்டாத நாணமும் தம்மைப்பொறாத என்னுடம்பினிடத்து உயிர் காவடித்தண்டாக அதனிருதலையினும் தொங்குகின்றன. என்று தலைமகள்கூற்றாக அருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைக் கூர்மபுராணம் இராமன் வைகுந்தமடைந்தவத்தியாயத்தும், இராமாயணம் சீதைவனம்புகுமத்தியாயத்தும் காண்க. (கக௭)

கண்விதுப்பழிதல்.

அஃதாவது, கண்கள் தலைமகனைக்காணுதற்கு
விரைதலாலேவருந்துதல்.

ஒல்லையிற்கண் ணன்வருங்கோ லென்றயர்ந்தா ருத்தவன்
முல்லைமட மாதர் முருகேசா—புல்லனுறப் [பால்
பேணாது பெட்டா ருளர்மன்னோ மற்றவர்க்
காணா தமைவில கண்.

(இ-ள்.) முருகேசா! கிருஷ்ணமூர்த்தி கோகுலத்திலுள்ள பதினாறாயிரங் கோவியப்பெண்களோடுகூடி இன்பநுகருநாளில் பிரிந்துசென்று, கஞ்சனைவதைத்து, மதுரையையடைந்தபின், அவர்களைத்தேற்றுதற்கு உத்தவனென்னும் தோழனைவிடுக்க; அவர்கள் அவனைக்கண்டமாத்திரத்தே கண்ணபிரான் விரைவில்வந்து கலப்பரோவென்று காணுதல்வேட்கையை வெளிப்படுத்திக்கலங்கினர். இதுபற்றியன்றே நாயனாரும், மனத்தால்விரும்பாதிருந்து சொன்மாத்திரத்தால் விரும்பியவர் இங்கேயிருக்கின்றார்; அவ்விருத்தலாலே பயன்யாது? கண்கள் அவரைக்காணாமல் பொறுக்கின்றில. என்று தலைமகள்கூற்றாக அருளிச்செய்தனர். எ-று. இப்பெண்கள் முல்லைநிலத்தவராதலால் முல்லைமடமாதர் எனப்பட்டனர்.

இச்சரித்திரவிரிவைப் பாகவதத்திற் காண்க. (ககஅ)

பசப்புறுபருவரல்.

அஃதாவது, பிரிவாற்றாமையால்வரும் நிறவேறுபாட்டால் உண்டாகிய வருத்தம்.

சீவகனீங் கப்பசந்து சேழுழந்தெய்த் தாள்பதுமை
மூவலிலா தோங்கு முருகேசா—வோவிலாச்
சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையுந் தந்து.

(இ-ள்.) முருகேசா! புல்லவதேயத்தையாளும் உலோகமாபாலன்புத்திரியாகிய பதுமையென்பவள் சீவகனைமணந்து, இன்பமனுபவித்துவாழுநாளில் அவன் தேயவளங்களைக்காணுதற்குப் பிரிய; அவள் ஆற்றாதவளாய்க்கலங்கிப்புலம்பி, காணுமளவும் அழகையிழந்து சரீரமுழுதும் பசந்துமெலிந்தனள். இதுபற்றியன்றே நாயனாரும்,பிரிகின்றபொழுதே அவ்விரண்டிற்கும் கைம்மாறாக இ

க்காமநோயையும் பசலையையும் எனக்குத்தந்து, என்மேனியழகையும் நாணத்தையும் அவர்கொண்டுபோயினர். என்று தலைமகள் கூற்றாக அருளிச்செய்தனர். எ-று. சேடு-அழகு. மூவல்-அழிதல்.

இச்சரித்திரவிரிவைச் சீவகசிந்தாமணியுட் காண்க. (௧௧௯)

தனிப்படர்மிகுதி.

அஃதாவது, தனியாகிய துன்ப மிகுதி.

பற்றி னுருப்பசியைப் பார்த்தன்வெஃகான் சிற்சபையின்
முற்றம்ப மேவு முருகேசா—வுற்ற
ஒருதலையா வின்னாது காமங்காப் போல
விருதலை யானு மினிது.

(இ-ள்.) முருகேசா! விண்ணுலகத்திலே இந்திரனால் உபசரிக்கப்பட்டிருந்த அருச்சுனன்பால் உருப்பசியணுகித் தன்காதலையறிவித்தவழி, அவன் விரும்பாதமறுக்க; அவள் அவ்விரகவேதனை பொறாது அவனை அலியாகும்படிச்சபித்து, அகன்றனள். இதுபற்றியன்றே நாயனாரும், மகளிர் ஆடவர் எனப்படுகின்ற இரண்டிடங்கட்கும்உரிய ஆசையானது ஓரிடத்திலுண்டாயின் துன்பஞ்செய்வதாம்; காவடிப்பாரம்போல இரண்டிடங்களினும் ஒத்திருக்குமாயின் அது இன்பஞ்செய்வதாம். என்று தலைமகள்கூற்றாக அருளிச்செய்தனர். எ-று. சிற்சபையின்முற்றம்பமேவுமுருகேசா என்றது இந்நூல் தில்லையிலே சிற்சபைக்குமுன்னுள்ளதம்பத்தில்வீற்றிருக்கும் தண்டபாணியைச்சுட்டி இயற்றியதென்பதைக்குறிப்பித்தபடி.

இச்சரித்திரவிரிவைப் பாரதம் அருச்சுனன்றவநிலைச்சருக்கத்துட் காண்க. (௧௨0)

நினைந்தவர்புலம்பல்.

அஃதாவது, தலைமகள் தலைமகனைநினைந்து வருந்துதல்.

சித்தமுள வல்லமன்சிந் திப்பனோ வென்றுலைந்தாண்
மூத்தநகை மாயை முருகேசா—மத்தமுறும்

யாமு முளேங்கொ லவர்நெஞ்சத் தெந்நெஞ்சத்
தோஒ வுளரே யவர்.

(இ-ள்) முருகேசா! அல்லமதேவர்பால் காதல்பூண்ட மாயையென்பவள் மதமானியென்பவளைத் தூதுவிடுத்தபின் என்னால் விரும்பப்பட்ட அல்லமர் என்னைநினைப்பரோ? அன்றி, நினையாரோ? அறிந்திலேன்! என அவள்வரவுநோக்கி அயர்ந்திருந்து, காதலித்தமையைக்கேட்டுக் களித்தனள். இதுபற்றியன்றே நாயனாரும்,எமது நெஞ்சத்தில் அவர் எப்பொழுதும் உள்ளவராயே இருக்கின்றார்; அப்படியே அவரது நெஞ்சிலும் நாமும் உள்ளேமாகின்றேமோ? ஆகேமோ? என்று தலைமகள்கூற்றாக அருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைப் பிரபுலிங்கலீலை பிரபுதேவர்வந்தகதியுட் காண்க. (கஉக)

கனவுநிலையுரைத்தல்.

அஃதாவது, தலைமகள்கண்ட கனவினது நிலைமையைச் சொல்லுதல்.

காதலனை நாளுங் கனவனைந்தே சாரதைதான்
மூதுவகை யுற்றாண் முருகேசா — நீதின்,
நனவென வொன்றில்லை யாயிற் கனவினாற்
காதலர் நீங்கலர் மன்.

(இ-ள்.) முருகேசா! ஆனந்ததேசாதிபதியின் தோழனாகிய பதுமநாபன் என்னும் அந்தணன் மூப்படைந்தும், வேதவிரதனென்னும் பிராமணனது புதல்வியாகிய சாரதையென்பவளை மணமுடித்து, அத்தினமே பாம்புகடித்துஇறக்க; அவள் பிதாவீட்டிலிருக்குநாளில், அவளாலுபசரிக்கப்பட்ட நைத்திருமுனிவரதுசீடர், நேத்திரமில்லாமையால் உற்றுநோக்காது, பெண்ணே! நீ நெடுங்காலம் உன்கணவனோடு இன்பம் அநுபவித்துப் புதல்வனைப்பெற்று

வாழ்கவென்று ஆசீர்வதித்து, பின்பு கைம்மையென்பதுதெரிந்து, தாம்கொடுத்தவரம் பொய்யாவண்ணம், அவளைக்கொண்டு ஒருவருடம் உமாமகேசுரவிரதமுடித்தனர். அவ்விரதமுடிவில் உமாதேவியார் காக்ஷிதந்து, அவளைநோக்கி, இறந்தவன் இவளுக்கு உரியவனல்லே; முற்பிறப்பிலுள்ளகணவன் பாண்டிநாட்டிலே பிராமணகுலத்திற்பிறந்து, ஒருகன்னிகையைவிவாகஞ்செய்து வாழ்கின்றான்; அவனிடம் இவள் நனவிலனுபவிக்கும் இன்பத்தினும் மிக்கவின்பத்தைக் கனவிலனுபவித்துப் புதல்வனைப்பெற்று அவனோடு நமதுபதவியை அடைகவென அநுக்கிரகித்து நீங்க; அங்ஙனமே கனவில் அவனோடு பெரிதும் இன்பம் அனுபவித்துப் புதல்வனைப் பெற்று, கோகர்ணத்தில் சிவராத்திரிகாலத்தில் கணவனை நனவிலும்கண்டு, தன்விரதபலத்திற் பாதியளித்து, அவனது நகரத்தையடைந்து, அங்கும் கனவிலின்பமேயனுபவித்து வாழ்ந்தனள். இதுபற்றியன்றே நாயனாரும், நனவென்றுசொல்லப்பட்ட ஒருபாவி இல்லாவிட்டால் கனவினிடத்துவந்து கூடியகணவர் என்னைப் பிரியார். என்று தலைமகள்கூற்றாக அருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைப் பிரமோத்தரகாண்டத்துட் காண்க.

பொழுதுகண்டிரங்கல்.

அஃதாவது, மாலைப்பொழுதுவந்தவிடத்து அதனைக்கண்டு தலைமகள் இரங்குதல்.

அந்திப் பொழுதின்மணிச் சூடணிவாலயர்ந்தாள்
முந்துமணி வல்லி முருகேசா — சிந்தைசெயிற்
காதல ரில்வழி மாலை கொலைக்களத்
தேதிலர் போல வரும்.

(இ-ள்.) முருகேசா! வசுபூதியென்னும் காந்தருவவேந்தன் மகளாகிய இரத்தினவல்லியென்பவள் சந்திரலேகை, அநங்கலே

லை, சித்திரலேலைகயென்னும் தோழியரோடு யாழ்முதலியபயின்று, பூருவசன்மவாசனையால், காசியில் இரத்தினேசுரரைவழிபட்டுவர; அக்கடவுள் திருவுள்மகிழ்ந்து அவளைநோக்கி, நீ பாதலத்துள்ள சங்கசூடன்புதல்வனுகிய இரத்தினசூடனைக் கணவனுகப்பெறுவை என்றருளினர். கேட்டதுமுதல் அவனையேசிந்தித்திருத்தலின், மாலைக்காலத்தில் விரகம் அதிகரித்து மகிழ்நனில்லாமையால்மயங்கி, வருந்திமணந்தனள். இதுபற்றியன்றே நாயனாரும், மாலைக்காலமானது தலைவரில்லாத இப்பொழுது கொலைசெய்யுமிடத்திலே கொலைஞர்போல உயிரைக்கவர்தற்கு வருகின்றது. என்று தலைமகள்கூற்றாக அருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைக் காசிகாண்டம் இரத்தினேசன் கதையுரைத்தஅத்தியாயத்துட் காண்க. (கஉரு)

உறுப்புநலனழிதல்.

அஃதாவது, தலைமகளது அவயவங்கள் தம்மழகு அழிதல்.

துன்புமுற்றார் தாருவனத் தோகையரெம் மானைவெஃகி
முன்புவளை தோற்றே முருகேசா—வன்பிற்
பணைநீங்கிப் பைந்தொடிசோருந் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்.

(இ-ள்.) முருகேசா! முற்காலத்திலே தாருகாவனத்து முனிவர்கள் கர்த்தாவொருவரில்லையென்னும் மீமாம்சமதக்கொள்கையுடையவராய் யாவரையுங்கெடுக்கும் நிலைமையையும், இவர் பத்தினிமார் கற்பில்வழுவாதிருத்தலின் இம்முனிவரை ஒருவரும் வெல்லமுடியாமையையும் சிவபெருமான்சிந்தித்து, உலகத்தார் நல்வழிப்படும்வண்ணம், திருமாலை மோகினியுருவாய்ச்சென்று அம்முனிவரைமயக்கவிடுத்து, தாம் பேரழகுவாய்ந்த பிக்ஷாடனத் திருவுருவங்கொண்டு, அம்முனிவர்மனைவியரிருக்கும் இடத்தையடை

ய; அவர்கள் கண்டவுடன் காமமதிகரித்து, பிக்ஷையிடுவார்போலடைந்து, தங்கள் உறுப்புநலனழிந்து, வளைமுதலியவற்றையிழந்து, துயருழந்தனர். இதுபற்றியன்றே நாயனாரும், துணைவர் நீங்குதலால் செயற்கையழகுமாத்திரமல்லாமல் பழைய இயற்கையழகுமிழந்த இத்தோள்கள், அவ்வளவிலமையாது தம்பெருமையிழந்து, பசும்பொன்வளைகள் கழலுகின்றன. என்று தலைமகள்கூற்றாக அருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைக் கந்தபுராணம் ததீசியுத்தரப்படலத்தும், காஞ்சிப்புராணம் அந்தகேசப்படலத்தும், கூர்மபுராணம் இலிங்கபுராணம் கோயிற்புராணமுதலியவற்றும் காண்க. (கஉச)

நெஞ்சோடுகிளத்தல்.

அஃதாவது, பிரிவின்பொறாமைமேற்படத் தனக்குஒரு பற்றுக்கோடுகாணாத தலைமகள் தன்னெஞ்சொடு சொல்லுதல்.

மெய்த்ததவ வீடுமனை வேண்டியலைந் தேவெறுத்தாண்
மொய்த்தகுழ லம்பை முருகேசா—வுய்த்துணரிற்
காத லவரில ராகநீ நோவது
பேதைமை வாழியென் னெஞ்சு.

(இ-ள்.) முருகேசா! காசிதேசத்தரசன்மகளாகிய அம்பையென்பவள் விரதமேற்கொண்டவீஷ்மரை இச்சித்தடைந்து, தான்வேண்டியும், அவராசிரியராகிய பரசுராமராற்சொல்லுவித்தும், உடன்படாதிருந்தமையின் அவள் விரகத்தால் வருந்தி, வெறுத்தகன்றனள். இதுபற்றியன்றே நாயனாரும், எனதுநெஞ்சே! வாழ்வாயாக; அத்தலைவர் நம்மேல் ஆசையிலராகவும் நீ காதலித்து வருந்துதற்குக்காரணம் உன் அறியாமையேயாம்; வேறொன்றில்லை. என்று தலைமகள்கூற்றாக அருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைப் பாரதம் சந்தனுச்சருக்கத்துட்காண்க.

நிறையழிதல்.

அஃதாவது, தலைமகள் மனதிலே அடக்கப்படுமவைகளை ஆசை மிகுதியால், அடக்கமாட்டாமல் வெளிப்படுத்தல்.

போகமுவர்த் தேதவன்விண் போதல்கண்டுங் கௌசிகி
மோகமிகச்சென்றுண் முருகேசா—வாகையினற் [பின்
செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோ
யுற்றா ரறிவதொன் றன்று.

(இ-ள்.) முருகேசா! காதிமன்னன் புதல்வியாகிய கௌசிகி யென்பவள் பிருகுமுனிவர்புதல்வராகிய இரிசிகரென்பவரைமணந்து, இன்பமநுபவிக்குநாளில், அவர் அறம்பொருளின்பமுற்றி,பிரமபதமடைய விரும்பித் தன்பாற்காதலற்றுத் துறந்துசெல்வதை யுணர்ந்தும், ஆற்றாது பின்னர்த்தொடர்ந்து, அவர் சபித்தபடியே கௌசிகிநதியாயினள். இதுபற்றியன்றே நாயனாரும், தம்மை நீங்கிப்போனவர்பின்னே செல்லாது தாமும் நீங்கிநிற்கிற நிறைவுடைமையானது, காமநோயடைந்தவரால் அறியப்படுவதொன்று அன்று. என்று தலைமகள்கூற்றாக அருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவை இராமாயணம் வேள்விப்படலத்திற் காண்க. (கஉசு)

அவர்வயின்விதும்பல்.

அஃதாவது, தலைமகனும் தலைமகளும் ஆசைமிகுதியால் ஒருவரையொருவர் காணுதற்கு விரைதல்.

காதலனெந் நாள்வருங்கொ லென்றுதத்தை கவ்வைடிக்காண்
மூதுணர்வாற் றேர்ந்தும் முருகேசா—நீதின்
ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு.

(இ-ள்.) முருகேசா! (வித்தியாதரமன்னவனாகிய கலுழவேகன் தன்மகளாகிய காந்தருவதத்தைக்கு இராசமாபுரத்திலே மணநிகழுமென்பதைச் சோதிடராலறிந்திருக்கும்போது, அந்நகரத்துவணிகனாகிய ஸ்ரீதத்தன் ஒருதீவிற்சென்று பெரும்பொருளீட்டிக் கப்பலேறிவருவதையுணர்ந்து, இசையில்வென்றோனுக்கு என் மகளை மணஞ்செய்விப்பாயென்று கூறி, வேண்டிய பொருளோடு மகளைக்கூட்டிவிடுத்தனன். அவன் தன்னகரடைந்து, கட்டியங்காரமன்னவனது அநுமதிபெற்று, பலமன்னரையழைப்பித்தும், அவரெல்லாம் தோற்றமையால், சீவகன் அவளை இசையில்வென்று, தன்னோடெதிர்த்த பலவரசர்களையுமழித்து, மணமுடித்து வாழுநாளில், பிரிவுநேர்ந்து ஏமமாபுரத்தையடைந்து, தடமித்தனென்னும்அரசனது மகளாகிய கனகமாலையைமணந்திருக்க; காந்தருவதத்தை அவனிருக்குமிடமும் வருங்காலமும் பிறவும் ஞானத்தாலறிந்திருந்தும் வேட்கைமிகுதியால் காணுதலில்விரைந்து, என்று வருவாரோஎன நாளையெண்ணியெண்ணி நைந்தனள். இதுபுற்றியன்றே நாயனாரும், தூரதேசத்திற்சென்ற தங்காதலர் திரும்பிவரக்குறித்த நாளை உட்கொண்டு, அதுவருமளவும் உயிரைத்தாங்கி வருந்து மகளிர்க்கு ஒருநாளானது, பலநாள்போல நெடிதாகக்காட்டும். என்று தலைமகள்கூற்றாக அருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைச் சீவகசிந்தாமணி கனகமாலையாரிலம்பகத்துட் காண்க. (கஉஎ)

குறிப்பறிவுறுத்தல்.

அஃதாவது, ஒருவர்குறிப்பை ஒருவர்க்கு அறிவுறுத்தல்.

தந்தைக் குணர்த்தித் தவன்குறிப்பைக் காந்திமதி
முந்தியுடன் சென்றாண் முருகேசா—வந்தில்

பெரிதாற்றிப் பெட்பக் கலந்த வரிதாற்றி
யன்பின்மை சூழ்வ துடைத்து.

(இ-ள்.) முருகேசா! சூரவாதித்த சோழன் திரிசிராமலையி லே சிவதீர்த்தத்தில் நாககன்னிகைகள் எழுவர் ஸ்நானஞ்செய்யும் பொழுது, கரையிலிருந்த ஆடைகளைக்கவர்ந்தமையால் தான்மடி யுமாறு அவர்கள்சபித்தபடி பாம்புகளாற்சிந்தப்பட்ட விஷத்தின் வேகத்தைக் கருடமந்திரத்தால்தடுத்து,ஆடைகளைத்தந்து, அவர் களைநோக்கி, உம்மிலேஒருவரைக் கூடுதற்பொருட்டே இவ்வாறு புரிந்தேன் என்றுரைக்க; அவர்கள் மாதாபிதாக்களுடைய உட ன்பாடுவேண்டுமெனக் கூறிவிட்டு, சிவபெருமானைப்பூசித்துச்சென் றனர். சோழனும் உடன்சென்று, ஆதிசேடனைவணங்கி, அவனுனு பசரிக்கப் பெற்று, அவன்மகளாகிய காந்திமதியை மணம்புணர்ந் து, கூடிக்களித்துவாழுநாள், பெண்ணே! என்மாலையிலுள்ள இந் தவண்டு இன்னொருகாலம் முன்னிருந்த நந்தனவனத்தில் அணையு மோஎனவினவ; அவ்வார்த்தையால் அவள் அவனதுபிரிவுக்குறிப் பையுணர்ந்து மனஞ்சோர்ந்து, தந்தைக்குணர்த்தி அநுமதிபெற் று, அச்சோழனோடு உறையூரையடைந்துவாழ்ந்திருந்தனள். இது பற்றியன்றே நாயனாரும், தலைவர்வந்து தம்பிரிவினாலாகிய துன்பத் தை மிகவும்ஆற்றி நாம்மகிழும்வண்ணம் கூடுகின்றபுணர்ச்சியா னது, பிரிவுக்குறிப்பினாற் செய்கின்றதாதலால் பின்னும் அப்பிரியுந் துன்பத்தை அரிதாகப்பொறுத்திருந்து அவரது அன்பில்லாமை யை நினையுந்தன்மையையுடையதாம் என்று தலைமகள்கூற்றாக அருளிச்செய்தனர். எ-று. எனவே, பிரிவின்றி உடன்கூடிவாழ்த லே தகுதியென்பதுகருத்து. அந்தில்-அசை.

இச்சரித்திரவிரிவைச் செவ்வந்திப்புராணம் சூரவாதித்த சரு க்கத்துட் காண்க. (கஉஅ)

புணர்ச்சிவிதும்பல்.

அஃதாவது, தலைமகனும் தலைமகளும் புணர்ச்சிக்கண்ணே விரைதல்.

செற்ற மிகுபரவை வன்றொண்டர் சென்றவழி
முற்றவறைக் காணாண் முருகேசா—வுற்றவரைக்
காணுங்காற் காணேன் றவறாய காணாக்காற்
காணேன் றவறல் லவை.

(இ-ள்.) முருகேசா ! சிவபெருமானே தூதாகவெழுந்தருளி உணர்த்தியவழியும் திருவொற்றியூரையடைந்து சங்கிலியால் தொடக்குண்டவராகிய வன்றொண்டர் ஈண்டடைதற்கு உடன்படேனெனமறுத்த பரவைநாச்சியார், பின்னர்ச் சிவபெருமானருளியவாறே அவர்வர்துழி, முன் அவரிடத்திற்சிந்தித்த குற்றங்களைக் காணாராய்க் கலந்தொழுகினர். இதுபற்றியன்றே நாயனாரும், நான் கணவனைக்காணும்பொழுது அவன் குற்றங்களானவைகளைக் காண்கின்றிலேன் ; அவனைக் காணாதபொழுது குற்றங்களல்லாதவைகளைக் காண்கின்றிலேன். என்று தலைமகள் கூற்றாக அருளிச்செய்தனர். எ-று. முற்றவறு-முன்னுள்ளதவறு.

இச்சரித்திரவிரிவைப் பெரியபுராணத்துட் காண்க. (கஉகூ)

நெஞ்சொடுபுலத்தல்.

அஃதாவது, புணர்ச்சிவிதும்புகின்ற நெஞ்சுடனே தலைமகள்புலத்தல்.

மேவாக் கணவனைமுன் வெஃகி நளாயனிதான்
மூவாத்துன் புற்றாண் முருகேசா—வோவாமற்
கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல்.

(இ-ள்.) முருகேசா! மௌற்கல்லியமுனிவர் நளாயனியை மணந்து, அவளதுகற்பையும் அன்பையும் சோதித்தற்கு,யாவரும் அருவருக்கும்படியான குட்டநோயோடு மூப்புடையவர்போல நடித்தும், அவள் வேறுபடாமல் தொண்டுசெய்திருத்தலைநோக்கி, உளங்கனிந்து, அவளிஷ்டப்படியே பற்பலவுருக்கொண்டு, இன்பங்களை நுகர்வித்து, தாம் தவத்திற்செல்ல; அவள், பிரிவாற்ருது, பல்வாறுநினைந்து நினைந்து வருந்தினள். இதுபற்றியன்றே நாயனரும், நெஞ்சே! நீ என்னிடத்திலில்லாமல் விரும்பியபடியே அவரிடத்துச்செல்லுதற்குக்காரணம் கெட்டவர்க்கு நட்புற்றவர் உலகத்தில்லையென்கின்ற நினைவோ? உன்னியல்போ? சொல்லுவாயாக. என்று தலைமகள்கூற்ருக அருளிச்செய்தனர். எ - று.

இச்சரித்திரவிரிவைப் பாரதம் திரௌபதைமாலையிட்ட சருக்கத்துட் காண்க. (கௗ௰)

புலவி.

அஃதாவது, தலைமகனும் தலைமகளும் ஒருவரோடொருவர் புலத்தல்.

நீளையின்பாற் செல்கௌமா னெஞ்சயர் மாவூடி
மூன்ருர்கோட் பட்டாண் முருகேசா—கோளகலும்
உப்பமைந் தற்ருற் புலவி யதுசிறிது
மிக்கற்ரு னீள விடல்.

(இ-ள்.) முருகேசா! திருமால் தமக்குரிய சிதேவி, பூதேவி, நீளாதேவி என்னும் மனைவியர்மூவருள்ளே நீளையின்பால் அதிககாதலையுடையராயிருப்பதை மற்றிருவருங்கண்டுபொருமைகொண்டு, இருக்குநாளிலே ஒருதினம், அவர் விரகமதிகரித்துச் சிதேவியைத்தழுவும்போது, அவள் இதனை நீளைகாண்பாளாயின் மிகப்பிணங்

குவளென்று கூறி, தணித்தும் தணியாமல் ஊடுதலால், அவர்சின ந்து, நீ மானுடமாதாருகவென்னச்சபிக்க; அங்ஙனமே பிருகுமுனிவ ர்துபுதல்வியாயுதித்துப் பின்னர் மணந்தனள். இதுபற்றியன்றே நாயனாரும், பிணக்கு, புணர்ச்சியின்பஞ்செய்தற்கு வேண்டுமளவி னதாகுதல், உப்பானது உணவுகளை இன்சுவையாக்குதற்குவேண் டுமளவினது ஆகுதல்போலும்; இனி அதனை அவ்வளவிற் சிறிது மிகவிடுதல் அவ்வுப்பளவு சிறிது மிகுந்ததுபோலும். என்று தலை கள்கூற்றாக அருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவை மாயூரப்புராணம் பார்க்கவிபூசனைப்பட லத்துட் காண்க. (கருக)

புலவிநுணுக்கம்.

அஃதாவது, தலைமகனும் தலைமகளும் கூடியிருந்தவிடத்து, பிண குதற்குக்காரணம் இல்லாதிருக்கவும் நுட்பமாகிய ஒருகா ரணமிருப்பதாகவுட்கொண்டு தலைமகள் பிணங்குதல்.

இன்பி னெழுமையுநீங் கேனென்னக் காந்திமதி
முன்பு புலந்தாண் முருகேசா—வன்பதனால்
இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனுக்
கண்ணிறை நீர்கொண் டனள்.

(இ-ள்.) முருகேசா! சூரவாதித்தனென்னுஞ்சோழன் க திமதியை மணந்து, இன்பந்துய்க்கும்போது அவ்வின்பமிகுதிய அவள்கருத்துணராது, பெண்ணே! நின்னை எழுமையும் நீங் னென்ன; அவன் பின்பிரிவேனென்றதாக அவ்வார்த்தையில் அ ள் நுட்பமாகப்பொருள்கொண்டு, ஊடலின்மிகுந்து பின்னர்த்த ந்தனள். இதுபற்றியன்றே நாயனாரும், காதல்மிகுதியால், இப்

..பிலே பிரியேனென்றுசொன்னேனாக ; அதனால் என்னை மறுபி ..ப்லே பிரிவேனென்கிற கருத்துடையேனாகநினைத்து, அவள் க ..ணிறைந்தனை..க்கொண்டாள். என்று தலைமகன்கூற்றாக அரு ..ச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைச் செவ்வந்திப்புராணம் சூரவாதித்தசரு ..த்துட் காண்க. (கஈஉ)

ஊடலுவகை.

அஃதாவது, ஊடலால் தமக்குக் கூடலின்பஞ்சிறந்தவிடத்து அச்சிறப்பிற்கேதுவாகிய அவ்வூடலைத் தலைமகள் மகிழ்தலும் தலைமகன் மகிழ்தலுமாம்.

..தல்குண மாலைபிணக் கைத்தவிர்த்துச் சீவகன்றன்
..மாதமிக்காள் கூடி முருகேசா—வாதலினால்
..டுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
..கூடி முயங்கப் பெறின்.

(இ-ள்.) முருகேசா! சீவகன் ஒருசோலையிலிருக்கும்போது, ..ன்னகரிலுள்ளகுணமாலையும் சுரமஞ்சரியும் தம்முள்மாறுபட்ட ..ட்டிய பொற்சுண்ணத்திலே குணமாலைசுண்ணமே சிறந்ததென் .. உண்மைகூறவும், சீவகன் குணமாலையைக்காதலித்துக் கூறிய ..ாகச் சுரமஞ்சரிநினைத்து, அவனைக்காதலித்ததுபோலவே என் ..ாயும் காதலிக்கச்செய்வேனென்று தவத்திற்சென்றனள். அத் ..ருணத்து சீவகன் தன்பாற்காதல்கொண்ட குணமாலையைமண ..த்து சுகிக்கும்போது, பெண்ணே! சுரமஞ்சரி என்பால் விரோ ..தங்கொண்டுசென்றது, நின்னைமணத்தற்கு ஏதுவாயிற்று: எனக் ..கூறலும் ; குணமாலை அத்தருணத்தில் அவனைச்சிந்தித்தமையைக் ..றித்து ஊட; சீவகன் பல நயமொழிகளாற்றணித்துக்கூடி, உவ

கைமிகுந்தனன். இதுபற்றியன்றே நாயனாரும், காமவனுபவத்திற்கு இன்பமாவது, அதனையனுபவித்தற்குரியோர் ஆராமைபற்றித் தம்முள் ஊடுதலாம்; அவ்வூடுதலுக்கின்பமாவது அதனை அளவறிந்துநீங்கித் தம்முள்கூடிப் புணர்தலாம். என்று தலைமகன்கூற்றாக அருளிச்செய்தனர். எ-று.

இச்சரித்திரவிரிவைச் சீவகசிந்தாமணியுட் காண்க. (கரு௫)

காமத்துப்பால் முற்றிற்று.

முருகேசர்முதுநெறிவெண்பா முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

திருவள்ளுவநாயனார் திருவடிவாழ்க.